கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு X

**Kerala Reader - Tamil (AT)**

**Standard X**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

***Prepared by*** :

State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2016
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**அன்புக் குழந்தைகளே!**

மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக மட்டுமே பலரும் கருதுகின்றனர். ஆனால் மொழிதான் ஒரு மனிதனை மனிதனாக்குகின்றது என்பது உண்மை. கலை, கலாச்சாரம், நாகரிகம் போன்றவற்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மொழியே அடிப்படையாக அமைகின்றது. மனிதனைப் பிற உயிரினங்களிட மிருந்து வேறுபடுத்துவதும் மொழிதான். மொழி ஒன்றே ஆயினும் அதைப் பயன்படுத்துவோரின் கற்பனைத் திறனுக்கும் கருத்தாற்றலுக் கும் ஏற்ப அம்மொழியானது அழகு பெறும்; ஆற்றல் அடையும். மொழியைக் கையாள்வதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. மொழிநடையை வைத்தே ஒருவரை அடையாளம் கண்டுவிடலாம் என்று கூறுவது இதனால் தானே. மொழிப் பாடங்களைக் கற்பதனால் முக்கியமாக மூன்று நிலைகளிலான அடைவுகளை மாணவர்கள் பெறவேண்டும். அவையாவன கருத்தறிதல், வேறுபட்ட மொழி வடிவங்களை அறிதல், மொழித்திறன்களைப் பெறுதல் என்பன. இவ்வடைவுகளைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் எதையும் படித்தால் மட்டும் போதாது, படித்தவை தொடர்பான பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டும். இதனைக் கருத்தில்கொண்டே அலகுச் செயல்பாடு கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாடங்களைப் படித்தும் செயல்பாடுகளைச் செய்தும் பயன்பெறுவீர்களாக.

வாழ்த்துகளுடன்,

**முனைவர் பி. ஏ. பாத்திமா,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.

# Textbook Development Committee

## Tamil - X (Part I)

***Members***

Bindu, V., HSA, KKMHSS, Vandithavalam, Palakkad.

Buvaneswary, K., HSA, GHSS, Maraiur, Idukki.

Chidambaram, V., HM(Rtd.), GHS, Kozhinchampara, Palakkad.

Dr. Jayalakshmi. S., HSA, GHSS, Devikulam, Idukki.

Dr. Jayakrishnan, P., Asst.Prof., Dept.of Tamil. University of Kerala.

Kamaludeen, S., HSA, GHSS, Muthalamada, Palakkad.

Dr. Manickaraj, K., Asst.Prof., Dept.of Tamil. University College, TVM.

Dr. Santhoshkumar.G, BRC Trainer, URC North, TVM.

Singh, M.B., HSA, (Rtd.), GovtTamil HS & VHSE, Chalai, TVM.

***Experts***

Dr. Doctor Nazeemdheen, P., Prof., (Rtd.), Dept.of Tamil. University of Kerala.

Dr. Kumarasamy, S., Prof., (Rtd.), Vivekananda College. Kanyakumari.

Dr. Karthikeyan, A., Prof., (Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Nainar, M., Reader., (Rtd.), University College, TVM.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), IASE, Chennai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artist***

Nandhakumar, Artist, Palakkad.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# பொருளடக்கம்


பக்கம்

1. அந்திமழை ........................................ 7 - 26
   - புலனின்பம்........................................ 8
   - பூமித்தாய்........................................ 14
   - காலச்சூழல்........................................ 20

2. விழுதுகள் ........................................ 27 - 44
   - மூத்தமொழி........................................ 28
   - யான் வேண்டேன்........................................ 31
   - களிநடம் புரிவாய்........................................ 36

3. ஆலமரம் ........................................ 45 - 64
   - களங்கமில்லா விளக்கம்........................................ 46
   - சுவடுகள்........................................ 52
   - மைல் கற்கள்........................................ 57

4. சுமைதாங்கி ........................................ 65 - 88
   - ஈர நெஞ்சம்........................................ 66
   - நேசக் கரங்கள்........................................ 72
   - இலக்கியத்தூளி........................................ 87

5. இளைய வயல் ........................................ 89 - 111
   - பருவகாலப் பயிர்கள்........................................ 90
   - நாரையும் நண்டும்........................................ 94
   - உழவே தலை........................................ 106

சொல்லகராதி ........................................ 112

அலகு

# 1


# அந்திமழை

மனிதனும் இயற்கைக்கு உட்பட்டவன்தான். ஆனாலும் ஆறாவது அறிவு பெற்ற மனிதன் எப்போதும் தன்னை இயற்கையிலிருந்து மாறுபட்டவனாகவே கருதுகின்றான். இயற்கை இல்லையேல் மனித வாழ்க்கை இல்லை என்பது உண்மை. இருப்பினும் இயற்கை தரும் இன்பங்களை மட்டுமே மனிதன் பெரிதும் விரும்புகின்றான். இயற்கை ஐம்புலன்களுக்கும் இன்பம் தருவது. இயற்கை பல்வேறு செல்வங்களின் கருவூலம் என்பதையும் நாம் அறிவோம். வளம் மிக்க இயற்கையே வாழ்வின் ஆதாரம். இன்று இயற்கை பல்வேறு சுரண்டலுக்கு ஆளாகியுள்ளது. ஒரு சிறு புல் முதல் பெரிய மலை வரை இயற்கையின் ஒவ்வொரு கூறும் எக்காலமும் நிலைபெறவேண்டும் போன்ற கருத்துகளை மாணவர்களின் மனங்களில் பதிய வைக்கும் நோக்கில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- ❖ இயற்கை அழகை உணர்ந்து அதை வருணித்து வருணனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- ❖ இயற்கைப் பாதுகாவலர் ஒருவருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுகிறார்கள்.
- ❖ 'மனிதச் செயல்பாடுகளும் இயற்கைப் பாதிப்பும்' எனும் கருத்தைத் தலையங்கமாக எழுதுகிறார்கள்.
- ❖ இயற்கைச் சுரண்டலினால் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அறிந்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- ❖ புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய செய்திகளைச் செய்தித் துணுக்குகளாக எழுதுகிறார்கள்.
- ❖ இயற்கை தொடர்பான கவிதைகள் படைக்கிறார்கள்.
- ❖ இயற்கையை இரசித்துப் பயணக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- ❖ இயற்கையைப் பாதுகாக்கவேண்டிய வழிமுறைகளைக் கண்டறிந்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- ❖ இயற்கைச் சுரண்டலுக்கு எதிராகச் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள்.

# புலனின்பம்



## இயற்கை ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சி தருவது

பண்டைக்கால மக்கள் இயற்கையோடு மிக நெருங்கிய ஒரு வாழ்க்கையை மேற்கொண்டனர் என்பதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன சங்கப் பாடல்கள். ஐவகை நிலங்களுக்கும் பொருத்தமான ஏராளமான வருணனைகள் சங்கப் பாடல்களில் இடம்பெறுகின்றன. இவ்வருணனைகள் யாவும் இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் நுணுகிப்பார்த்ததன் வெளிப்பாடுகளாகும். கண்ணுக்கு இன்பம் தரும் இயற்கைக் காட்சிகள் மட்டுமன்றி, மெய், வாய், மூக்கு, செவி ஆகிய பிற புலன்களுக்கு இன்பம் பயக்கும் இயற்கை வருணனைகளையும் நம் புலவர் பெருமக்கள் சுவைபடப் பாடியுள்ளனர். இந்நிலையில் பத்துப்பாட்டில் சில பாட்டுகளில் இடம்பெறும் ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் சில பகுதிகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

### மெய்

வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங் கோற் கோவலர்
ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி,
புலம் பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,
மெய்க் கொள் பெரும் பனி நலிய, பலருடன்
கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க

நெடுநல்வாடை 1 – 8
நக்கீரர்

### வாய்



மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலின், பல உடன்
கணம் சால் வேழம் கதழ்வுற்றா அங்கு,
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்
கரும்பின் தீம் சாறு விரும்பினிர் மிசைமின்

பெரும்பாணாற்றுப்படை 257-262
உருத்திரங்கண்ணனார்

### கண்

பைந் நனை அவரை பவழம் கோப்பவும்
கரு நனைக் காயாக் கண மயில் அவிழவும்
கொழுங் கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்,
செழுங்குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்
கொல்லை நெடு வழிக் கோபம் ஊரவும்
முல்லை சான்ற முல்லை அம் புறவின்
விடர் கால் அருவி வியல் மலை மூழ்கிச்
சுடர் கால்மாறிய செவ்வி நோக்கி,
திறல் வேல் நுதியின் பூத்த கேணி
விறல் வேல் வென்றி, வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்பு ஆவிர் குரம்பை

சிறுபாணாற்றுப்படை 164-174
இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

### மூக்கு

விளைவு அறா வியன் கழனி,
கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத் தெறுவின் கவின் வாடி
நீர்ச் செறுவின் நீள் நெய்தற்
பூச் சாம்பும் புலத்து ஆங்கண்
காய்ச் செந்நெல் கதிர் அருந்து
மொட்டு எருமை முழுக் குழவி
கூட்டு நிழல், துயல் வதியும்
கோட் தெங்கின் குலை வாழை
காய்க் கமுகின், கமழ் மஞ்சள்
இன மாவின் இணர்ப் பெண்ணை
முதற் சேம்பின், முளை இஞ்சி
அகல் நகர் வியல் முற்றத்து
சுடர் நுதல் நகல் மட நோக்கின்

பட்டினப்பாலை 8 - 20
உருத்திரங்கண்ணனார்



**தேவாரம்**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

திருநாவுக்கரசர்

### செவி

நீர்த் தெவ்வும் நிரைத் தொழுவர்
பாடு சிலம்பும் இசை, ஏற்றத்
தோடு வழங்கும் அகல் ஆம்பியின்
கயன், அகைய வயல் நிறைக்கும்
மென் தொடை வன் கிழா அர்
அதரி கொள்பவர் பகடு பூண் தெள் மணி
இரும் புள் ஒப்பும் இசையே என்றும்
மணிப் பூ முண்டகத்து மணல் மலி கானல்
பரதவர் மகளிர் குரவையோடு ஒலிப்ப

மதுரைக்காஞ்சி 89 – 97
மாங்குடி மருதனார்

#### சிறுபாணாற்றுப்படை

சிறிய யாழை மீட்டும் சிறுபாணர்கள் பிற பாணர்களைப் பரிசில் பெறும் பொருட்டு வழிப்படுத்துவதாக அமைந்தது சிறு பாணாற்றுப்படை. இந்நூலின் ஆசிரியர் நத்தத்தனார். நல்லியக்கோடன் என்னும் குறுநில மன்னனை இப்பாடலில் புகழ்ந்து பாடுகிறார் புலவர்.

#### பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணர்களை ஆற்றுப்படுத்துவதாக அமையும் பாடல். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். திரையன் என்னும் தொண்டை நாட்டுத் தலைவன் இப்பாட்டில் புகழப்படுகின்றான்.

#### பட்டினப்பாலை

இது ஓர் அகப்பாடல். பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்புகளை இப்பாட்டில் காணலாம்.

#### நெடுநல்வாடை

பத்துப்பாட்டில் நக்கீரர் பாடிய இன்னொரு பாட்டு. இது அகப்பாட்டாகவும் புறப் பாட்டாகவும் கருதப்படுகின்றது.

#### மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் மிகப்பெரிய நூல். இந் நூலை இயற்றியவர் மாங்குடி மருதனார். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உலகியல் உண்மைகளை உணர்த்துவதாக அமைந் துள்ளது இப்பாடல்.

## செயல்பாடுகள்

- இயற்கை ஐம்புலன்களுக்கு மகிழ்ச்சி தருவது எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- மாசில் வீணையும் எனும் பாடலின் கருத்தைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.
- நீங்கள் சுற்றுலா சென்ற ஒருநாள் குறித்து நாட்குறிப்பு எழுதுங்கள்.
- நீங்கள் கண்டு இரசித்த இயற்கை அழகு குறித்து வருணனைக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் கடினச் சொற்களுக்கான பொருள் எழுதி அகர வரிசைப்படுத்துங்கள்.

## ஈஸ்டர் தீவு

அக்டோபர் 10 ஆம் தேதி தென் அமெரிக்காவின் குச்கோ நகரிலிருந்து லீமா பெருநகருக்கு விமானப்பயணம் செய்து வந்தடைந்தோம். அங்கிருந்து தொடர்ச்சியாக 7 மணி நேரம் விமானப் பயணம் செய்து அக்டோபர் 11 ஆம் தேதி ஈஸ்டர் தீவை அடைந்தோம். எங்கே போகிறோம் என்று கேட்ட எங்களை நோக்கி, ஒர் அற்புதமான இடம், மக்கள் என்று கூறிப் படங்களுடன் பேராசிரியர்கள் பாடம் எடுத்தனர்.

இத்தீவு உலகிலேயே மிகத் தனிமையான தீவாகும். தென் அமெரிக்கா விற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் பசிபிக் பெருங்கடலில் உள்ளது. 1000 மைல்களுக்கு அருகே நிலமே கிடையாது. தீவின் நிலப்பரப்பு 63 சதுர மைல் கொண்டது. 1987 இல் அமெரிக்காவுக்கு விண்வெளிப் பயண விண்கலம் இறக்க இடம் தேவை என்ற காரணத்திற்காகப் பெரிய விமானத்தளம் இங்கு அமைக்கப்பட்டது. இது உல்லாசப் பயணிகள் வர நல்லதாகி விட்டது. இத்தீவு எரிமலைகளால் உண்டாக்கப்பட்டது. எரிமலைகள் அமைதி ஆகி 15,000 ஆண்டுகள் ஆகிவிட்டன என்பது அறிவியலாளர்கள் கணிப்பு ஆகும்.

ராப்ப நூயி என்பது மக்கள் அழைக்கும் பெயர். 1722 இல் டச்சுக்காரர் ஜேக்கப் ரோகவீன் ஈஸ்டர் ஞாயிறன்று முதன் முதலில் வந்திறங்கியதால் ஈஸ்டர் தீவு என்றழைக்கப்பட்டு வருகின்றது. ராப்ப நூயி எழுத்துகளைக் கல்வெட்டுக்களில் பார்த்தோம். பட வடிவ எழுத்துகளாக உள்ளன.



இத்தீவில் வசிக்கும் மனிதர்கள் ஹவாய் தீவில் உள்ள பாலிநேசியன் மக்கள் போல் முகச்சாடையும் உடல் அமைப்பும் கொண்டவர்களாக உள்ளனர். இவர் களுடைய பழக்க வழக்கங்கள் மிகவும் பழைமையானவை. ஒரு காலத்தில் இங்குப் பல்லாயிரக்கணக்கான மரங்கள் நிறைந்திருந்தனவாம். மக்கள் அழித்ததாலும், எலிகள் வேர்களைத் தின்றதாலும் அவை பெரும்பாலும் அழிந்துவிட்டன. இயற்கையை வழிபட்ட இம்மனிதர்கள் எரிமலைப் பாறைகளில் மிகப் பெரிய சிற்பங்களைச் செதுக்கி, அவற்றை நெடுந்தூரத்தில் உள்ள அனகீனா கடற்கரையில் நிறுத்தி உள்ளனர். இச்சிலைகள் 6 அடியிலிருந்து 30 அடி வரை உயரமானவை. இச்சிலைகளை மோய் என்று அழைக்கிறார்கள். இவை பல டன்கள் எடை

உள்ளவை. பெரிய சிலை 82 டன். இவற்றைச் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு கடினமான கற்களை உளியாகப் பயன்படுத்திச் செதுக்கியிருப்பார்கள் என்று தொல்பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இக்கனமான சிலைகளை வெறும் மரங்களையும் கயிற்றையும் வைத்து எப்படிப் பல கிலோ மீட்டர்கள் நகர்த்திக் கடற்கரைக்குக் கொண்டு வந்திருப்பார்கள் என்பது இன்னும் புரியாத புதிராக உள்ளது. இச்சிலைகளை அத்தீவின் மக்கள் தங்கள் முன்னோர்களாகவும், அவர்களை ஆபத்துகளிலிருந்து காப்பவர்களாகவும் கருதுகிறார்கள். இத்தகைய நூற்றுக்கும் மேலான சிலைகள் தீவின் மலைச்சரிவுகளில் அரைகுறையாகச் செதுக்கிய நிலையில் கிடக்கின்றன.

ஒரு காலக்கட்டத்தில் அதாவது 1959 இல் இத்தீவின் மக்கள் தொகை 159 பேர்தான். பிறகு தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலே இத்தீவைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திய பிறகு, இத்தீவின் மக்களுக்குப் பல வகை உதவிகள் கிடைத்தன. உணவு இறக்குமதி, உல்லாசப் பயணிகள் வரவு, உலக அரங்கில் ஓர் அறிமுகம், ஐக்கிய நாட்டின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கவன ஈர்ப்பு ஆகியன கிடைக்க ஆரம்பித்தன.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர ஆரம்பித்தது. பழங்காலத்தில் இவர்களுக்குப் பணப்புழக்கம் தேவைப் படாததாக இருந்தது. இப்பொழுது பயன் படுகின்றது. இந்தத் தனித்த தீவில் மக்களுக்குக் கடல் தரும் உணவுதான் முக்கிய உணவு. சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வாழை, கரும்பு போன்றவற்றைத் தென் அமெரிக்காவிலிருந்து வந்து பயிர் செய்திருக்கவேண்டும். மக்கள் இத் தீவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோணிகளில் வந்திருக்கக்கூடும் என்பது ஒரு கருத்து.



நாங்கள் தங்கிய விடுதியின் கூரையின் மேல் புல் வளர்த்திருந்தார்கள். இதனால் என்ன நன்மை என்று தெரியவில்லை. கோடை வெயிலுக்காகவோ? தினமும் காலை உணவு மூக்குமுட்ட விதவிதமாகச் சாப்பிட வேண்டியது. பிறகு கால் கடுக்க நடந்து அல்லது பல நூறு படிகள் ஏறி ஊர்சுற்றிப் பார்க்க வேண்டியது. உடல் சோர்ந்தது, உள்ளமோ துள்ளியது. இரண்டாம் நாள். பசிபிக் தீவுக்குரிய கலை நிகழ்ச்சிக்குப் பிறகு இரவு 9 மணியளவில் கடற்கரையிலிருந்து விண்மீன் கூட்டங்களைக் காணச் சென்றோம். அங்கே கற்கள் நிறைந்திருக்கும், நாங்கள் உங்களுக்கு அனுப்பிய சிறிய கை மின்விளக்கை எடுத்து

வாருங்கள் என்று சொன்னதையும் கேட்காமல் சென்ற இளங்கோவன் எப்போதும் போல என் (கைவிளக்கின்) உதவியால் தப்பித்தார். எங்கள் குழுவுடன் வந்த புகைப்பட நிபுணர் க்ரிசு விண்மீன்களைப் பற்றி நிறைய விளக்கம் சொன்னார். இரவில் எப்படிப் படமெடுப்பது என்பதை ஒவ்வொருவருக்கும் அவரவர் காமிராவில் காண்பித்தார். அந்த இரவில் உலகின் மாசில்லாத தூய்மையான வானம் வந்து நம்மைத் தொடுவது போலவும் விண்மீன்களைக் கையால் பிடித்துவிட முடிவது போலவும் இருந்தது. எங்கோ உள்ள தீவிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றார்களே, அங்கே என்ன இருக்கப் போகின்றது என்று எண்ணிய எங்களைப் பார்த்து விண்மீன்கள் சிரித்தன.

**சோம, சரோ இளங்கோவன்**

**உண்மை- பிப்ரவரி 2015**

## செயல்பாடுகள்

- இயற்கை அழகூட்டும் பகுதிகளைக் கண்டு இரசித்திருப்பீர்கள். அவற்றை இயற்கை எனும் தலைப்பில் கவிதையாக எழுதுங்கள்.
- நீங்கள் சுற்றுலா சென்ற இடத்தைப் பற்றி உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- ஈஸ்டர் தீவு போன்று நீங்கள் கண்டுகளித்த ஏதேனும் பகுதியைக் குறித்து பயணக் கட்டுரை எழுதுங்கள்.
- ஈஸ்டர் தீவு பற்றியும் அங்கு வசிக்கும் மக்கள் பற்றியும் குறிப்பு எழுதுங்கள்.
- ஈஸ்டர் தீவு தொடர்பான புகைப்படங்களைத் திரட்டுங்கள்.

# பூமித்தாய்



## பசுமை யாகம்

அந்த ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கியதில் ஓர் ஆச்சரியமும் அதிசயமும் வெளிப்பட்டது. நூற்றுக்கணக்கான பிரபலமானவர்களுக்கு மத்தியில் படிப்பறிவில்லாத ஒரு காடுவாழ் பாமர ஆதிவாசி மைந்தனுக்கும் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. அவர் பெயர் ஜாதவ், அந்தச் சாமானிய மனிதன் செய்த சிருஷ்டி, விலை மதிப்பில்லாதது. அது யாராலும் எளிதில் உருவாக்க முடியாத பூமிக்கான பசுமைக் கவசம்.

பல வருடங்களாக மரம் வளருங்கள். மரம் தெய்வம் தந்த வரம் என்று மாறிமாறிக் கேட்டுக் கொண்டபடி நடப்பட்டதாகச் சொல்லப்பட்ட மரங்கள் இன்று ஒரு சிறு தோப்பாகக்கூட மாறியிருக்குமா என்பது சந்தேகம்தான். ஆனால் தனி மனிதனாகப் பிறரின் கட்டாயமோ, தூண்டுதலோவின்றித் தன் இரண்டு கைகளால் 30 ஆண்டுகளாக மரங்களை நட்டு வளர்த்து இன்று 1360 ஏக்கர் நிலப்பரப்பில் அடர்ந்த காட்டினை உருவாக்கி யானைகள், புலிகள், மான்கள், காண்டாமிருங்கள், குரங்குகள் தங்கி வாழ ஒரு பிரமாண்டமான அடர்ந்த பசுமை வனத்தை உருவாக்கிய சாதனைக்காகத்தான் ஜாதவுக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

1979இல் அஸ்ஸாம் பகுதியில் கொட்டும் மழை, சூறைக்காற்று. பிரம்மபுத்ரா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பொங்கிப் பிரவாகித்து ஜோர்காட்

அருகில் பரந்துகிடக்கும் ஒரு மணல்திட்டுத் தீவை மூழ்கடித்துப் பாய்ந்தது. வெள்ளப்பெருக்கில் அடித்து வரப்பட்ட மிருகங்கள், பாம்புகள் செத்தும் சாகாமலும் அந்த மணல் திட்டில் ஒதுங்கின. பிரம்மபுத்ராவில் வெள்ளம் குறைந்த பின் மணல் தீவை நோக்கிப் படகைச் செலுத்தினான் அந்த 16 வயதுச் சிறுவன்.

மணல்திட்டின் வெள்ளி மணல், சூரிய ஒளியில் வைரப் பொடிகளாய் மினுங்க, வெப்பம் திகுதிகுவென ஏறிக்கொண்டிருந்தது. ஒரு புல் பூண்டுகூட இல்லாதிருந்த அந்த மணல்திட்டு, சூரிய வெப்பத்தினால் நெருப்பாகச் சுட ஆரம்பித்தது. வெள்ளத்தில் ஒதுங்கிய பாம்புகளில் உயிருடன் இருந்தவை நிழலுக்காகப் புதரைத் தேடி, சுடும் மணலில் நெளிந்து வேகமாக ஊர… ஒரு செடிகூட இல்லாத அந்த மணல் திட்டில் சுடும் மணலின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் துடி துடித்து ஒவ்வொரு பாம்பாகச் செத்தன. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அந்தச் சிறுவன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

ஒரு புல், பூண்டு இல்லாமல் போனதால்தானே, இந்த வாயில்லா ஜீவன்கள் செத்துப்போயின. பூமி வறண்டு உலர்ந்துபோனால் மனிதர்களும் இப்படித் துடிதுடித்துச் சாகணும்தானே.. இந்தப் பொட்டல் மணல்காட்டைப் பசுமைக்காடாக மாற்றுகிறேன் என்று சபதம் எடுத்தான்.

வன அதிகாரிகளிடம் பிரம்மபுத்ரா மணல் தீவைக் காண்பித்து, அதில் மரங்களை நடலாமா என்ற கேள்வியை அவன் எழுப்ப, இந்த மணல் தீவில் மரங்கள் வளரா. மரங்கள் வளரத் தேவையான மண் ரகம் இங்கே கிடையாது. வேணுமானால் மூங்கில் மரம் வளர்க்கலாம் என்று அவர்கள் யோசனை கூற, அவன் மூங்கில் செடிகளை நட்டுத் தன் பசுமை யாகத்தை ஆரம்பித்தான்.

அஸ்ஸாமில் பிரம்மபுத்ரா நதியின் நடுவில் முஜூலி தீவு உள்ளது. உலகில் நதியின் நடுவே இருக்கும் தீவுகளில் முஜூலி தீவுதான் பெரியது. 1853இல் 1246 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இருந்த இந்தத் தீவு, இப்போது 550 ச.கி.மீ யாகச் சுருங்கியுள்ளது. பிரம்மபுத்ரா நதி சிறிது சிறிதாக அரித்து விட்டது. இந்தத் தீவில் ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்தாலும், ஜாதவ் போல எவரும் காடு அமைப்பதில் ஈடுபடவில்லை.

தனது முயற்சியில் ஒத்துழைக்க நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடம் உதவி கேட்க, அவர்கள் உதாசீனப்படுத்தினார்கள். நேரம் கிடைக்கும்போதெல்லாம் மூங்கில் தளிர்களை மணல் தீவில் நட்டு அக்கறையுடன் பிரம்மபுத்ரா நதி நீரை ஊற்றிப் பிள்ளைகள் போல வளர்த்தான் ஜாதவ்.

சில வருடங்களில் மூங்கில் காட்டினை உருவாக்கினான். மூங்கில் காட்டினைப் பார்த்து ஜோர்காட் மக்கள் வியந்து நின்றனர். பிறகு



**பத்மஸ்ரீ**

இந்தியாவில் கலை, கல்வி, தொழில், இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை போன்ற துறைகளில் மிகச் சிறந்த சேவை புரிந்த இந்தியக் குடிமக்களுக்கு அரசால் வழங்கப்படும் விருது பத்மஸ்ரீ விருதாகும். இது 1954 இல் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. பாரத ரத்னா, பத்மவிபூஷண், பத்மபூஷண் ஆகிய வரிசைகளில் இது நான்காவதாக வழங்கப்படும் மிகப்பெரிய விருதாகும். இவ் விருது ஒவ்வொரு ஆண்டும் குடியரசுத் தினத்தன்று அறிவிக்கப்படும்.

**வாடகைப்பூமி**

வைகறை எழுந்து
பின்வாசல் திறந்தால்
மடியிலும் முடியிலும் பூக்களை
வைத்துக்கொண்டு
புன்னகைக்கும்
அந்த இளையமரத்தை
இன்று காணவில்லை.

வாசனை;க் கரங்களால்
காற்றை அணைத்து
குதூகலப்படுத்தியும்
பச்சை இலைகளை
மெல்ல அசைத்தும்
வரவேற்கும்
அந்த வசந்த மகளை
இன்று காணவில்லை!

ஐந்து வருடங்களாக
என்னுள் பரவிய
அந்தப் பாசவிருட்சத்தை
இன்று காணவில்லை.

காலையும் மாலையும்
விடுகதையான
பூக்களை எடுத்து
பூஜையை நடத்தும்
என் மனைவியின்
முகத்திலும்

அங்கேயே ஒரு குடிசை அமைத்து, அந்த மூங்கில் காட்டில் தனிமையில் வசிக்க ஆரம்பித்தான். பெற்றோர், உற்றார், உறவினர் பள்ளிப் படிப்பு, பாரம்பரிய உணவு எல்லாவற்றையும் மறந்தான்.

வெறுமனே மூங்கில் மட்டும் வளர்த்தால் போதாது. வனத்தில் வளரும் பல்வகை மரங்களை வளர்க்க வேண்டும் என்று எண்ணினான். அந்தப் பகுதியில் வளரும் மரங்களின் தளிர்களைச் சேகரித்து மணல் தீவில் நட ஆரம்பித்தான்.

மண்ணை... மரங்களை நேசித்ததால் இயற்கையின் பல சூட்சுமங்கள் அவனுக்குப் புரியவந்தன. முன்பு வசித்த ஜோர்காட்டில் மண்புழுக்களை, சிவப்பு எறும்புகளை, கரையான்களைச் சேகரிக்கத் தொடங்கினான். காரணம், சிவப்பு எறும்புகள், மண்புழுக்கள், கரையான்கள் மண்ணின் தன்மையை மாற்றி வளமாக்குமாம். லட்சக்கணக்கான சிவப்பு எறும்புகளைச் சேகரித்து மூங்கில் காடுகளில் கொண்டு போய் விட... அங்கே ஒரு ரசவாதம் நிகழத் தொடங்கியது.

எறும்பு சேகரிப்பின் போது, எறும்புகள் கடித்து... கை, கால்கள் உடம்பெல்லாம் வீங்கி ரணமாகிவிடும். அதை எல்லாம் பொருட்படுத்தாமல் எறும்பு சேகரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டான். எறும்புகள் மண்ணின் குணநலன்களை மரம் வளர்வதற்கு ஏற்ற மாதிரி மாற்ற, நடப்பட்ட தளிர்கள் வேரூன்றிச் சடசடவென்று 1360 ஏக்கர் நிலப் பரப்பில் வளர்ந்தன. விதம் விதமான பறவைகள் மரங்களில் கூடுகட்ட ஆரம்பித்தன. கழுகுகள் கால் பதித்தன. மான்களும் பசுமையைத் தேடிக் குடிவந்தன. மான்கள் வாழ்வதை உணர்ந்து மான்களை உணவிற்காக வேட்டையாடப் புலிகளும் வர ஆரம்பித்தன. தொடர்ந்து காண்டாமிருகமும் சேர்ந்து கொண்டது. அந்த இளைஞனும் பிழைப்பிற்காகப் பசு மாடுகள், எருமைகள், ஆடுகளை வளர்க்க ஆரம்பித்தான்.

2008 வரை ஜாதவ் வளர்த்துவிட்ட புதிய வனம் பற்றி வெளி யுலகத்திற்கு ஒன்றுமே தெரியாது.

ஜோர்காட்டிற்கு அருகே, 100 யானைகள் ஊருக்குள் புகுந்தன. வீடுகளை, பயிர்களைத் துவம்சம் செய்து சேதப்படுத்த ...ஊர்மக்கள் அஸ்ஸாம் வனத்துறையிடம் புகார் செய்தனர். யானைகளைத் தேடி வனத்துறை வர.. அந்தப் புதிய வனத்தில் யானைகள் இடம்பெயர்ந்தது தெரிய வந்தது.

யார் இந்தப் புதிய வனத்தை உருவாக்கியிருப்பார்கள் என்று வனத்துறை அதிகாரிகள் விசாரிக்க, கிடைத்த தகவல் அவர்களைத் தூக்கிவாரிப் போட்டது. அரசாங்கம் செய்ய முடியாததை நம்ம ஜாதவ் மொலாய் பாயெங் சாதித்துக் காட்டியிருக்கிறான் என்று ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப்

போயினர். புதிய வனம் மொலாய் காடு எனப் பெயர் பெற்றது. உலகிலேயே நதியின் நடுவில் அமைந்திருக்கும் மிகப் பெரிய காடும் இதுதான்.

யானைகள் அபாயம் காரணமாக அக்கம்பக்கத்து ஊர்மக்கள் மொலாய் காட்டை அழிக்கக் கோடரிகள் ஏந்திப் புறப்பட்டபோது ஜாதவ் உரக்கச் சொன்னார். யானைகள் எனது குடிசையையும் சேதப்படுத்தியுள்ளன. நான் வளர்க்கும் ஆடு, மாடுகளை விலங்குகள் கொன்றுள்ளன. அதனால் எனக்கு நஷ்டம் தான். இருந்தாலும் நான் வளர்த்த காட்டை அழிய விடமாட்டேன். வேணும்னா என்னைக் கொன்றுவிட்டுக் காட்டை அழியுங்கள். ஜாதவ் தைரியமாக ஊர்மக்களை எதிர்த்து நின்றான். மொலாய் காடு அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது.

ஜாதவ் தன் மனைவி, ஒரு மகள் இரண்டு மகன்களுடன் அந்தக் காட்டில் வாழ்ந்து கொண்டு, வளர்க்கும் பசு, எருமைகளிட மிருந்தது பால் கறந்து ஜோர்காட் மக்களிடம் விற்று ஜீவனம் நடத்துகிறார். தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் உட்பட இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பல அமைப்புகள் ஜாதவின் பசுமைப் பணியைப் பாராட்டியுள்ளன. இவரைப் பற்றி எடுக்கப்பட்ட குறும்படங்களுக்குச் சர்வதேச அளவில் பரிசுகள் கிடைத்துள்ளன.

ஜாதவ், தனக்காகச் சொத்து ஏதும் சேர்க்கவில்லை. ஆனால் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள மரங்கள், மரங்கள் வெளியிடும் பல்லாயிரம் கன அடி ஆக்ஸிஜன்… இவற்றை இந்தியாவிற்குச் சொத்தாக அன்பளிப்பு செய்திருக்கிறார்.

புன்னகையைக் காணவில்லை!

கட்டையாய் நின்ற
கற்பகத் தருவின்
இறுதி மூச்சு
என் இதயத்தில்
பட்டபோது
இடிந்து போனேன்!

வெட்டியது யார்?
எனக் கேட்க
தடித்த சொற்கள்
உதடுகளில் அணிவகுக்க
வீட்டின் உரிமையாளரின்
கதவைத் தட்டும் முன்
எனது உள்ளம்
மெதுவாகச் சொன்னது
"நீ குடியிருப்பது
வாடகை வீடு
உரிமையாளர் வெட்டினால்
உனக்கென்னவென்று!"

அப்போது
பூமியின் குரலும்
என் காதுக்கு எட்டியது
"மனிதர்கள் வாழ்வதும்
வாடகைப் பூமியில் தான்
எனது குழந்தையைக்
கொன்றது யார்" எனக் குமுறியது!

**கவிதாசன்**

**பிஸ்மி பரிணாமன்**
**(ஓம் சக்தி இதழ் ஜூன் 2015)**

## செயல்பாடுகள்

- வாடகைப் பூமி எனும் கவிதையை வாசித்து இரசனைக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- கவிதையிலுள்ள சொற்களுக்கு அகராதி தயாரியுங்கள்.
- பத்மஸ்ரீ விருதுபெற்ற பசுமைப்போராளி ஜாதவ் நம் பள்ளிச் சுற்றுச்சூழல் தினத்திற்கு வருகை தர உள்ளார். தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக வரவேற்புரை ஒன்றைத் தயார் செய்யவும்.
- மணல்தீவை, பசுமைத் தீவாக மாற்றி பத்மஸ்ரீ விருது பெற்ற ஜாதவ் அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.

- மணல்தீவைப் பசுமை நிறைந்த இடமாக மாற்ற ஜாதவ் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி குறிப்பு வரைக.
- முயற்சி திருவினையாக்கும் என்ற தலைப்பில் சிறுகட்டுரை எழுதுங்கள்.

## இயற்கையைப் பேணுதலே இறைவழிபாடு

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தருளும் பரம்பொருளைத் தங்கு தடையின்றி வழிபடத் தமிழர்கள் தத்தமக்கு ஏற்ற வண்ணம் ஆலயங்கள் அமைத்துச் சாலவும் தொழுதனர்.

புறத்தூய்மையை நீராடியும் அகத்தூய்மையைத் தமிழ் பாடியும் தக்கவைத்துக் கொண்ட தமிழர்கள், பூவும் புனலும் சொரிந்து வழிபட நந்தவனங்கள் அமைத்தனர். குளங்கள் வெட்டினர். பாலும் பழமும் அன்னமும் படைத்து வழிபட, ஆவினம் பேணும் பசு மடம் நிறுவியதோடு, நெல்லும் கனிகளும் தருவிக்க இறையிலி நிலங்களையும் ஏராளமாகத் திருக்கோயில்களுக்கு என்றே ஆக்கிப் பேணினர்.

பசிப்பிணி போக்கவும், உடற்பிணி நீக்கவும் செய்கின்ற முயற்சியில் பிறவிப்பிணி ஒழியத் தமிழர்கள் கண்ட பெருநெறி இறைநெறி.

இல்லுறை தெய்வம், உள்ளூர்த் தெய்வம், தத்தம் குலங்களுக்கு என்றொரு (குல) தெய்வம், இவற்றோடு விருப்புறு தெய்வம் (இஷ்ட தெய்வம்) என்றெல்லாம், ஒன்றாய் இலங்கும் பரம்பொருளைத் தத்தம் மனதுக்கேற்ற வண்ணம் கொண்டு வழிபடுதற்குத் தமிழில் இடமுண்டு.

பண்டைத் தமிழ் இலக்கியமான திருமுருகாற்றுப்படை, முருகப் பெருமான் எழுந்தருளும் இடங்களை,

ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்தமேவருநிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்

(திருமுருகாற்றுப்படை 200–226)

என்று வரிசைப்படுத்திக் காட்டுகிறது.

அதாவது, ஊர்கள் தோறும், விரும்பிய வண்ணம் விழாவெடுக்கும் இடங்களிலும், ஆர்வலர்களாகிய அன்பர்களின் உள்ளங்களிலும், வெறியயர் களங்களிலும் எழுந்தருள்பாலிக்கும் வேலன், நிரந்தரமாய் உறைந்திருக்கும் இடங்களாக இயற்கைத் தலங்களையே பெரிதும் எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாகக் காடும் (பூங்)காவும் அழகிய ஆற்றின் இடையில் அமைந்துள்ள திடலும், ஆறும் குளமும் அழகழகாய் ஊர்களில் சீர்பெற அமைத்த வைப்பிடங்களும், சதுக்கம், சந்தி ஆகிய இடங்களும் புதிது புதிதாகப் பூத்துச் சொரியும் கடம்ப மரமும் கந்தன் விரும்பித் தங்கும் சிறப்புக்குரிய இடங்கள் என்பது இதில் கவனிக்க வேண்டிய செய்தி.

கடம்பர் நெடுவேள் என்று பெரும்பாணாற்றுப்படையும் (75) செல்வக்கடம் பமர்ந்தான், காடுகெழுந்நெடுவேள் என்று அகநானூறும் (அகம்-382) முருகனைப் பெருமையுறப் பேசுகின்றன.

இயற்கையைப் பேணி நடத்தும் வழிபாடே உண்மையில் இறை வழிபாடு. அதனை மறந்தும் மறுத்தும் நடத்துகிற எந்த விழாவாயினும், வழிபாடாயினும் அதனை ஒருபோதும் இறைவன் விரும்பி ஏற்பது இல்லை. எனவே இயற்கையைப் பேணுவோம்.

**கிருங்கை சேதுபதி**

## செயல்பாடுகள்

☞ இயற்கையைப் பேணுதலே இறைவழிபாடு எனும் தலைப்பில் ஆசிரியர் கிருங்கை சேதுபதி கூறும் கருத்துகளை மையமாக வைத்து ஒரு கட்டுரை தயாரியுங்கள்.

☞ இயற்கையைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றிக் குறிப்பு தயாரியுங்கள்.

☞ பத்மஸ்ரீ விருதுபெற்ற ஜாதவ் அவர்களைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயார் செய்யுங்கள்.

☞ முன்னேற்றத்தின் முகவரிகள் எனும் புத்தகம், 2000ஆம் ஆண்டு சிந்தனை மனிதர் விருது பெற்றுள்ள கவிஞர் கவிதாசன் அவர்களால் எழுதப்பட்டது. இந்நூல் சென்னையிலுள்ள குமரன் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை ரூபாய் 120. இதனை நூலடைவு செய்யுங்கள்.

☞ அப்போது
பூமியின் குரலும்
என் காதுக்கும் எட்டியது
மனிதர் வாழ்வதும்
வாடகை பூமியில்தான்
எனது குழந்தையைக்
கொன்றது யார் எனக் குமுறியது

இவ்வரிகள் உணர்த்தும் கருத்திற்கு விமர்சனக் குறிப்பு எழுதவும்.

# காலச்சூழல்



## தமிழகச் சுற்றுச்சூழல்

### மரங்களே... ஓ மரங்களே

மரங்களை நான் நேசிக்கிறேன்
மனிதர்களைக் காட்டிலும் பிரியமாய்.
இலையுதிர் காலத்தில்
கோபித்துக் கொண்டாலும்
இனிய வசந்தத்தில்
என்னைக் காதலிக்கின்றன.
ஒரோர் மரங்கள்
இரவினிலே
செல்லச் சிணுங்கலுடன்
இலைகளைக் கவிழ்த்துக்கொள்ளும்.
ஆயினும் பகலில்
பல்வேறு நிறங்களில்
மெல்லிய மஞ்சளில்....
மிதமான அரக்கு வண்ணத்தில்
கரும்பச்சையாய்... இளம் பச்சையாய்
என்னைப் பார்த்துக்
கண்சிமிட்டிச் சிரிக்கும்.
என்னை அருகே அழைக்கப்
பிடிவாதமாய்த் தவஞ்செய்கின்றன.
அருகிருக்கையில்
தாழக்கிளை பரப்பித்

**க**டந்த இரண்டாயிரமாம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை மேம்பாட்டுத்திட்டம் ஆய்வு செய்து வெளியிட்ட மனித மேம்பாட்டு அறிக்கையானது, ஆய்வு செய்யப்பட்ட 174 நாடுகளில் இந்தியா 128 ஆவது இடத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. அணுகுண்டுகள் வெடித்தோம். கணினித் துறையில் உலகிலேயே தலைமை இடத்தில் இருக்கிறோம். வல்லரசாகிவிட்டோம் என்று இறுமாந்து இருக்கும் இந்தியர்களுக்கு இது அதிர்ச்சியான செய்தியாகத்தான் இருக்கும்.

இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் சுற்றுச்சூழல் சிக்கல்களே உலகின் தலையாய சிக்கல்களாக இருக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம். உடலைப் பொசுக்கும் கடும் வெயில் முதல் உயிர்களை அள்ளிச் செல்லும் விதவிதமான நோய்கள் வரை பலவற்றுக்கும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளே பெரும் காரணமாக இருக்கின்றன. இந்தியாவில் சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு 1.5 விழுக்காடாகவே இருப்பதும், அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் மாசுபாடுகளும் நம் இருள் மயமான எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டுவனவாக உள்ளன.

பழந்தமிழர்களின் வாழ்வு முறை இயற்கையில் உறவாடலாகவே அமைந்தது. நிலங்களின் பகுப்பும் ஒழுக்கத்தின் பகுப்பும்

தமிழர்களால் சூழலின் தன்மைக்கேற்ப அமைக்கப்பட்டிருந்தன. ஐவகை நிலங்களுக்கும் திணையியல் ஒழுக்கத்திற்கு மரஞ்செடி கொடிகளையே குறியீடாகப் பழந்தமிழர்கள் பெயர் சூட்டியுள்ள பாங்கை நாம் வியந்து நோக்கலாம். இது தொல்காப்பியருக்கு முந்தைய காலம் முதல் கடைச்சங்க காலம் வரை தென்படுகிறது. அதன்பின், அவை மெல்ல மெல்ல வெறும் பண்பாட்டு எச்சங்களாக மாறிவிட்டன. முல்லைக்கொடிக்குத் தேரைக் கொடுத்ததும் மயிற்பேடுக்குப் போர்வை தந்ததும் இப்போது சிலருக்கு நகைப்பாகத் தோன்றினாலும் அதன் பின்னே இருந்த உயிர்ம நேயத்தை நாம் உற்று நோக்க வேண்டும்.



பழந்தமிழரின் இயற்கை நேய உணர்வுக்கு நாம் பல்வேறு சான்றுகளைக் காட்ட முடியும்.

> "தெய்வம் உணாவே மாமரம் புட் பறை
> செய்தி யாழின் பகுதியொடு
> அவ்வகை பிறவும் கருவென மொழிப"
>
> (தொல். பொருள். 20)

என்ற தொல்காப்பிய வரிகளில் உள்ள மாமரம், புள் என்ற சொற்கள் கருப்பொருள்களாக விலங்குகளையும் செடி கொடிகளையும் கொண்டிருந்த செய்தியைக் கூறுகின்றது. இலக்கண நூலான தொல்காப்பியம் தரும் சான்று நமக்கெல்லாம் தமிழர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நெறியைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இதே போன்று பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும் இயற்கையோடு இசைந்த வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

> பந்தர் வேண்டாப் பலர் தூங்கு நீழல்
> கைமான் வேட்டுவன் கனை துயில் மடிதென (புறம் 320)

என்ற பாட்டு, பந்தல் தேவைப்படாத அளவுக்கு நிழல் தரும் கொடிகள் படர்ந்துள்ள முற்றத்தில் துயிலும் யானை வேட்டுவனைக் காட்டுகிறது. வாழ்க்கைக்கும் செடி கொடி களுக்கும் உள்ள உறவை இதைவிட நெருக்கமாக யார் காட்டுவர்?

> "கடுவிசைக் கவணையில் கல் கை விடுதலின்
> இறுவரை வேங்கையின் ஒள் வீ சிதறி
> ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
> தேன் செய் இறால் துளைபட போகி
> நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
> குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
> பலவின் பழத்துள் தங்கும்" (கலித்தொகை 40 : 10-16)

தொட்டுவிடத் துடிக்கும்
தூரத்தில் இருந்தாலும்
கரமசைத்துக் கூப்பிடும்
ஆற்றங் கரையோரம் நிழற்படுகை
போடும்.
மலர்களை மட்டுமல்ல
மழைத் துளிகளையும் சுமக்கும்.
பூக்களில்லாத ஊசி மரங்களும்
நேசிக்கத் தகுந்தவைகளே.
சிவப்புத் தொப்பியுடன்
நெருப்புக் கொன்றை.
மணம் வீசி மயக்கும் சந்தன மரங்கள்.
என்னைக் கண்டவுடன்
தலை குனிந்து வரவேற்கும் மூங்கில்.
என்னைப் போல
நிமிர்ந்து நிற்கும் யூகலிப்டஸ்
இப்படி-
எத்தனை எத்தனை மரங்கள்
என்னை நேசிக்கின்றன!
அதனால்தான் சொல்கிறேன்
மரங்களை வெட்டாதீர்!
வெட்டுகையில் -
என் இதயத்துடிப்பு
மெல்ல மெல்லக் குறையும்.

**- வைகைச் செல்வி**

என்ற பாடல் வரிகள் அந்நாளில் தமிழகத்தில் இருந்த சோலைக் காடுகளின் செழிப்பைக் காட்டும். அதாவது கவணிலே கல்லை வைத்து வேகமாக எறியும்போது வேங்கை மலர்கள் சிதறும்; ஆசினிப் பழம் உதிரும்; தேன்கூடுகள் துளைக்கப்படும்; மாமர மலர்க் கொத்துக்கள் சிதறடிக்கப்படும். குலை வாழையின் மடல் கிழியும், அதன்பின் பலாவின் பழத்துள் அந்தக் கல் சென்று தங்கும் என்பது இதன் பொருள். இப்படிப்பட்ட செழித்த காடுகள் நிறைந்த பகுதியாக இருந்தது தமிழ்நாடு.





மெல்ல மெல்ல மாறிவந்த அரசியல், பொருளியல், பண்பாட்டு மாற்றங்கள் தமிழர்களின் இந்தச் சூழல் நேய உணர்வை மக்கி மறக்கடிக்கச் செய்துவிட்டன. தமிழ்நாடு மெல்ல மெல்ல ஒரு குப்பைக் கோட்டமாக மாறத் தொடங்கி விட்டது.

இன்று, தெள்ளிய நீரோடைகள் வற்றிக்காய்ந்து விட்டன. மலைகளிலே மரங்கள் இல்லை. குன்றுகள் கூட கற்பாளங்களாக விற்பனையாகத் தொடங்கி விட்டன. வயல்வெளிகளில் நெல்லுக்குப் பதிலாக நஞ்சை விதைத்து நஞ்சை அறுக்கிறோம். தென்பொதிகை மலையான குற்றாலம் தென்றலை மறந்துவிட்டது. கோடைக்கானலும், ஊட்டியும் மர ஆடைகளைக் களைந்து அம்மணமாகி நிற்கின்றன. காவிரியின் கரைகளில் தஞ்சை மக்கள் வடித்த கண்ணீர்தான் பாய்கின்றது. கல்பாக்கத்தில் இன்னொன்றும் கூடங்குளத்தில் புதியதாகவும் அணுஉலைப் பணிகள் தொடங்கலாயின. தூத்துக்குடியிலோ ஸ்டெர்லைட் செம்பு உருக்காலை மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. பவளப் பாறைகளும், கிழக்குக் கடலோர சதுப்புநிலக் காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. நெற்கழனிகள் மேலை நாட்டினரின் சுவைக்கான இறால் களஞ்சியங்களாகின்றன. திண்டுக்கல்லும் வாணியம்பாடியும் தோலாலைக் கழிவால் தம் வளமை தொலைந்து நச்சு பரப்புகளாகிக் கிடக்கின்றன.

இப்படித் தமிழ் நலன் கெடுக்கும் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை சீரழிப்பு களைச் சரி செய்வோமாக.

**ஜோ. பால்பாஸ்கர்**

**ஜோ. பால்பாஸ்கர்**

தமிழகச் சுற்றுச்சூழல் நேற்று, இன்று, இனி – நாளை என்ற நூலின் ஆசிரியர். சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், இயற்கையைப் பாதுகாத்தல் போன்றவற்றில் மிகுந்து ஆர்வமுடையவர்.

## செயல்பாடுகள்

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றிக் குறிப்பு வரையுங்கள்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தி முத்திரை வாக்கியங்கள் தயாரியுங்கள்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்போம், நோயைத் தடுப்போம் எனும் கருத்தை வலியுறுத்தி ஒலிபெருக்கி அறிவிப்பு ஒன்றைத் தயாரியுங்கள்.
- மழையைப் பொழிதல் எனும் கவிதைநூல் அலறி அவர்களால் எழுதப்பட்டது. இது 50 பக்கங்களைக் கொண்டது. இதன் விலை 50 ரூபாய். இது கோயமுத்தூரிலுள்ள விஜயா பதிப்பகத்தில் கிடைக்கும். இதற்கான விளம்பரம் தயாரியுங்கள்.
- "மரங்களை வெட்டாதீர்!<br>வெட்டுகையில் –<br>என் இதயத்துடிப்பு<br>மெல்ல மெல்லக் குறையும்."<br>எனும் கவிதை வரிகளை விமர்சித்து அதற்கான தீர்வை எழுதுங்கள்.
- இயற்கைக்கு ஏற்படும் துன்பம், எல்லா உயிர்களுக்கும் ஏற்படும் துன்பம் எனும் கருத்தை வலியுறுத்திச் சுவரொட்டி ஒன்றைத் தயாரியுங்கள்.

## அந்தப் பக்கம் ஒரு ஒத்தக் கொம்பன் இருக்கு

1995 இல் சிறு ஊனுண்ணிகள் குறித்து நீலகிரி உயிர் மண்டலத்தில் ஆராய்ச்சி செய்து வந்த தோழர் யோகானந்த், சிறு வாணியில் தமது களப்பணியைச் செய்து வந்தபோது தான் அப்பகுதியைப் பார்த்து, வியக்க வாய்ப்பு வந்தது.

சிறுவாணியில் அன்று பிற்பகல், காட்டுப் பாதையில், இக்கட்டான பயணத்தை முடித்துக் கொண்டு நண்பர் தினேஷ் உட்பட மூவரும் ஒரு சரக்கு வண்டியிலிருந்து இறங்கினோம். குக்குறுவான்களின் பின்னணி ஓசையில் மனத்தில் இனம் புரியாத திகைப்பு. அடர்ந்து செறிந்த காடு. எதிரேயிருந்த பள்ளத்தாக்கை அடுத்திருந்த மழைக்காடு இருண்டு காணப்பட்டது. ஆங்காங்கே காட்டுக்கோழிகளின் கயாக் கக் என்ற கீச்சுக் கூவல் எதிரொலி. சின்ன இருவாசிப் பறவைகளின் தனித்த, உரத்த கேவல் மொழி, அங்குமிங்குமாக மலைச்சிட்டான்கள் எனப் பளபளத்த புதியதொரு பசுமை உலகம். சில்லென்ற காற்றில் எங்கள் வியர்த்த

### சொற்பொருள் பின்வருநிலை அணி

வந்த சொல்லே வந்து தந்த பொருளே தருவது சொற்பொருள் பின்வருநிலை அணியாகும்.

எ.கா.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்<br>அச்செல்வம்<br>செல்வத்துள் எல்லாம் தலை.

செல்வம் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து பொருள் என்னும் கருத்தைத் தந்துள்ளது. எனவே இது சொற்பொருள் பின்வருநிலை அணி எனப்படும். வேறு எ.கா.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் செயல்.

தீயவை தீய பயத்தலால் தீயவை<br>தீயினும் அஞ்சப் படும்.

உடல் குளிர்ந்தது. எதிரே விடுதிக் காவலர் ஜோசப் வர, நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

3, 4 நாட்கள் பல பகுதிகளிலும் சுற்றித்திரிந்த நாங்கள், அந்த ஓங்கிய பெரும் மழைக்காட்டில் விதவிதமான பறவைகள், ஒரு சிறுத்தைப் பூனையின் காலடித்தடம், நீர்நாய்களின் எச்சங்கள், கரடியின் கழிவுகள், பூச்சியினங்கள் பல, ஊர்ந்து சென்ற ஒரு கருநாகம் ஆகியவற்றைப் பார்த்தோம். வெயிலும், மழையும் என அக்காட்டின் மாறுபட்ட தன்மை கிளர்ச்சியூட்டியது. இயற்கையின் கோடிக்கணக்கான அர்த்தங்கள் புரிந்தும் புரியாத நிலையில், நிம்மதி மேலிட நாட்கள் நகர்ந்ததே தெரியவில்லை.



ஊர் திரும்பும் நாள் வந்தது. பிற்பகல் 3 மணி. பை முதுகில் தொற்றிக் கொள்ள, சற்று தொலைவு நடந்து சென்று, தகரம் வேய்ந்த ஒரே குடிசைக்கடையில், தேநீர் அருந்தி விட்டுத் தார் சாலையிலேயே கொஞ்ச தூரம் செல்வோம் என ஆசையுடன் நடக்கலானோம். கடையிலிருந்தவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பாத்துப் போங்க அந்தப் பக்கம் ஒரு ஒத்தக் கொம்பன் இருக்கு. அஞ்சுவதஞ் சாமை பேதமை என்பது புரியாது சிரித்துக்கொண்டே அவர்களை மறந்து நடைபோட்டோம்.

பெரிய காட்டு யானை ஒன்று, டைனோசரைப் போல நடந்து வந்து சாலையின் குறுக்கே நிற்கின்றது. எதிர்பாராத பேருருவம்... அதிர்ச்சியில் யானை என்று கத்தியதோடு சில நொடிகளுக்கே அதைப் பார்க்கும் வாய்ப்பு, ஒரு தந்தம் மட்டும் அதற்கு இருந்தது. ஒற்றைக் கொம்பன் தலையைத் திருப்பி எங்களைப் பார்த்ததும் வீர் எனப் பிளிறிக்கொண்டு எங்களை நோக்கி ஓடி வந்தது. அவ்வளவுதான் மூவருக்கும் ஓட்டப்பந்தயம்.

காடுகளில் பலமுறை யானைகளைச் சந்தித்த அனுபவம் எங்களுக்கு உண்டு. ஆனால் வாழ்வில் மறக்க முடியாத மேற்கண்ட சம்பவத்தின் ஒவ்வொரு முனையிலும் நாங்களே தவறு செய்திருக்கிறோம் என்பதை

நீங்கள் கூர்ந்தறிதல் வேண்டும். யானைகளுக்கு மக்கள் நினைப்பது போல சூதும், வாதும், பழி உணர்வும் இல்லை அல்லவா?

உயிரினங்கள் வாழும் காடுகளை நாம் கிள்ளுக்கீரையாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு நமது வீடுகள் போலவே அவற்றுக்குக் காடுகளே வீடுகள் என்பதையும் கானகம் நமது சுற்றுலாத்தலமல்ல என்பதையும் நாம் உணர வேண்டும். இந்த வரையறைக்கும் நாம்தாம் காரணம். மக்கள் தொகையைப் பெருக்கியதும், காட்டுயிர்களைக் கொன்று குவித்ததும் மனிதர்தானே?

தனியுடைமை, ஊழல், தாழ்மை, அறியாமை, ஜாதி, மதவெறி போன்ற நெருடலான நமது சூழலில் யானைகளைக் காப்பாற்றுவது எளிதல்ல. சட்டம், கையொப்பம், உத்தரவு, சம்பளம், மிரட்டல், தண்டனை ஆகியவையே இன்று யானையைக் காப்பாற்றி வருகின்றன என்பதைவிட, இப்புவிச் செழிப்பின் சின்னமான அப்பேருயிரின் அழிவைச் சற்றுத் தள்ளிப்போட மட்டுமே அவை உதவுகின்றன எனலாம். இந்நிலை மாற மக்கள் மனம் மாற்றப்பட வேண்டும். இதை வழக்கம்போல் அரசுக்கு ஓயாது சொல்லிக் கொண்டிருப்பதைவிட வேறு என்ன செய்துவிட முடியும்? ஒரு வேளை அரசு தீவிரச் செயலில் இறங்கும்போது, கடைசி யானையின் பாடம் செய்யப்பட்ட பஞ்சடைத்த உடல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கலாம்.

டுமீல்! அதோ கோடிக்கணக்கான ஆண்டுகள் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைந்த, இப்புவியில் வாழும் உரிமையை நமக்கு முன்பே பெற்றுவிட்ட, தந்தம் தாங்கிய மேலும் ஒரு கம்பீரமான ஆண் யானை சுடப்பட்டு, காடே எதிரொலிக்கும் கதறலுடன் பிணமாகச் சாய்கிறது. இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்?

**ச. முகமது அலி, க. யோகானந்த்**

### தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மேல் கவிஞன் தன்னுடைய குறிப்பை ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி (தன்குறிப்பேற்ற அணி) எனப்படும்.

எ.கா: சிலப்பதிகாரத்தில் கோவலனும், கண்ணகியும் பூம்புகாரிலிருந்து புறப்பட்டு மதுரைக்கு வருகிறார்கள். மதுரை எல்லையை அவர்கள் வந்தடைகிறபோது மதுரை நகரக் கோபுரத்தின் கொடியானது காற்றில் அசைந்தது. இது இயல்பான நிகழ்ச்சி.

இதனைக் காப்பிய ஆசிரியர் இளங்கோவடிகள் கூறும்போது

"வாரல் என்பபோல் மறித்து கைகாட்ட"

என்று குறிப்பிடுகிறார். கோவலன் கண்ணகியரே நீங்கள் மதுரைக்குள் வராதீர்கள் என்று கையசைத்துக் கொடியின் அசைவு கூறுவதாக அமைந்துள்ளதாம். இவ்வாறு அமையப் பாடுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

எ.கா. 2 மூடித்திறந்த விழியிரண்டும்
பார்பார் என்றன
முந்தானை காற்றிலாடி
வாவா என்றது.

## செயல்பாடுகள்

- 'இயற்கையை அழிப்பதால் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன' என்னும் கருத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் கருத்தைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.
- இயற்கை பல்வேறு சுரண்டல்களுக்கு ஆளாகிறது எனும் தலைப்பில் சொற்பொழிவு உரை ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
- சிட்டுக்குருவி என்ற தலைப்பில் சிறுகவிதை எழுதுங்கள்.
- காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி வனத்துறை அதிகாரிக்கு வேண்டுகோள் கடிதம் எழுதுங்கள்.
- காட்டு விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- இயற்கை எழில்மிக்க புகைப்படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குங்கள்.
- இணைவோம் இயற்கையுடன் என்ற தலைப்பில் அந்திமழை என்ற அலகின் அடிப்படையில் செயல்திட்டம் ஒன்று தயார் செய்யுங்கள்.
- ஆடம்பர வாழ்க்கையால் ஏற்படும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் குறித்துத் தலையங்கம் எழுதுங்கள்.

அலகு

# 2

# விழுதுகள்

மொழி மனிதனைப் பண்படுத்துவதுடன் வழிநடத்தவும் செய்கிறது. மேலும் சமூகத்தின் மூலதனமாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் விளங்குகின்றது. மொழியால் மட்டுமே சமூகத்தின் வளர்ச்சியை அளவிட முடிகிறது. எனவே மொழியால் ஆன பண்டைய இலக்கியங்களையும் அவற்றின் தொன்மையையும் மாணவர்கள் அறிதல் அவசியம். தமிழ்மொழி செவ்வியல் தன்மை கொண்டது. மொழியும் இலக்கியமும் சமூகத்தை மேம்படுத்துகின்றன. இலக்கியம் மகிழ்ச்சியைத் தருவதோடு சிந்தனையைத் தூண்டவும் செய்கிறது. மொழிப்பற்றை மாணவர்களிடம் ஏற்படுத்தித் தாய் மொழி மீது ஈடுபாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் இவ்வலகு உருவாக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- *தமிழ் மொழியின் தொன்மையையும், சிறப்பினையும் உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள்.*
- *தமிழ்மொழியின் இலக்கிய வளத்தினை வெளிப்படுத்தும் சொற்பொழிவுரை தயார் செய்கிறார்கள்.*
- *கவிதைகளில் வெளிப்படும் அழகுணர்ச்சியை உள்வாங்கி நயம் பாராட்டுகிறார்கள்.*
- பண்பாட்டு வளர்ச்சிக்கு இலக்கியம் உதவுகிறது என்பதை அறிந்து கட்டுரை எழுதுகிறார்கள்.
- சிறுகதையின் உத்திகளையும் மொழிநடையினையும் அறிந்து சிறுகதை எழுதுகிறார்கள்.
- மொழிக்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள உறவு குறித்து உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயாரிக்கிறார்கள்.
- இலக்கிய நயமிக்க நூற்களை வாசித்து நூற்குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- இலக்கிய நயமிக்க பாடல்களைத் திரட்டித் தொகுக்கிறார்கள்.

# மூத்த மொழி



## தமிழ்த்தாய்

ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்

மூன்று குலத் தமிழ் மன்னர் என்னை
மூண்டநல் லன்போடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே – உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்

கள்ளையும் தீயையும் சேர்த்து – நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் – பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

சாத்திரங் கள்பல தந்தார் – இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன் – தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்

நன்றென்றுந் தீதென்றும் பாரான் – முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் – வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான்

கன்னிப்பருவத்தில் அந்நாள் – என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு – பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்

தந்தை அருள்வலி யாலும் – முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் – என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் – இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை – இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

## தமிழே தனிமொழி

உலகப் பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் பல்வேறு மொழிகள் தோன்றிக் கிளைத்துச் செழித்து வளர்வதற்கு அடிப்படையாக உள்ள சில தொன்மையான மொழிகள் செம்மொழி களாக மதிக்கப்படுகின்றன. அவை அரேபியம், பாரசீகம், கிரேக்கம், லத்தீன், ஈப்ரூ, சீனம் போன்றவை ஆகும்.

இதைப் போலவே பழம்பெரும் நாடாகிய பாரதத்தின் பண்பாட்டுக்கும் நாகரிகச் சிறப்புக் கும் ஆணிவேராக அளவிடத்தக்க மொழிகள் இரண்டே ஆகும். ஒன்று வட பகுதியில் இருந்த வடமொழி. இன்னொன்று தென்பகுதியில் செங் கோலோச்சிய தென்மொழியாம் தமிழ்மொழி. வளமும் எளிமையும் தூய்மையும் காத்துப் பிறமொழிக் கலப்பு ஏற்படும் போதெல்லாம் கரைந்து விடாமல் தனித்தே நிற்கும் தனித் தன்மையும் உடையவை செம்மொழிகளாகச் சிறக்கும் சீர்மை சான்றவை. இவ்விலக்கணங்கள் முற்றாக நம் தமிழுக்கும் பொருந்துவதால் தமிழ் செம்மொழியே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

அ.ப. பாலையன்

**எது செம்மொழி**

திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழிநூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதினுணரவல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டு மொழிக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறமொழிச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். எனவே தமிழ் செம்மொழியென்பது திண்ணம்.

பரிதிமாற்கலைஞர்

சொல்லவும் கூடுவ தில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் – ஆ
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றி டுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

தந்தை அருள்வலி யாலும் – இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் – புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.

மகாகவி பாரதியார்

**மகாகவி பாரதியார்**

1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டையபுரம் என்ற இடத்தில் பிறந்தார். தந்தை சின்னச்சாமி ஐயர். தாயார் லட்சுமி அம்மாள். இயற்பெயர் சுப்பிரமணியன். பாரதி என்பது எட்டையபுரம் மன்னர் அளித்த பட்டப் பெயராகும். மனம், மொழி, மெய்யால் நாட்டு விடுதலைக்காகப் போராடியவர் தேசிய கவி பாரதியார். குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை இவரது முப்பெரும் பாடல்கள்.

## செயல்பாடுகள்

- ☞ தமிழ்ப்புலவர்கள், இலக்கியங்கள், வகைகள் ஆகியவை குறித்து ஆசிரியரும் மாணவரும் கலந்துரையாடுங்கள்.
- ☞ தமிழ்மொழியின் இலக்கிய வகைகளைக் குழுக்களாக விவாதித்துப் பட்டியலிடுங்கள்.
- ☞ தமிழ் மொழியின் சிறப்பினைப் பழமை, இலக்கியவளம், இலக்கணச் சிறப்பு, தனித்தமிழ், தாய்மை போன்ற பல்வேறு தலைப்புகளில் குழுக்களாகப் பிரிந்து குறிப்புகள் தயார் செய்து வாசியுங்கள்.
- ☞ பள்ளி இலக்கிய மன்றத்தில் நிகழ இருக்கும் போட்டிக்காகத் தமிழ்மொழியின் சிறப்பினை வெளிப்படுத்தும் கட்டுரை ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
- ☞ பாரதியின் கவிதைச்சிறப்பு என்னும் தொகுப்பில் வெளியிடத் தமிழ்த்தாய் வாழ்த்துக் கவிதையினை நயம்பாராட்டி எழுதுங்கள்.
- ☞ தமிழ்த்தாய் தானே பேசுவது போல் அமைந்த பாரதியின் கவிதையினைப் போன்று இன்று தமிழ்த்தாய் பேசினால் எப்படி அமையும்? கவிதை எழுதுங்கள்.
- ☞ பாரதி தேசிய கவி என்ற தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

# யான் வேண்டேன்



## நேர்காணல்

தமிழ் இலக்கியச் சூழலில் அறுபதுகளில் எழுத வந்த படைப்பாளிகளில் மிக முக்கியமானவர் ஆ.மாதவன். இவரது தாய் தந்தையர் கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இவர் பிறந்து வளர்ந்ததெல்லாம் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில். வீட்டில் பேசுவது தமிழ். பள்ளியில் படித்தது மலையாளம்.

இவர் எழுதிய நாவல்கள் புனலும் மணலும், கிருஷ்ணப்பருந்து, தூவானம் ஆகியவை. கடைத்தெருக்கதைகள், மோகப்பல்லவி, காமினிமூலம், ஆ.மாதவன் கதைகள்-1, ஆ.மாதவன் கதைகள்-2 ஆனைச் சந்தம், அரேபியக் குதிரை, சன்மானம் போன்ற சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இதில் அரேபியக் குதிரை என்ற சிறுகதைத் தொகுப்பைச் சிறந்த தொகுப்பாகத் தேர்ந்தெடுத்து, திருப்பூர் தமிழ்ச்சங்கம் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளது. தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற முதல் கேரள எழுத்தாளர்.

திருவனந்தபுரம் சாலை பஜாரில் பாத்திரக் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார் ஆ. மாதவன். இது உதயம் பத்திரிகைக்காக அவர் அளித்த பேட்டி.

♦ மலையாள மொழி இலக்கியப் பரப்பிற்கும், தமிழின் விசாலமான இலக்கியப் பரப்பிற்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் என்ன? நீங்கள் இருமொழி இலக்கியங்களையும்நன்கு கற்றுணர்ந்தவர் என்பதால் கேட்கிறோம். அதைப்பற்றிச் சொல்லுங்களேன்.

மலையாள இலக்கியம், தமிழ் இலக்கியம் என்று சொல்லும் பொழுது இன்றைய வாசகர்கள் மத்தியில் முற்போக்கு இலக்கிய வகையைத்தான் முன் வைக்கிறார்கள். தமிழின் சங்ககாலப் பெருமைகளையும், மலையாளத்தின் எழுத்தச்சன், குஞ்சன் நம்பியார் காலகட்டத்தையுமெல்லாம் விட்டுவிட்டு, விடுதலைக்குப் பின் உள்ள காலகட்டத்திற்கு வரும்போது மலையாளத்தில் தகழி, பஷீர், உறுபு, பொற்றெக்காடு என்றெல்லாம் தொடங்கப்படுகிறது.

மலையாளத்தின் முதல் நாவல் இந்துலேகா. தமிழில் பிரதாப முதலியார் சரித்திரம். இரண்டுமே ஏகதேசம் ஒரே காலகட்டத்தைச் சார்ந்ததுதான். மலையாள மக்களின் கலாச்சாரம் வேகமான முற்போக்கு அலைகளை அப்படியே சுவீகரித்துக் கொள்வது.

♦ மலையாளத்தில் எம்.டி. வாசுதேவன் நாயரின் படைப்புகள் நிறைய படமாக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் ஏன் இலக்கியப் படைப்புகளைப் படமாக்க சினிமா தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் தயங்குகிறார்கள்?

தமிழனின் ரசனையைப் பணஆசை கொண்ட பெருந்தனக்காரர்கள் தங்கள் சுயநலத்திற்காகத் திசைதிருப்பி அதீத உணர்வுகளையே சினிமா ஆக்குகிறார்கள் இதன் விளைவு வாழ்க்கை என்பதே இந்தச் சபலத்தில் இருந்து கிடைக்கும் விமோசனம்தான் என்று பாமரன் நினைக்கிறான். பணக்காரனிடமிருந்து பெருமுதலைப் பறித்தெடுத்து ஏழைக்கு விநியோகிக்கும் வன்மம் நியாயமென்று பாமரனை நம்ப வைக்கிறார்கள். 35 சதவிகித மதிப்பெண்கள் வாங்கும் ஏழையே முன் நிற்கத் தகுதியுடையவன் என்று போதிக்கப்படுகிறது. இந்தப் பலவீனத்தின் விளைவால்தான் திரையில் போலிவீரம் காட்டும் தலைவனை நாட்டுத் தலைவனாகக்கூட ஏற்றுக்கொள்ள முன் வருகிறான். இந்தப் பலவீனம் படித்தவர்கள் நிறைந்த மலையாளச் சமூகத்தில் மிகவும் குறைவு.

### இலக்கணம் மொழியைப் பாதுகாக்கும் முறை

ஒரு மொழியின் பண்புகளை அதன் இலக்கணம் நன்கு பாதுகாக்கும் என்னும் உண்மைக்குத் தமிழிலக் கணமே தக்க சான்று. தொன்று தொட்டுப் பல இனத்தார் தமிழ் நாட்டிற்போந்து தமிழரோடு கலந்துள்ளார்கள். அவ்வினத்தாருடன் வந்த பல மொழிகளும் தமிழ் மொழியோடு கலந்திருக்கின்றன. ஆதியில் ஆரியர் வந்தனர். அவர் மொழியாகிய ஆரியத்தோடு தமிழ் அளவளாவிற்று. அப்பால் இசுலாமியர் வந்தனர். அவருடன் வந்த அரேபியத்தோடு தமிழ் உறவாடிற்று. சென்ற முந்நூறு ஆண்டுகளாக ஆங்கிலத்தோடு தமிழ் பழகிக் கொண்டிருக்கின்றது. ஆயினும், ஆதியில் வந்த ஆரியமாவது, இடைக்காலத்தில் வந்த அரேபியமாவது, பிற்காலத்தில் வந்த ஆங்கிலமாவது தமிழின் நீர்மையைக் கெடுத்துவிடவில்லை. தமிழின் உருவத்தைக் குலைத்துவிடவில்லை. இதற்குக் காரணம் தமிழ் இலக்கணமே.

ஏனைய மொழிகளில் இல்லாத இலக்கணம் ஒன்று தமிழிலே உண்டு. அது பொருள் இலக்கணம் எனப்படும். இலக்கியங்களில் எடுத்தாளப்படும் பொருளை அகப்பொருள் என்றும் புறப்பொருள் என்றும் தமிழிலக்கண நூலோர் பாகுபாடு செய்தார்கள். பொதுவாக இன்பம் அகத்திலும், வீரம் புறத்திலும் அடங்கும். காதலர் இருவர்

♦ திருவனந்தபுரம் வாழ் தமிழ் எழுத்தாளர்களுக்கும் கன்னியா குமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் அவ்வளவாக ஒத்துப் போக வில்லையே, இதற்கு என்ன காரணம்?

யாரோடு ஒத்துப்போகவில்லை என்பதைக் குறிப் பிட்டுச்சொல்லியிருக்கலாம். நாஞ்சில்நாடன் இன் றைக்கும் அண்ணாச்சி என்று சொல்லி என் மேல் காட்டும் அன்பும், நேர்மையும் ஒளிவு மறைவற்றது. இலக்கிய விசாரங்களுக்கு அப்பால் நாஞ்சில் நாட்டு மக்களின் உண்மை முகங்களைக் கலைநயத்தோடும், உயிர்த்துடிப்போடும் சொல்வதில் இன்றுவரை நாஞ்சில் நாடன் முதல் அணியில் நிற்பவர் என்பது என் அழுத்தமான கருத்து.

♦ அப்படியானால் கிருஷ்ணன்நம்பி கதைகள் உங்களை ஈர்க்கவில்லையா?

கிருஷ்ணன் நம்பி நல்ல கதைகள் சிலவற்றை எழுதி யவர். அவ்வளவுதான்.

♦ தமிழ் இலக்கியத்தில் எழுபதிலிருந்து எண்பத்தைந்து வரையிலும் யதார்த்தப் போக்குப் படைப்புகள் வந்தன. அதன்பிறகு இந்த இருபது வருட நவீன, பின் நவீனத் துவப் போக்குகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

ஒரு மொழியின் இலக்கியத்தில் மாறுதல்கள் வருவது இயல்பான ஒன்றே. நீங்கள் குறிப்பிட்டது போலவே தமிழ் இலக்கியத்தில் விடுதலைப் போராட்டத்தின் அலைகள், பிறகு புரட்சிச் சிந்தனைகளின் காலகட்டம் என்றெல்லாம் மாறுதல்கள் வந்தன. தாமரை, தீபம், கணையாழி, சுபமங்களா என்றெல்லாம் புதிய மலர் மணங்களுடன் இலக்கியப் படைப்புகள் விரிவு கொண்டிருந்தன. தமிழ் இலக்கியத்தில் நின்று நிலவி இருந்த மேல்மட்ட ஏகபோகம் விலகி, எல்லா மட்டத் திலுமான பரந்த நோக்கும் இலக்கியமும் விரிவு பட் டது. புதிய புதிய எழுத்தாளர்கள் தோன்றினார்கள். இதில்வேடிக்கை என்னவென்றால், அதிகம் படித் தவர்கள் என்ற வர்க்கம், தமிழனின் சராசரி அறிவு மட்டத்தின்மேல் புதிய இசங்களைக் கொண்டு வந்து புகுத்திபுதுமை என்று நடனம் ஆடத் தொடங்கியது தான்.இந்த அவலம் கொஞ்சமாகத் தலைதூக்கி வந்து தமிழ் அறிவு ஜீவிகளிடையே ஒருவித மயக்கத்தை உண்டு பண்ணியது. படித்தால்



கருத்தொருமித்து நிகழ்த்தும் இல்வாழ்க் கையே இவ்வுலகி லுள்ள இன்பங்களுள் தலைசிறந்ததாதலால் அகப்பொருள் இலக்கணம் காதலையும் கற்பையும் விரித்துச் சொல்லும். ஆண்மை யும் வீரமும் பெரும்பாலும் போர்க்களத்திலே வெளிப்படுதலால் போரின் தன்மை புறப்பொருள் இலக்கணமாம் தொல்காப் பியத்திலேயே காணப்படுகின்றது. இங்ஙனம் இலக்கியங்களிற் பயிலும் சொல் லையும் பொருளையும் தமிழிலக்கணம் வரையறை செய்வதாயிற்று.


இனி, செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் பாகுபாட்டைச் சிறிது பார்ப்போம். இதற்கு அடிப்படையாக உள்ளது இலக்கணமே. இக்காலத்தில் சிலர் செந்தமிழ் என்றால் கடுமையான தமிழ். பல்லையுடைக்கும் சொல்லை யுடைய தமிழ் என்று தவறாகக் கருதி இடர்ப்படுகின்றார்கள். பிழையற்ற தமிழே செந்தமிழ். இலக்கண வரம்பு கடந்து, கொண்டதே கோலமாக நடமாடும் தமிழ் கொடுந்தமிழ். செம்மையான தமிழ் செந்தமிழ். கோணலான தமிழ் கொடுந்தமிழ்.

**இரா.பி.சேதுப்பிள்ளை**

புரிந்துகொள்ள முடியாத குளறுபடித் தத்துவ இசங்களை சராசரிச் சிந்தனைபடைத்தவர்களின் முன்வைத்து உனக்குப் புரியாததற்கு நான் என்ன செய்வது என்று கொக்கரித்து நின்றது. தமிழன் இந்த மயக்கத்தில் விழுந்துவிட்டு கரையேற முடியாமல் தவிக்கிறான்.

♦ தமிழில் தற்போது வந்து கொண்டிருக்கும் சிறு பத்திரிகைகள் மற்றும் பெரும் பத்திரிகைகளின் செயல்பாடுகள் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

ஆரம்பத்தில் நான் சொன்னது போலவே போலியான வலிமை கொண்ட கதாநாயகர்களையும், அரைகுறை ஆடையணிந்த பெண்மணிகளையும் உலவவிடும் சஞ்சிகைகளாகவே இன்றைய பெரிய சஞ்சிகைகள் வலம் வருகின்றன.



சிறு சஞ்சிகைகள் என்ற பெயரில் வரும் பத்திரிகைகள் கூட இந்த சினிமா தாக்கங் களினாலேயோ என்னவோ- ஆளுக்கொரு கோஷ்டியை அமைத்துக் கொண்டு சிதறிப் போயிருக்கின்றன. இதில் நல்லதைத் தேடிப் போவதற்கு நல்ல வாசகனுக்கு நேர மில்லை. அதனால் இரசனையாளன் தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் பெட்டி களின் முன்னால் தவம் கிடக்கிறான். இது இன்றைய அவலம்.

♦ தாங்கள் சாகித்ய அகாதமி கமிட்டி உறுப்பினராக இருக்கிறீர்கள். அதன் போக்கு குறித்து என்ன சொல்கிறீர்கள்?

சாகித்ய அகாதமி இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லா மொழி இலக்கியங்களிலிருந்தும் திறமையானவர்களின் படைப்பைத் தேர்ந்தெடுத்து, மகுடம் சூட்டுவதற்கென மத்திய அரசு அமைத்த ஒரு நிறுவனம். இதை ஆரம்பித்து வைத்தவர்கள் நுட்பமான அறிவு கொண்ட பெரும் தலைவர்கள். காலப்போக்கில் அரசு நிறுவனங்களுக்கே உரிய பலவீனங்கள் அவ்வப்போது வந்து போகும் நிர்வாகிகளால் இந்த அமைப்புக்கும் ஏற்பட்டது. இதில் தமிழுக்குத் தான் நிறைய அவக்கேடுகள் வந்ததென்று நான் நினைக்கிறேன். மலையாளச் சூழலிலும் நான் இருப்பதனால் சொல்கிறேன். மலையாள இலக்கிய உலகத்திற்கு இந்த அளவு பலவீனங்கள் நேர்ந்ததில்லை. சாகித்ய அகாதமியின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவில் இருப்பதனால் மட்டும் உயர்மட்டத்தில் வேரூன்றிப் போயிருக்கும் விஷவிருட்சத்தை அசைத்துவிட முடியாது என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்துள்ளேன். அவ்வளவே.

**பேட்டி : சிவதாணு**

**உதயம் பத்திரிகை**

## செயல்பாடுகள்

- தமிழ்மொழி வளர்ச்சியடைய தமிழ் மாணவனின் பங்கு என்ற கருத்தில் குறிப்புகள் தயாரியுங்கள்.
- சாகித்ய அகாதமி பற்றிச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- மொழியை வளர்ப்பதில் சிறுபத்திரிகைகளின் பங்கு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- இலக்கிய ஆசிரியர் ஒருவரை நேர்காண்பதற்கான வினாநிரல் ஒன்று (ஆறு வினாக்கள்) தயாரியுங்கள்.

# களிநடம் புரிவாய்



## கூனி பேசினாள்

ஆங்கில நாட்டு சேக்ஸ்பியர், நாடகப் பெரும் புலவர். அவருக்கு இணை இதுவரை உலகில் தோன்றியதில்லை. தோன்றுவதும் அரிது. அவரெழுதி யுள்ள முப்பத்தேழு நாடகங்களும் எத்தனையோ பேராசிரியர்கள் சோதித்து வெளிவந்துள்ளன. அவற்றின் பொருளையும், நயத்தையும் அமைப்பையும் ஆராய்ந்து பெருமை பெற்றவர்களுள் அனேகர் அவர் பெயரால் சேக்ஸ்பியர் கழகம் எனும் நிலையமொன்றை நிறுவியுள்ளனர். நாடகங்களைப் பற்றிப் புதுவகை ஆராய்ச்சிகளை வெளியிட்டும், ஊக்கியும் பல நற்பணிகளை அது இன்றும் செய்து வருகின்றது. சேக்ஸ்பியரைப் பற்றிய எண்ணம் உலக மாந்தர் மனதில் வளர இத்தகைய ஏற்பாடுகள் எவ்வளவோ உதவுகின்றன.

காவியப் பெரும்புலவர் கம்பர். ஆனால் அவர் பாடிய இராமாயணத்திற்குத் திருந்திய பதிப்பில்லை. அதன் பொருளையும், நயத்தையும் அமைப்பையும் நன்முறையில் ஆய்ந்து கூறுவாரும் குறைவு. காவியப் பெரும்புலவர் கம்பர், மேல்நாட்டார், சேக்ஸ்பியரின் நாடகச்சிறப்புகள் என்றடுக்கும் பல சிறப்புக்களையும், தன் காவியத்திலே கொண்டுள்ளார்.

சேக்ஸ்பியர் கழகத்தின் சார்பில் நாடகாசிரியரும் நடிகரும் நாடகப் பண்பாராய்ச்சியாளருமான கிரான்வில் பார்க்கர் என்பார், சேக்ஸ்பியர்

நாடகங்களுக்கு முன்னுரை என்னும் பெயரில் தொடர்ச்சியாக ஐந்து நூற்களை வெளியிட்டிருக் கின்றார்.

வீரத்தால் மக்கள் மனதை சீசர் கவர்ந்தான். அவனது வானளாவிய புகழ், காசியஸ் என்பானை அழுக்காறடையச் செய்கின்றது. எனவே சீசரைக் கொல்லத் திட்டமிட்டு அவ்வூரில் கண்ணிய மனிதன் என்று எல்லோரும் மதிக்கும் புரூட்டஸ் எனும் நன்மகனைக் கருவியாகக் கொள்கிறான். புரூட்டஸின் மனதைக் கலைத்துத் தன் திட்டத்தை ஏற்கும்படிச் செய்து, சீசர் சபைக்கு வந்ததும் அவனைக் கொலை செய்யவும் ஏற்பாடு செய்கின்றான். கொலை நடக்கின்றது. ஊரார் கூடிவிடுகின்றனர்; காரணம் காரணம் என்று கேட்கின்றனர். புரூட்டஸ் காரணத்தைக் கூறுகின்றான். "என் நாட்டவர்களே, அன்பர்களே காரணத்தைக் கேளுங்கள். என் கண்ணியத்தை நம்புங்கள். அதற்கு மதிப்பு தந்து நீங்களே சீர்தூக்கி நியாயம் சொல்லுங்கள். யாரேனும் இங்கே சீசரின் மிக நெருங்கிய நண்பர்களிருப்பின் அவர்களுக்கு நான் கூறுகிறேன். நான் சீசரிடம் கொண்டிருந்த அன்பு அவர்கள் அன்பிற்குக் குறைந்ததன்று. அங்ஙனமாயின் நான் ஏன் சீசருக்கெதிராக எழுந்தேன் என அவர்கள் வினவலாம். சீசரிடம் குறைவாக அன்பு கொண்டதாலன்று. ரோமாபுரி மீது அவனை விடவும் அன்பு பூண்டிருந்தமையால். சீசர் வாழ நீங்கள் அனைவரும் அடிமைகளாக மடிய எண்ணுகிறீர்களா? அல்லது சீசர் இறக்க நீங்கள் சுதந்திர மக்களாய் வாழ விரும்புகிறீர்களா? சீசர் என்னிடம் அன்பு கொண்டிருந்தமையால் நான் வருந்துகின்றேன். அவன் வீரத்தைப் புகழ்கின்றேன். அவன் பேராசை கொண்டிருந்தமையால் அவனைக் கொன்றேன். அடிமைகளாக இறக்க விரும்பும் யாரேனும் இங்கிருக் கிறார்களா? எக்கீழ் மகனேனும் இருக்கின்றனனா? இருப்பின், வாய்திறந்து சொல்லுக. தான் ஒரு சுதந்திரநாட்டு மகன் என்று கூற விரும்பாத மடமை யாரிட மிங்கே இருக்கின்றது? இருப் பின் வாய் திறந்து சொல்லுக. இருப்பின், நான் அவர்களை வெறுக்கின்றேன். உங்கள் பதிலுக்குக் காத்து நிற்கின்றேன்"



### பகாப்பதம்

கல், உண் என்னும் சொற்களைப் பிரித்தால் பொருள் தரா. இவ்வாறு பிரிக்க முடியாத சொல் அல்லது பதம் பகாப்பதம் எனப்படும். (பகாப்பதம் – பகுக்க முடியாத பதம்)

| | | |
|---|---|---|
| பகுத்தல் | – | பிரித்தல் ; |
| கல் | – | பெயர்ச்சொல் ; |
| உண் | – | வினைச்சொல் |



என்று முடிக்கின்றான். ஊரார் ஒருவரு மில்லை. ஒருவருமில்லை என்று பதில ளிக்கின்றனர். புரூட்டஸ் தன் பேச்சை வெற்றியுடன் முடிக்கிறான்.

இந்நிலையில் சீசரின் நண்பன் அந் தோணி கொலை கேட்டுத் துடித்துப் பதறிக் கொலைஞர்களைப் பழிவாங்க முற்படுகின்றான். ஊர் மக்களைத் தூண்டித் தன் காரியத்தை நிறைவேற்ற வருகிறான். ஊர்மக்களோ கண்ணிய மான புரூட்டஸின் பேச்சில் மயங்கி சீசர் கொடியோன் என்று நம்பி நிற்கின்றனர். சொல்வல்லான் அந்தோணி தன்னிலையையுணர்ந்து கவனமாகப் பேசுகிறான். நண்பர்களே, ரோமாபுரி மக்களே நன்மகன் புரூட்டஸ், சீசர் பேராசை பிடித்தவன் என்றான். அது உண்மையாயின் அது பெருங்குற்றமே. அதற்குரிய தண்டனையையும் சீசர் அனுபவித்து விட்டான். புரூட்டஸின் அனுமதியால் இங்கே சீசரின் புதையற் சடங்கில் பேச வந்தேன். சீசர் என் நண்பன். நேர்மையும் உண்மையும் உடையவன். ஆனால் புரூட்டஸ் பேராசை பிடித்தவன் என்கின்றான். புரூட்டசோ நன்மகன். கண்ணியமானவன். கணக்கற்ற கைதிகளைச் சீசர் ரோமாபுரிக்குக் கொண்டு வந்தான். அவர்கள் செலுத்திய காணிக்கைகளைத் தானெடுத்துக் கொள்ளாது. இந்த நாட்டுக் கருவூலத்தில் சேர்த்தான். இது பேராசையா? ஏழைகள் அழுதபொழுது கடின மனமுடையவனாக அன்றே இருக்க வேண்டும். எனினும் புரூட்டஸ் பேராசை பிடித்தவன் என்கிறான். அவனோ கண்ணியமானவன். நம்மூர் விழாவில் நான் மும்முறை அரச முடியை அவனுக்குக் கொடுத்தேன். மூன்று முறையும் மறுத்ததை நீங்கள் காணவில்லையா? இது பேராசையா? பேராசை என்கின்றான் புரூட்டஸ். அவனோ கண்ணியமானவன். அவன் பேசியதை நான் மறுக்க வரவில்லை. ஆனால் நான் கண்ட உண்மையைக் கூறவந்தேன். நீங்களனைவரும் சீசரிடம்

## உப்பு

பலா இலையில்
செய்த கரண்டியில்
தும்பைப்பூ போலிருந்த
உப்புப்பரல் எடுத்து
ஆவி பறக்கும்
பொடி அரிசிக் கஞ்சியில்
இட்டபின்
மெல்லச் சொன்னாள் பாட்டி
உப்பிட்டாலே சுவையுண்டு
கஞ்சியில்
உப்புப்பரல் விழுந்து கரைந்து
மறைந்திடுவது போல்
உன் பாட்டியும்
நின்ற நிலையில்
ஒருநாள் மறைந்து போவாள்
இருப்பினும்
உந்தன் உப்பாயிருப்பேன்
இந்தப் பாட்டி
என்றும் என் கண்ணே
உன்னை விட்டெங்கு போவேன்

பளிங்குத் தட்டில்
இருந்து சிரிக்கும்
நல்ல சமையலுப்பு

அன்பு பூண்டிருந்தீர்கள். காரணமில்லாமலா? அங்ஙனமாயின் எக்காரணத்தால் அவன் வெட்டுண்டு கிடக்கும் இப்பொழுது கலங்காது நிற்கிறீர்கள்? நியாயமும் நேர்மையும் மனித மனதைவிட்டு ஓடிப்போய் விட்டனவா? சீசரின் முத்திரையிட்ட உயிலொன்று அவனறையில் கண்டெடுத்தேன். இப்பொழுது அதைப்படிக்க விரும்பவில்லை. படித்தால் சீசரின் பெருந்தன்மையையறிந்து உங்கள் மனம் கொடியவர்களைப் பொசுக்க மூண்டெழும், அவர்களோ கண்ணியமானவர்கள் என்று கூறுகின்றான்.

ஊரார் உயிலை வாசிக்க வேண்டினர். அவர்கள் ஆர்வம் பெருகுகின்றது. சீசரின் குற்றமற்ற தன்மையை உணர்ந்து பாதகர்களைக் கொல்ல எழுகின்றனர். சீசரின் குருதி கொப்புளித்துக் கிடக்கும் உடலை நெருங்கிக் கொடியோர் செய்த பாதகச் செயலை அடுக்கிக் கூறிவிட்டு இறுதியில் உயிலைப் படிக்கின்றான் அந்தோணி. இந்நாட்டவர் ஒவ்வொருவருக் கும் எழுபது பொன்னை வழங்கியிருக்கிறான்.

தனக்குரிய சோலையை உங்களுக்கும் உங்கள் வழிவரும் தலைமுறைகளுக்கும், உரிமைப்படுத்திச் சென்றிருக்கிறான் என்று முடிக்கின்றான். மக்கள் வெகுண்டெழுந்து புரூட்டஸ் முதலியோரைக் கொல்ல முற்படுகின்றனர். அந்தோணி நினைத்தது நிறைவேறியது. அவன் நிறைவேற்றிய காரியம் எல்லோர்க்கும் எளிதில் முடிவதன்று. அவன் பேச்சுத் திறமையும், அதனையமைத்த இயல்பும் எளிதில் அவன் நினைத்ததை முடிக்கின்றன.

புரூட்டஸின் கண்ணியத்தில் நம்பிக்கை வைத்து அவன் செய்ததை ஏற்று நின்ற மக்கள், அவனுக்கெதிராக எழுவதற்குக் காரணமாக இருக்கின்றது அந்தோணியின் பேச்சு. அங்ஙனமாயின் அப்பேச்சில் மனதை மாற்றவல்ல எத்திறம் இருக்கின்றது என ஆசிரியர் பார்க்கர் வினவி ஆராய்கின்றார். புரூட்டஸின் பேச்சிற்கும் அந்தோணியின் பேச்சிற்குமுள்ள பெரிய மாறுபாடு யாதெனின், புரூட்டஸின் பேச்சு, கருத்து நுட்பமிகுந்த நுண் பொருள் நிறைந்த பேச்சாக இருக்கின்றது. ஆனால் அந்தோணின் பேச்சு செயல் திட்பமுடையதாய்ப் பருப்பொருள் நிறைந்த பேச்சாக இருக்கின்றது என்கிறார். உயர்ந்த பண்புகளாகிய

உணவு மேஜைமீது
கடல் நீரிலிருந்து
சமையலுப்பு காய்ச்சுவார்கள்
என்ற
விஞ்ஞானப்பனையோலையில்
எழுதி
என் நாவுக்கு உரம் வாய்க்க
செய்தேன் முன்புநான்
இன்னொருநாள் கடல்கண்டேன்
நான் வெறும்
மண்ணில் கிடந்து புரளும்
காணாமல் போன
தன் குழந்தையை நினைந்து
நெஞ்சுசுரக்கும் பால்
எங்கும் நிற்காது ஓடிப்பரந்து
அதில்
முழுகி இறக்கும் ஒரு
அம்மாவைக்
கண்டேன் நான்.



ஒ.என்.வி. குறுப்பு

சுதந்திரம், நாட்டுப் பற்று, அடிமைநிலை, அன்பு, பேராசை இவற்றை வாதங்களாகக் கொண்டு புரூட்டஸின் பேச்சு அமைந்திருக்கின்றது. ஆனால் பாமரமக்கள் இவற்றில் உண்மைப் பொருளையெங்கே உணரமுடியும். உணர்ந்து அக்கொள்கைகளுக்காக எங்கே நிலைத்து நின்று போராட முடியும். அவர்களுக்குச் சுதந்திரத்தை விடவும் சீசர் விட்டுச் சென்ற எழுபது பொன்னே பெரியதாகத் தோன்றும். பாமர மக்களின் இயல்பறியாமல் மிகப் பெரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு சொற்கோபுரம் கட்டுகின்றான் புரூட்டஸ். ஆனால் அதன் அடிவானம் ஆழமாக இல்லாதிருக்கவே அந்தோணியலைக்கக் கீழே விழுந்து நொறுங்குகின்றது.

**விடுகவி**

கேள்வி :

முன்னொரு ஊரின்பேராம், முதல்எழுத்து இல்லாவிட்டால்
நன்னகர் மன்னர் பேராம், நடுஎழுத்து இல்லாவிட்டால்
கன்னமா மிருகத் தின்பேர், கடைஎழுத் தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம், ஊரின்பேர் விளம்புவீரே

பதில் :

பிட்டுக்கு மண் சுமந்து பேணி விறகு பெற்று
தொட்டிலுக்குள் காட்டு நரிக் கூட்டத்தை விட்டமைத்து
பித்தனென்றுபேர் வாங்கி பெண்ணும் தீயும் சுமந்து
அத்தனுறை மாமதுரை ஆம்

அந்தோணியின் பேச்சு பாமர மக்களுக் கேற்ப அமைந்திருக்கின்றது. சீசர் இருந்ததால் வந்த பெருமையும் நன்மையும் கூறி அவன் இறந்ததால் அவர்களுக்கு வரப்போகும் இழவை யும் கூறுகின்றான். கருவூலத்தை நிறைத்தது; அடிமைகளைக் கொணர்ந் தது. அரசமுடியை மறுத்தது; இவை எல்லாவற்றிற்கும் மேலாகப் பாமர மக்கள் ஒவ்வொருவருக்கும் எழுபது பொன்னைத் தந்து தன் பூஞ்சோலை யையும் அவர்களுக்கே உரிமையாக் கும் உயில், இவற்றை அந்தோணி கூறவே, மக்கள் மனமாறி புரூட்டஸிற்கெதிராக எழுந்து போர் செய்ய முற்படுகின்றனர். எனவே அந்தோணியின் பேச்சுப் பாமர மக்கட்கேற்ப அமைந்ததால் வெற்றியைத் தருகின்றது. சேக்ஸ்பியரின் சிறப்பைக் காட்ட இது ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்.

கம்பருக்கு இத்தகைய வாய்ப்பு ஏற்பட்டால் எங்ஙனமமைப்பார் என்று கேட்கலாம். அவரமைத்துள்ள ஓரிடத்தை நோக்குவோம்.

மன்னனின் ஆவியன்னவளாகிய கைகேயி, மன்னனின் உயிரைப் பருகும் கூற்றமாக மாறுகின்றாள். இராமாயணப் போக்கே அவள் மாற்றத்தால் மாறுகின்றது. இராமன் முடிசூடுவதை அவள் எதிர்த் திருக்காவிட்டால் இராவணவதம் நடந்திருக்காது. இராமனும் சீதையும் இலக்குவனும் வனவாசம் செய்திருக்கமாட்டார்கள். அவ்வளவு முக்கிய இடத்தை வகிக்கும் கைகேயியின் மனதை, மாற்றுகின்றவள் மந்தரை

என்ற கூனி. அடித்தொழில் செய்பவள். மனமாறிய கைகேயியிடம் தயரதன் எவ்வளவோ வேண்டுகின்றான்; இரக்கின்றான். எனினும் பலனில்லை. தயரதன் வேண்டுகின்ற விதம் யாது? இரக்கின்ற முறையெங்ஙனம்? மந்தரை எங்ஙனம் பேசி அவள் மனதை மாற்றுகின்றாள்? அரசன் சொல்லையும் புறக்கணிக்கச் செய்த மந்தரையின் சொல்லில் என்ன நன்மையிருக்கின்றது எனச் சிந்திக்கத்தக்கது. சிந்தித்தால் புரூட்டஸின் பேச்சில் என்ன குறையைக் காண்கின்றோமோ அதையே தயரதன் பேச்சிற் காண்போம். அந்தோணியின் பேச்சில் என்ன நிறையுள்ளதே அதே நிலை, கூனியின் பேச்சிலிருப்பதைக் காண்போம்.

சேக்ஸ்பியர் கதைக்கும் எடுத்துக்கொண்ட இவ்விராமாயணப் பகுதிக்கும் மாற்றமுண்டு. அங்கே முதலில் புரூட்டஸ் பேசுகின்றான். அதன் பின் அந்தோணி பேசுகின்றான். இங்கோ, முதலில் மந்தரை பேசுகின்றாள். அதன் பின் தயரதன் பேசுகின்றான். இறுதியில் பேசுகின்றவர்களுக்கு நன்மை சிலவுண்டு. இறுதியில் பேசுகின்ற வாய்ப்பு இருந்தும் தயரதன் சொற்கள் கைகேயி யின் செவியில் நிலைக்காமற் போய்விடு கின்றன. கூனியின் பேச்சு அவ்வளவு ஆழமாக அவள் மனதில் தைத்துச் செயலாற்றுகின்றது.



இருவர் பேச்சையும் ஆராய்வோம். கொடுமனக் கூனி, அண்ணல் இராமனுக்கு மணிமுடி சூட்டப் போகின்றனர் எனக்கேட்டுத் துடிக்கும் நெஞ்சினளாய்க் கைகேயி உறையும் கோவிலுக்கு வருகின்றாள். பவளவல்லி போல் துயிலும் கைகேயியை யெழுப்பிப் 'பேரிடர் பிணைக்க நண்ணவும் உறங்குகின்றனையே பேதாய்' எனக் கடிகின்றாள். கைகேயிக்கு ஒன்றும் விளங்கவில்லை. எனக்கேது இடர்? இராமனைப் பெற்ற எனக்கா இடர்? என்று அம்மாசில்லாக் கைகேயி பதிலளிக்கின்றாள். மந்தரை பெண்களினியல்பை அறிவாள். ஒருவனுக்குப் பல மனைவியராயின் அம்மனைவியரின் உள்ள நிலை யெங்ஙனமிருக்குமென மிக நன்கறிவாள். சக்களத்தி வாழ்வில் பொறாமை எந்தப் பெண்ணிற்கும் உண்டு. அதனைக் கடந்த பெண்கள் மிக மிகச் சிலரே, ஏன்? இல்லை

என்றே கூறலாம். மந்தரையும் கைகேயியிடம் அவள் சக்களத்தி கோசலைக்கு வாழ்வில் வரப்போகும் பெருமையைக் கூறிப் பொறாமைத் தீய்க்கு நெய்யூற்றுகின்றாள்.

வீழ்ந்தது நின்னலம் திருவும் வீழ்ந்தது என்று கூறியவள் அடுத்த வரியிலேயே வாழ்ந்தனள் கோசலை மதியினாலென்றாள். கைகேயியின் தாழ்வும் அவள் சக்களத்தி கோசலையின் வாழ்வும் சுட்டிக் காட்டுகின்றாள். இங்ஙனம் அவள் கூறிய அச்சொற்களும் கைகேயியைக் கலக்கவில்லை. நாளை இராமன் மாமுடி புனைகின்றான் எனக்கூறக் கேட்டு மகிழ்ந்து ஒரு முத்து மாலையைப் பரிசளிக்கிறாள். கூனியின் சொற்றிறம் பலிக்க வில்லை. மேலும் கூறுகிறாள். பரதன் தரையிலிருக்க, சீதை கொண்கன் அரியாசனத்திருப்பாள். நின் மகனாகப் பிறந்தும் பரதன் பிறந்திலன், நீ பெற்றதால், நின் மகனுக்கும் தீங்கு செய்கின்றாய் என்று மந்தரையடுத்துக் கூறுகின்றாள். தன் குழந் தைக்குத் தீங்கு வருவதை யெந்தத்தாய் அனுமதிப்பாள்? ஒரே மகனையுடைய ஒரு தாய் அனுமதிக்கவே மாட்டாள். கைகேயி எண்ணுகின்றாள் எனினும் கூனி கூற்றிற்கு இயையவில்லை. மேலும் கூனி கூறுகிறாள். முனிவரும் செல்வம் பெறின் தம் நிலை திரிவர். இராமன் அரசு பெறின் நீ கெடும் படியாக இடையறா இன்னல் இயற்றுவன். தன் மகன் அரசனெனின் இவ்வுலகம் கோசலை யின் உடமை. உனக்கும் உன் புதல்வனுக்கும் இப்பார் மேல் உரியது எது? அவள் தரும் பொருளல்லாமல் வேறு உடைமை யாது? வறுமை யென்றிரக்கின்றவர்களுக்கு ஒரு பொருள் கொடுக்க, அவனை இரப்பாயோ அல்லது வெட்கத்தால் மாண்டு போவாயோ? இறுதியில் கூனியின் பேச்சில் மயங்கி, கைகேயி மனம் மாறுகின்றாள்.



கைகேயியை மாற்றத் தயரதன் பேசுகின்றான். அவன் பேச்சு, எங்ஙனம் அமைந்திருக்கின்றது எனக் காண்போம்.

தலைவிரிகோலமாகக் கீழே கிடக்கும் கைகேயியை மானையெடுக்கும் ஆனைபோல் எடுக்கின்றான். அவளைத் தேற்றி அவள் வருத்தத்தை

வினவுகின்றான். கைகேயி தனக்கு முன்னரளித்த இரண்டு வரங்களையும் நினைவுறுத்தி ஒரு வரத்தால் தன் மகன் பரதன் அரசாள்வதும், மற்றொன்றால் இராமன் வனமாள்வதும் வேண்டுகின்றாள். பாம்பு கடித்த வேழம் போல தயரதன் சாய்கின்றான். ஆவி பதைக்க உயிர்க்கின்றான். யார் செய்த சூழ்ச்சி? எவர் செய்த வஞ்சம்? கூறுவாய் எனக் கேட்கின்றான். வஞ்சனையில்லை; நான் கேட்ட வரங்களைத் தருக என்று இரக்கமில்லாமற் பதிலளிக்கின்றாள் கைகேயி. மன்னனிதைக் கேட்டு வீழ்ந்து புலம்புகின்றான். கொடியவளே! என் ஆவிபோயினும், பெண் பழிவரினும் உன்னைக் கொல்வேன் எனப் பொங்கும் கை புடைக்க, வாய் கடிக்க, கைகேயி கேட்ட வரமிரண்டால் மதிமயங்கித் தயரதன் செய்யாததையும் செய்யத் தொடங்குகின்றான். அவள் காலின் மேல் விழுந்து வணங்குகின்றான்.

தன் மனைவியேயாயினும் இச்சந்தர்ப் பத்தில் அவளால் தன் கருத்தை நிறைவேற்ற வேண்டுமென நினைக்கின்ற அவளைப் பழிப்பதும், அவள் மகனைத் தாழ்த்திக் கூறுவதும், தயரதனுக்குத் துணை செய்யாது. பெண்ணியல்பறியாது, அவள் மனதில் எவை பதியும், எவை பதியா என்பதையு மறியாது, பட்டத்தை இராமனேற்காது பரதனே ஏற்கினும் அவளுக்கு வரும் தீங்கு யாதென்பதையும் தெளிவாகக் கூறாது, பண்புச் சொற்களால் தன் கூற்றை முடிக் கிறான். அக்கூற்று கைகேயின் மனதை மாற்றவில்லை. கணவன் கூறுகிறான் என்பதையும் அவள் மறந்து விடுகிறாள். அடிமைத்தொழில் செய்பவளின் கூற்று வெற்றி பெறுகிறது. கண்ணிய முள்ள புருட்டஸின் பேச்சு தோல்வியுற்று அந்தோணியின் கூற்று வெற்றி பெறுவதைப் போல் கூனியின் கூற்று வெற்றி பெறுகிறது. இருவரது கூற்றையும் கம்பர் நயம்பட அமைத்து நம்முள்ளத்தைக் கவருகிறார்.

### பகுபதம்

பகுதி, விகுதி, இடைநிலைகளாகப் பிரிக்கப்படும் சொல் பகுபதம் எனப்படும். அது பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

எ.கா.

கலைஞன் – பெயர்ப்பகுபதம் (கலை + ஞ் + அன்)
உண்டான் – வினைப்பகுபதம் (உண் + ட் + ஆன்)

### பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்று இன்றியமையாத உறுப்புகளாகும்.
பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளைக் கொண்டது பகுபதம் எனப்படும். இவைகளில் ஒன்றும் பலவும் குறைந்து வரும். பகுதியும் விகுதியும் பெற்றே வரும்.

சேக்ஸ்பியரின் நாடகங்களுக்கு எழுந்துள்ள திறனாய்வுகளைப் படித்தின்புறுபவர்களுக்குக் கம்பரின் சிறப்பு பல இடங்களில் மேலும் புலப்படும். அவர் புலமையின் மேன்மையையும் நாம் உணர முடியும்.

**வி.ஐ. சுப்பிரமணியம்**

**வி.ஐ. சுப்பிரமணியம்**

தமிழ் அறிஞர். சிறந்த ஆய்வாளர். கேரளத்தில் மொழியியல் துறையை வளர்த்தவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர். திருவனந்தபுரத்தில் சர்வதேச திராவிட மொழிக் கழகத்தை நிறுவியவர்.

## செயல்பாடுகள்

- பிறமொழிக் கலப்பால் தமிழ்மொழியின் இனிய சொற்கள் காணாமல் போகின்றன என்ற கருத்தினை வெளிப்படுத்தும் தலையங்கம் ஒன்றை எழுதுங்கள்.
- பண்பாட்டுச் சிறப்பினைச் சொல்லும் தமிழ் என்னும் தலைப்பில் தொகுப்பு வெளியிட கவிதைகளைத் திரட்டுங்கள்.
- பிறநாட்டு அறிஞர்கள் தமிழுக்காற்றிய தொண்டுகளையும் தமிழுக்களித்த நன்கொடைகளையும் படக்குறிப்புகளாகத் தொகுத்து வெளியிடுங்கள்.
- இருவேறு இலக்கிய உரையாடல்களைத் தேர்வு செய்து ஒப்பிடுங்கள்.
- தமிழ் மொழி இலக்கியவளம் நிறைந்தது என்பதை விளக்கும் சொற்பொழிவு தயாரியுங்கள்.

அலகு

# 3

# ஆலமரம்

இயல்பான எண்ணங்களும் சிறந்த சிந்தனைகளும் கலந்த வாழ்க்கையின் அனுபவ விளக்கங்களே நாட்டுப்புற இலக்கியங்கள். அவை வாழ்க்கையை வளப்படுத்திப் புதியனவற்றைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. நாட்டார் வழக்காறுகள் மக்களின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புறப் பாடல்களின் உள்ளடக்கமும் மொழியும் யதார்த்தமானது. பண்டைய வரலாற்றின் ஆவணங்களாக இவை அமைந்துள்ளன. பட்டறிவால் எழுந்த இவ்வாய்மொழி இலக்கியங்கள் மாணவர்களின் படிப்பறிவினை ஊக்குவிக்கும் என்ற நோக்கத்துடன் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- *நாட்டுப்புறப் பாடல் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகள் பற்றி விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.*
- *நாட்டுப்புறக்கதைகளை வாசித்து நவீனகால நடைமுறைகளோடு ஒப்பீடு செய்து கதை எழுதுகிறார்கள்.*
- *வெவ்வேறு வட்டாரங்களிலுள்ள நாட்டுப்புற வழக்காறுகளைத் தனித்தனியே தொகுத்து எழுதுகிறார்கள்.*
- *நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் தொகுத்து வகைப்படுத்துகிறார்கள்.*
- *நாட்டுப்புறக் கதைப் பாடல்களை வடிவமாற்றம் செய்கிறார்கள்.*
- *நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுகிறார்கள்.*

# களங்கமில்லா விளக்கம்



## பொய்க்கால் குதிரை

தமிழக நாட்டுப்புறக் கலைகளில் முக்கியமான ஒன்று பொய்க்கால் குதிரை. கோயில் விழாக்களில் இவ் ஆட்டம் தவறாமல் இடம்பெற்ற காலம் இருந்தது. தற்போது பொய்க்கால் குதிரை ஆட்டம் தன் பெருமையை இழந்து வருகின்றது. இந்நிலையில் இக்கலையில் சிறந்து விளங்கும் ராணுபாய் அவர்களிடம் நடத்திய பேட்டி இங்குப் பாடமாக வந்துள்ளது.

- இப்பவெல்லாம் ஜனங்களுக்குப் பொய்க்கால் குதிரை புடிக்காமப் போச்சே ஏன்?

யாரு சொன்னா ஜனங்களுக்குப் புடிக்கல்லென்னுட்டு? இப்பவும் இந்த ஆட்டம் ஜனங்களுக்குப் புடிச்சுதாங்க இருக்கு. பொருட்காட்சி, சினிமா, சர்க்கஸ்னு தஞ்சாவூர்ல எதுனாச்சும் புதுசா வந்தா விளம்பரத்துக்கு எங்களத் தாங்க கூட்டுவாங்க. மந்திரிங்க மாநாடு. அரசியல் பொதுக்கூட்டத்துக்கும் நாங்க ரோடுரோடா ஆடிகிட்டே நோட்டீசு கொடுத்துருக்கோம். வெளிநாட்லேருந்து கலாச்சாரத் தூது கோஷ்டி வந்தா தனீய்யா ஆடக் கூட்டுவாங்க. ஐந்தாண்டுத் திட்டம், கொளந்த தடுப்பூசி, குடும்பக் கட்டுப்பாடு, வெண்மைப்புரட்சி, பசுமைப்புரட்சீன்னு அரங்சாங்க ஊக்க விழா, வளர்ச்சி

விளாவுலெ எல்லாம் ஆடப்போகும்போது எங்கள இப்டீயே ரோட்ல வச்சே கூத்தடிக்கிறாங்களேன்னு தோணுமுங்க. ஆனாலும் ஜனங்கள் ரொம்ப ரசிச்சுப் பாப்பாங்க, பொய்க்கால் குதுரெ ஆட்டமிருக்கே, இது வகையே தனீ. யாராருந்தாலும் சரி ரொம்ப நேரம் ஆடிட்டே இருக்க முடியாது. தரைல ஆடறதில்லை இது. கட்டமேலே பெருவெரல்ல ஊணி ஆகாயத்துல ஆடறது. ரொம்ப நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. பாக்றதுக்கு ரொம்ப அலங்காரமா சொகம்மா சொலபமா இருக்கும். ராத்ரீல கியாஸ்லைட்ல மண்ணுத் தரைலேதான் இந்த ஆட்டம் சொகம். கட்டாந்தரைல, சிமிண்டுத்தரைல மேடையில எல்லாம் இந்த ஆட்டம் ஆட முடியாது. நாசூக்குப் பண்ண முடியாது. கரணந்தப்புனா மரணம். சுத்திச் சுத்தி வரணும். காலு பின்னினாப் போச்சு. ஜனங்க வெச்ச கண்ணு வாங்காம இப்பவும் பாத்து ரசிக்கறாங்கன்னா இதுதான் காரணம்.

♦ இந்த ஆட்டம் பிரபல்யம் ஆகாமப் போய்ட்ருக்கே ஏன்?

புதுசா யாரும் கத்துக்கத் தயாரா இல்லீங்க. கட்டெ மேலே ஆட்றது வித்தென்னு நெனக்கறாங்க. குப்புற விழுந்தா மூஞ்சி போய்டும். மல்லாந்து விழுந்தா புட்டம் போச்சு. காலங்காலமா இருந்த ஆட்டம் இனிமே இருக்காது. தஞ்சாவூர்ல நானும், எந் தம்பீ நாடிராவும்தான் பாக்கி. எங்களுக்குப் பின்னாடி யாருமில்ல. கத்துக்கிறதுக்கு யாரும் வர்றதுமில்ல. அவுங்களுக்கும் எப்படி ஸார் பிடிக்கும்? நாடகம்லாம் இப்ப யாரு பாக்கறாங்க? சினிமா வந்தப்றமா யாரு நாடகம் எங்கப்பா, பெரியப்பா, பெங்களூர் சுந்தரமூர்த்தி மாமா இவுங்கதான்.

♦ உங்க பேரு?

ஏம் பேரு ராணுபாய்

♦ இந்த பொய்க்கால் குதிரை ஆட்டம் தஞ்சாவூர்ல தான் தோணிச்சா? எப்போ தெரியுமா?

நாங்க மராட்டிய ஜாதியெ சேர்ந்தவங்க. தஞ்சாவூருக்கு மராட்டிய ராஜாவெல்லாம் வந்தப்போ நாங்களும் ராஜாவுக்கு சேவை பண்றது, பூஜை பண்றது, டான்ஸ் ஆடறது இதெல்லாம் பண்ணிட்டிருந்தவங்க. எங்களுக்கு பூர்வீகம் கோலாப்பூர் ஷதாரா. ஆனா எங்க பாட்டன் பூட்டன் காலத்லியே நாங்க தஞ்சாவூருக்கு வந்துட்டோம். எங்க குல தெய்வம் பவானியம்மன். பவானி பூஜை செய்யறதுதான் எங்க குலத் தொழிலுங்க. எங்க ஜாதி குந்தள ஜாதி. குந்தளங்கிறது ஒரு தாள வாத்தியமுங்க. ரெண்டு தப்லா மாதிரி வச்சிகிட்டு ஒரு வெரல் மட்டும் உபயோகிச்சு வாசிக்கிற வாத்யம் அது. அதுக்குப் பேரு

### புரவியாட்டம்

குதிரை வடிவிலான கூடு அணிந்து, அதன் மேல் சவாரி செய்வதுபோல் பாங்கு செய்து முன்னுக்கும் பின்னுக் கும் தூக்கி ஆடப்படும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் என அறியப்படுகிறது. ஆண்களும் பெண் களும் ராஜா ராணி வேடம் புனைந்து கொண்டு ஆடுவர். காலில் மரக் காலைக் கட்டியிருப்பர். புரவியாட்டம், புரவி நாட்டியம், பொய்க்குதிரை ஆட்டம் என வேறு பெயர்களிலும் இவ் ஆட்டம் அறியப்படுகின்றது. இந்த ஆட்டம் தஞ்சாவூரில் தோன்றிய தாகக் கூறப்படுகின்றது. கேரளத்தில் குதிரைக்களி என்று அழைக்கப் படுகின்றது. இக்கலை கோயிலும் சமூகமும் சார்ந்த கலையாகும். இந்த ஆட்டத்திற்கு முன்பு கொந்தளம் என்ற இசைக் கருவியைப் பயன்படுத்தினர். தற்போது நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடுகின்றனர். இக்கலை தமிழகத்தில் பரவலாக உள்ளது.

குந்தளம். குந்தளம் வாசிக்ற எங்களெ குந்தளக்காரங்கன்னு தான் சொல்வாங்க. எங்கதெரு பேரு கூட குந்தளக்காரத் தெருதான். எங்க தாத்தாவோட அப்பா காலத்துலதான் அது ஒரு ஆட்டமா வந்தது ஜனங்க நடுவுல. திருவையாறுல கோவில் வாகனத்துக்கெல்லாம் அலங்காரம், பண்ணிட்டிருந்த ராமகிருஷ்ணன் நாயுடுன்னு ஒருத்தர். அவர் தெருக் கூத்தாடுவர்.

அவரு பேருதான் ராமகிருஷ்ண நாயுடும்பாங்களே தவிர அவரு நாய்டு இல்ல. அவரு ஆசாரி. அவரு எங்க தாத்தா கிட்டக் கடன் வாங்குவாராம்.

தெருக்கூத்து, டிராமாவுக்கெல்லாம் புஜக்கட்டை, கிரீடம் எல்லாம் – ராஜா வேஷத்துக்கு செய்து கொடுத்திட்ருந்தவரு இந்த ராமகிருஷ்ண நாயுடு. எங்க தாத்தா ரொம்ப நல்லாப் பாடுவாரு. நாடகத்துக் கெல்லாம் போவாரு. ராமகிருஷ்ண நாயுடுவும் ரொம்ப நல்ல மனுஷனாம். எங்க தாத்தாகிட்ட ராமகிருஷ்ண நாயுடு தான் செஞ்சு வெச்ச பொய்க்கால் குதுரெ கால்ரெண்டையும் எடுத்துக் காட்டினாராம். இது என்னய்யா புதுசா இருக்கேன்னு தாத்தா கேட்டாராம். இராமகிருஷ்ணன் பொய்க்கால் கட்டை ரெண்டையும் தன் காலில் கட்டிகிட்டு, புஜக்கட்டை, கிரீடம் எல்லாம் கட்டிகிட்டு குதிரை வேசம் போட்டுக்கிட்டு லேசா ஆடிக்காட்டியிருக்காரு. தாத்தா அப்படியே அசந்து போயிட்டாராம். என்னா ஆட்டம்டான்னு, ரெண்டு பேருமா குந்தளம் கட்டி வாசிச்சு, ஆடிப்பாத்து, மெதுவா கொஞ்சம் கொஞ்சமா திருவிழா, கூத்து, கலியாணம், சாமி பொறப்பாடுன்னு எல்லாத்திலியும் ஆட ஆரம்பிச்சுட்டாங்க. ராமகிருஷ்ண நாயுடுக்குக் குடும்பம் கெடயாது. கூத்துக்குப் போனதுனால நாயுடுன்னு பேரு வச்சுக்கிட்டாராம். இந்த ராமகிருட்ணன் தான் மொத மொதல்ல பொய்க்கால் குதுரெ டான்ஸைக் கண்டுபிடிச்சவரு.

இந்த ஆட்டத்துக்கு பெரிய எலக்கணம், ஜதிசுரம் ஒரு மண்ணுங்கிடையாது. தாளத்துக்கு ஆட வேண்டியதுதான். இதுக்கு முந்திப் பொய்க்கால் குதுரெ ஆட்டம்னு ஒண்ணு தமிழ்நாட்ல கெடையாதுன்னு தாத்தா சொல்வாங்க. மூணு தலைமுறையா எங்க குடும்பத்தில எல்லாரும் பொண்ணுங்க உள்பட எங்க தாத்தா எங்க எல்லாரையும் தயார் செஞ்சாங்க.

### வெளிச்சம் படாத நிகழ்கலைப் படைப்பாளிகள்

சேலம் ஏர்வாடியில் உள்ள களரி தொல்கலைகள் மற்றும் கலைஞர்கள் மேம்பாட்டு மையம் சார்பில் தோல்பாவை, பொம்மலாட்டம் மற்றும் தெருக்கூத்துக் கலைஞர் அம்மாபேட்டை கணேசன் பற்றி விதைத்தவசம் என்ற ஒரு ஆவணப் படத்தை எடுத்துள்ளனர்.

இந்தக் களரி அமைப்பின் சார்பில் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் ஒரு செறிவான நாட்டுப்புறக் கலைவிழா ஏர்வாடி கிராமத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அப்போது ஏர்வாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறப்பான தொன்மை நிகழ்கலை முயற்சிகளை மேற்கொண்டு வரும் நாட்டுப்புறக்



கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதோடு, தோல் பாவை, பொம்மலாட்டம் மற்றும் கூத்து நிகழ்வுகள் இரவு முழுவதும் நடைபெறுகின்றன. சுற்றுப் புற மக்கள் மிகவும் ஈடுபாட்டுடன் விடிய விடிய அவற்றை மிகவும் லயித்துப் பார்ப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

பம்பரம் மாதிரி கழண்டு சொழண்டு ஆடுவாங்க பாருங்க. ஆச்சரியமா இருக்கும். வீட்ல இருக்கும்போது எப்போதும் ஆடி ஆடிப் பழகிகிட்டே இருப்போம். எங்க அப்பாவும் இத ரொம்ப அழகோட செய்வாரு. பாக்கவே ரொம்ப அம்சமா இருப்பாரு. ஏதோ நீங்க கேட்டீங்க. எனக்குத் தெரிஞ்சத சொல்றேங்க. எங்க ஜாதி வழக்கப்படி பொண்ணுங்க வெளியே வரப்படாது. ஆனா எங்க தாத்தா தைரியமா மராட்டிப் பொண்ணுங்களை ஆடப்பழக்கி முக்காட்டை எடுத்துட்டு தைர்யம் குடுத்து டான்ஸாட வெளியில கொண்டு வந்து பழக்கிட்டாரு.

- ராஜாக்கள், ஜமீன்தார், இது ஒரு கலை இல்ல– பரதநாட்டியம் மாதிரி தரம் கிடையாது – அப்டின்னு சொல்றாங்களே?

பரதநாட்டியம் – சங்கீதம் – தாளம் அடிப்படையாவச்சு ஆடுற கலைங்க. கேள்விப்பட்டிருக்கேன். எங்களுக்கு தெரியாதுங்க. யாரும் கத்துக் கொடுக்கவும் இல்லை. எங்க தாத்தா வேற புதுசா ஜனங்களோட நின்னுகிட்டு உற்சவத்துல கோவில்ல– ஜனங்களோடு கவனத்துக்கு ஏத்த ஏதோ ஒரு ஆட்டத்தப் பண்ணிக்காட்னாரு ஆனா இன்னிக்கு அதெ சுந்தரமூர்த்தி மாமா அற்புதமா அலங்காரமாப் பண்ணுது. நாங்க எங்களுக்குக் குடுத்த பாடம் மாதிரியே செஞ்சிக்கிட்டு இருக்கோம். தெருக்கூத்து மாதிரி, பொம்மலாட்டம் மாதிரி, பக்தியோட செஞ்சிக்கிட்டு தான் இருந்தோம். எனக்கப்புறம் என் மகன், மகள் எல்லாம் ஆடப் பழக்கி விட்டேன். நானே ஆறு வயசிலே கால்லெ கட்டெயக் கட்டி கஜ்ஜையைக் கட்டி ஆட வந்தேன். எங்க வீட்டுக்காரரும் நானும் இருபது வருஷத்துக்கு மேலே ஆடியிருக்கோம். இந்தியா பூரா – மெட்றாஸ், டெல்லி, சிலோன், சிங்கப்பூர் எல்லாம் போய் ஏராளமாக ஆடியிருக்கோம். மெடலெல்லாம் வாங்கியிருக்கோம்.

நேருஜீ, ராஜேந்திரபிரசாது எல்லாம் பாராட்டிப் பத்திரமே கொடுத்திருக்காங்க. ஆனா இப்ப எம் மகன் ஆடமாட்டேன்னு சொல்லிட்டு மார்க்கட்ல காய்கறி யாபாரம் பண்ணப் போய்ட்டான். எம் மருமவ ஆடும் – இன்னமும் நான் ஆட்றேன். இன்னும் ஒரு வருஷம் ரெண்டு வருஷந்தான் நான் ஆடலாம். அப்புறம் நெனைச்சுக்கூடப் பாக்க முடியாது.

சிறுவயதிலிருந்தே தந்தையின் ஆதரவுடன் இக்கலைகளை நன்கு பயின்றவரும் அதன் நுட்பதிட்பங்கள் நன்கு பழகிக் கலை அறிவும், தொழில் திறமையும் மிக்கவருமான அம்மா பேட்டை கணேசனை வெளி உலகுக்கு அறிமுகப் படுத்தும் விதமாகக் கூத்துக் குடும்பத்தின் ஆசிரியரான ஹரிகிருஷ்ணன் பல பொருளாதாரச் சிரமங்களை மேற்கொண்டு தயாரித்த ஆவணப் படம் இந்த விதைத்தவசம்.

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றதால் அம்மாபேட்டை கணேசனின் கலை மதிப்பும் மாதம் கிடைக்கும் உதவித்தொகை மூலம் அவருடைய பொருளாதார நலனும் மேம்படும் என்ற நோக்கில் அவரைப் பற்றிய குறிப்புகளுடன் அரசின் கலை பண்பாட்டுத் துறையை அணுகியபோது கலைஞர்களைத் தாமாகவே முன்வந்து கௌரவிக்கும் என்கிறார்கள்.

அவர்கள் கத்தி சலிக்கிறார்கள். சாப்பாட்டுக்கு ஆறு ருசி சதிருக்கு ஒன்பது ருசி என்பது போல அதில் கிடைக்கும் ருசிகளே அவர்களுடைய கலைக்கான வெகுமதி. சனம் குந்திப் பார்க்க எல்லாம் செய்யணும்னுதான் ரத்தம் சுண்டற வரைக்கும் ஆடுறோம் என்கிறார். அதற்கான வலிமையை அவர்கள் பெறுவது சுற்றியுள்ள பாராட்டிலிருந்துதான். தோல்பாவை மற்றும் கட்ட பொம்மலாட்டத்திலிருந்து அவர்கள் கூத்துக்கு மாறியதுகூட கூத்தில் வெளிப்படும் பலவித முகபாவங்கள், வண்ணங்கள், வெளிச்சம் மற்றும் நேரடி பாராட்டு இவை கருதித்தான்.

குமுதம் – தீராநதி

**பகுதி**

முதலில் நிற்கும் உறுப்பு. இது ஏவல் பொருளில் வரும்.

எ.கா.

நடந்தான்

நட என்பது பகுதி ;

வந்தான்

வா என்பது பகுதி

**விகுதி**

பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு

♦ ஏம் முடியாது?

பாருங்க ஸார். இந்த ஆட்டமே – ஒரு வித்தெ மாதிரின்னு சொன்னேன். இதுல அழகே வேகந்தான். அதோட சர்க்கஸ் பண்ணணும்.

♦ வருமானமெல்லாம் எப்படி, வாழ்க்கை எப்படி?

இருபது முப்பது வருஷத்துக்கு முந்தி இந்தத் தொழிலுக்கு இருந்த மரியாதெ இப்ப இல்லே. வருமானமும் அப்படித்தாங்க இருக்கு. ஆடறதுன்னு பொறப்புட்டா நாங்க ஆடறவுங்க மட்டும் போதாது. தாளம் வாசிக்கிறவுங்க – வாத்தியக்காரங்க எடையில கரகம் குறவன் குறத்தி டான்ஸ் ஆடறவுங்க எல்லாரும்தான் போயாகணும். ஒரு ராத்திரி முழுசும் ஆடனும்னு பேரு. இப்ப இதுக்கு எரனூறு முன்னூரு ரூபா தர்றாங்க. வருஷம் பூரா – ஆடக் கூப்பிடமாட்டாங்க. மூணுமாசம் – அறுவடை ஆகி – கோவில் உற்சவம் திருவிழா நடக்கிற காலம் – (ஏப்ரல், மே, ஜூன், ஜூலை) மட்டும்தான் ஆடக் கூப்பிடுவாங்க. அதுவும் இப்பவெல்லாம் ஜாஸ்த்தியா கோவில் உற்சவங்களையே காணும் நாங்களும் காயுறோம்.

இந்த ஏரனூறு முந்நூறு ரொம்பக் கொறச்சல்தான். வேற வழியில்லீங்க. வேற தொழில் தெரியாதுங்க. எங்க தொழில் செஞ்சவங்க முப்பது நாற்பது குடும்பம் இருந்ததுங்க. இப்ப ரெண்டே குடும்பந்தாங்க? மைசூர்ல சுந்தரமூர்த்தி மாமா கொஞ்சம் பேரெ தயார் பண்றாங்க. எங்க குடும்பங்கள் எல்லாம் இந்தத் தொழிலெச் செய்ய முடியாம வெவ்வேற தொழில் பண்ணப் போய்ட்டாங்க. நாசமாப்போன குடும்பங்களுண்டு. எங்க குடும்பங்கள்ள மட்டுமில்லீங்க? எங்க தொழிலுக்குத் துணையா இருந்த குந்தளம் வாசிக்கிறங்களும் இப்ப ஆம்படவே மாட்டேங்கறாங்க. குந்தளம் வாசிக்கக்கூட ஆளில்லெ. பத்து வருஷம் மிந்தியே இந்த நிலெமெ. நாங்க இப்ப பேண்டு வாசிக்கிறவங்க. நாதசுரம் வாசிக்கிறவங்க, டோலக், மிருதங்கம் வாசிக்கிறவங்க – எல்லாரையும் யாரோட வேணும்னாலும் போய் ஆடுறோங்க. என்ன பண்ண முடியும்? கொஞ்சம் பேரு இது ஒரு கலைங்கிறாங்க. கவண்மெண்டுலேந்து எங்களுக்கு எந்த உதவியும் கெடையாதுங்க. எங்க பேரெச் சொல்லி ரொம்பபேரு சாப்பிட்றாங்க. தஞ்சாவூருக்கு வர்ற எந்த வெளிநாட்டானுங்க கிட்டையும் எங்களை அலங்காரம் பண்ணிக் கொண்டு போயி நிறுத்தீடுவாங்க. ஒரு நாள் ஒரே ஒரு ஆட்டம். காப்பி, விருந்து, போட்டோ எல்லாம் குடுப்பாங்க அதோட சரி, மந்திரி பங்ஷன், கட்சிப் பிரச்சார ஊர்வலம், அரசியல் தலைவர் பிறந்தநாள் விழான்னு கூப்பிட்டாக்கூட அந்தக் காலத்ல கோயில் உண்டக் கட்டி வாங்கிச் சாப்பிட்டு ஆடினப்போ இருந்த திருப்தியில்லீங்க.

**மண்ணின் அடையாளங்கள்**

நாட்டுப்புறக் கலைகளைத் தமிழர்களின் நாடித்துடிப்பு என்றே கூறலாம். ஆனால் ஒரு காலத்தில் மிகச் சிறப்புடனும் செல்வாக் குடனும் விளங்கிய அக்கலைகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. கிராமங் களிலும் கோயில் திருவிழாக்களிலும் கட்டாயமாக நிகழ்த்தப்பட்டு வந்த கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம் போன்ற ஆட்டக் கலைகள் இன்றைய மக்கள் மத்தியில் மங்கிப் போயின. சினிமா ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் அவற்றின் இடத்தைப் பிடித்துக்கொண்டன. கலைகள் மறைந்து போனால் மண்ணின் அடையாளங்களும் மறைந்து போகும் என்பதை நினைவில் கொள்வோம்.

மகன் காய்கறித் தொழில் மற்றும் இன்னொருவர் ப்ளாஸ்டிக் கம்பெனியில் கும்பகோணத்திலும் வேலை பார்க்கப் போயிருந்தாலும் அழைப்பு வந்தால் ராணுபாயுடன் ராணுபாயின் புதல்வர்கள் மருமகள்களும் போய் ஆடுவார்களாம். பொய்க்கால் குதிரை கலைஞர்கள் இன்று தஞ்சையில் இவர்களைத் தவிர யாருமில்லை. மராட்டிய அரசவைகளிலும், நாயக்க அவைகளிலும், சென்ற ஒரு நூற்றாண்டாய் கோவில்களின் சாமி புறப்பாடுகளிலும், இன்றைய அரசின் விளம்பரங்களிலும் பொய்க்கால் குதிரை பயன்பாட்டு வருகிறது. திரைப்படங்களும், உபயோகித்துக் கொண்டுள்ளன.

பொய்க்கால் குதிரை நடனம் ஒரு நடனமேயல்ல. கலையெயல்ல என்று வாதிப்பவர்களும் சரி, பொய்க்கால் குதிரை ஒரு கிராமிய மக்கள் கலை என்று வாதிக்கும் மக்களன்பர்களும் சரி, இக்கலைக்கோ எக்கலைக்குமோ ஏதும் பயன் செய்துவிடவில்லை. வறுமையில் உழலும் ராணுபாய் நாடிராவ் குடும்பங்களை மறுமலர்ச்சியில் பூத்த எந்தச் சிந்தனைகளும் வளம் தந்து விடாது. இக்கலை மட்டுமல்ல, கலையே அதன் பிரயோகப் பிரயோஜனங்கைகளைத் தேடிக்கொண்டிருக்கும் காலம் இது. பொய்க்கால் குதிரையை அண்டிய கலைத் தொழில்களும் இன்றைய வியாபார வாழ்வில் நசுங்கி ஒழிந்துகொண்டிருக்கின்றன. யாருக்கு லாபம்? யாருக்கு மிச்சம்? அந்த சோகத்தைச் சொல்லிக் கொள்ளத்தான் யார் இருக்கிறார்கள்?

அழிந்து கொண்டிருக்கும் தஞ்சைக் கலைகள் இதுபோல் இன்னும் பல உள்ளன.

பேட்டியாளர் பிரகாஷ்

**இடைநிலை**

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு இடைநிலை எனப்படும். இவை மூன்று வகைப்படும்.

இறந்தகால இடைநிலைகள்
(த், ட், ந், இன்)

செய்தார் = செய் + த் + ஆர் ;
கண்டார் = கண் + ட் + ஆர்
வென்றார் = வெல் + ற் + ஆர்
பாடினான் = பாடு + இன் + ஆன்

நிகழ்கால இடைநிலைகள்
(கிறு, கின்று, ஆநின்று)

படிக்கிறான்,
படிக்கின்றான்,
படியாநின்றான்

எதிர்கால இடைநிலைகள்
(இல், அல், ஆ)

உண்டிலன்,
உண்ணலன்,,
காணாத

## செயல்பாடுகள்

- நாட்டுப்புறக் கலைகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- பொய்க்கால் குதிரை ஆட்டக்காரர் ராணுபாய் அவர்களைப் பாராட்டிக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.
- பழந்தமிழ்க் கலைகளைப் பாதுகாக்கவும் நிலைபெறச் செய்யவும் என்னென்ன வழிமுறைகளை மேற்கொள்ளலாம்? கட்டுரை எழுதுங்கள்.
- பொய்க்கால் குதிரைப் பாடப்பகுதியில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூயத் தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.
- பொய்க்கால் குதிரை கலையின் ஒப்பனையைக் குறிப்பாக எழுதுங்கள்.

# சுவடுகள்



## புதிய படைப்பாளிகளுக்கு

இன்று கவிதை எழுத நினைக்கும் இளைஞர்கள் முதலில் பாரதியார், நாமக்கல்லார், கவிமணி தேசிக விநாயகனார், கண்ணதாசன், அத்தோடு இன்றைய பிரபல புதுக்கவிதை படைக்கும் கவிஞர்களின் நூல்களையும் திருக்குறள், முத்தொள்ளாயிரம் முதலான நூல்களையும் ஆழ்ந்து படிக்க வேண்டும்.

அனைத்துப் பொருள்களிலும் கவிதா சக்தியின் ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ளது. அதை உணர்ந்து கவிதை எழுதத் தொடங்கலாம்.

முதலில் நாம் நாட்டுப்புற இலக்கியம் பற்றிச் சிறிது பார்ப்போம். நமது மூதாதையர்கள் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போதும், களை எடுக்கும்போதும், வண்டி ஓட்டும்போதும் இன்னபிற வேலைகளைச் செய்யும்போதும் கடின உழைப்பின் துயர்களை மறப்பதற்குத் தாமே இட்டுக்கட்டிச் சொந்தமாகப் பாடல்களைப் பாடுவார்கள்.

அந்த மக்களின் மன ஆழத்திலிருந்து எழும் ஏக்கம், வேதனை, விரக்தி, எக்களிப்பு, மகிழ்ச்சி, மருட்சி, வேட்கை, வெறுப்பு ஆகிய பல்வேறு உணர்ச்சிகள் இந்தப் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. இந்தப் பாடல்களில் எதுகை, மோனை, ஓசைநயம், உவமைகள் கவித்துவம் ஆகிய முறையான யாப்பிலக்கணத்திற்கு வேண்டிய யாவும் பொதிந்து கிடக்கின்றன. இத்தனைக்கும் அவர்கள் படிக்காதவர்கள்.

கவிதை என்றால் என்ன? இலக்கியம் என்றால் என்ன? யாப்பிலக்கணம் என்றால் என்ன என்பதைப் பற்றி ஏதும் அறியாதவர்கள்.

இதையே நாட்டுப்புறத்துப் பாடகர் பாடுவதைக் கேளுங்களேன்.

பாடறியேன் படிப்பறியேன், பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடறியேன், எழுத்தறியேன், எழுத்துவகை நானறியேன்.
ஏட்டிலே எழுதவில்லை எழுதி வைத்துப் படிக்கவில்லை
வாயிலே வந்தபடி வகையுடனே நான் படிப்பேன்.

மனதிலுள்ள உண்மையை எப்படி வெளிக்காட்டுகிறார் என்று பாருங்கள். இவர்களைப் போன்று நாமும் கவிதை பாடலாம். உள்ளத்துள்ளது கவிதை இன்ப ஊற்றெடுப்பது கவிதை என்று பாடுவார் கவிமணி தேசிக விநாயகனார். அதிகாலையில் எழுந்து ஏரினைத் தோளில் தூக்கிக் கொண்டு வயலுக்குப் போகும் கிராமத்து விவசாயத் தொழிலாளி சூரிய உதயத்தைக் கண்டதும்.

ஆகா, என்ன அழகாயிருக்கு என அதிசயித்து இரசிக்கிறார். அழகினைக் கண்டு இரசிக்கத் தெரிந்த அனைவரும் கவிதை உள்ளம் படைத்தவர்களே.

தங்கள் மனதில் மலரும் இனிய எண்ணங்களைப் பாட்டாகப் பாட முயன்றால் நிச்சயமாக அதுவே கவிதையாகப் பரிணமித்துவிடும்.

பாட்டிலே எவ்வாறெல்லாம் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியும் என்பதற்கு ஒரு தாலாட்டுப் பாடலைப் பார்ப்போம்.

ஆராரோ ஆரிரரோ, ஆராரோ ஆரிவரோ
யாரடிச்சா நீயழுதாய் ஆராரோ ஆரிவரோ
அடிச்சாரை சொல்லியழு ஆக்கினைகள் செய்திடலாம்
மாமன் அடிச்சாரோ மல்லிகைப் பூ செண்டாலே
அத்தை அடிச்சாளோ அரளிப் பூ செண்டாலே

தன்னோடு உடன் பிறந்தவனான மாமனுக்கு ஒரு மரியாதையும், தன் கணவனோடு உடன் பிறந்தவளான அத்தை மீது ஒரு அலட்சிய மனோபாவமும் இந்தக் கிராமத்துப் பெண்ணின் பாடலில் அருமையாக இழையோடுகிறது.

படிக்காத பாமரப்பெண்ணாலும் உணர்வுபூர்வமான பாடல் இயற்ற முடிகிறதல்லவா?

தன் கணவன் வியாபாரத்திற்காக அடிக்கடி வெளியூர் போய் விடுகிறான். நீண்ட நாட்கள் கழித்தே வீடு திரும்புறான். ஒரே குழந்தை பெற்ற இளம் பெண். கணவன் அருகிலிருந்து அன்பு வார்த்தை பேசி ஆதரவு காட்ட முடியாமல் வியாபாரத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறாரே என்ற ஆதங்கம் அவள் மனதில்.

ஒரு நாள் அவன் வருகிறான். அன்றே மீண்டும் போக வேண்டும் என்றுவேறு கூறுகின்றான். குழந்தை அழுகிறது. அவள் தாலாட்டு கிறாள். அவன் ஏன் குழந்தை அழுகிறது எனக் கேட்கின்றான். அவள் எண்ணத்தைப் பாடல் மூலம் மறைமுக நுட்பமாக உணர்த்துகிறாள்.

### முளைப்பாரி

தானானே தானானே
தானானே தானானே
வேளாரு கிட்டச் சொல்லி
கோளாறா ஓடொடச்சு
வட்ட வட்ட ஓடொடச்சு
குட்டமுள்ள முளைப்பயறு
ஆட்டாந்தொழு தெறந்து
ஆட்டெருவு அள்ளிவந்து
மாட்டெருவு அள்ளிவந்து
கடுகுலயுஞ் சிறுபயறு
காரா மணிப்பயறு
மிளகுளயுஞ் சிறுபயறு
முத்தான மணிப்பயறு
மொள போட்ட ஒண்ணா நாளு
ஒரெலையாம் முளைப்பாரி
ஒரெலைக்கும் காப்புகட்டி
ஒரு பானை பொங்கலிட்டு
முளைப்பாரி போடுங்கம்மா
முத்தாலம்மனைப் பாடுங்கம்மா
தானானே போடுங்கம்மா
தையலரே ஒரு குலவை

யாரும் அடிக்கவில்லை. அஞ்சுவிரல் தீண்டவில்லை.
தானே அழுகின்றான் தம்பித்துரை வேணுமுன்னு

இவ்வாறெல்லாம் கிராமத்துப் பெண்ணால் கவிதை பாட முடிகிறதல்லவா?

நாம் மலைகளைச் சார்ந்த வனங்களைப் பார்த்து இருக்கிறோம். மனிதர்கள் நடமாட முடியாத அடர்ந்த காடுகளும் உண்டு. மரங்களின் கிளைகள் அடர்ந்த காடுகளும் உண்டு. மரங்களின் கிளைகள் ஒன்றொடொன்று நெருக்கமாக இருப்பதால் அந்த மரங்களில் மந்திக் குரங்குகள் கூடத் தாவி ஓட முடியாது என்று அடர்ந்த வனத்தின் சிறப்பை.

'மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கம்' என்று பாடுவார் நக்கீரர், திருமுருகாற்றுப்படை என்ற சங்க இலக்கிய நூலிலே. அடர்வனத்தின் நெருக்கத்தை இதனினும் அழகாக ஒரு நாட்டுப்புற கவிஞர் பாடுவதைப் பாருங்கள்.

ஈப்புகுந்தால் இறகொடியும்
இண்ட முள்ளுக்காடு
கொசுப்புகுந்தால் இறகொடியும்
குறிஞ்சி மலைக்காடு

ஒரு பெரும் புலவருக்கு இணையாக ஒரு நாட்டுப்புறத்து ஆள் பாட முடியும் என்றால் நாமும் ஏன் அழகாகக் கவிதை எழுத முடியாது?

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்று திருக்குறளில் வரும் உவமையில் அனிச்சம்பூ எடுத்து முகர்ந்து பார்த்தால் வாடிப் போய் விடும் என்பார் திருவள்ளுவர்.

கையாலே பூ எடுத்தால் காம்பழுகி போகு முன்னு
விரலாலே பூ எடுத்தால் வேரழுகிப் போக முன்னு
பொன்னூசி கொண்டு பூத்த மலரெடுத்து
வெள்ளூசி கொண்டு வெளுத்த மலரெடுத்து

எடுத்து முகர்ந்து பார்த்தால் வாடிவிடும் என்பதைவிடக் கையால் எடுத்தாலே அழுகி விடும் என்பது இன்னும் அழகாக இருக்கிறதல்லவா!

இதைப் பாடியவர் ஒரு சாதாரண கவிக்காரர்தான். 'மழை பேஞ்சும் கெடுக்கும் பேயாமெயும் கெடுக்கும்' என்பது பழமொழி. 'கெடுப்பதூம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூம் எல்லாம் மழை' என்பார் திருவள்ளுவர். மழையின் இயல்புகள் பற்றி ஒரு நாட்டுப்புறத்துக் கவிஞன் பாடலைப் பார்ப்போமா?

கோடைமழை பெய்யாதோ
குறும்பரடு சாகாதோ

**நீ தானோ?**

தெள்ளுதமிழ் வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலி தீர்த்த
பெருமானும் நீதானோ?

மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம் போட்டுத்
தேன்பாய்ந்து நெல்விளையும்
செல்வமுளார் புத்திரனோ?

வெள்ளித் தேர்பூட்டி
மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்டமுள்ளார் புத்திரனோ?

வாரிப் படியளக்கும்
மகிமையோர் புத்திரனோ?
சேற்றிலொரு செங்கழுநீர்
திங்களொரு பூப்பூக்கும்
நூற்றிலொரு பூவெடுத்து
முடிப்பார் மகனாரோ?

மதுரை இருகாதம்
வாழ்மதுரை முக்காதம்
ஐம்பத்தாறு தேசம்
ஆள வந்த சீமானோ?

பாட்டனார் ஆண்ட
பதினெட்டு ராச்சியமும்
நாட்டமுடன் ஆளவந்த
ராசகுல நாயகமோ?

**– நாட்டுப்புறப்பாடல்**

மாசிமழை பெய்யாதோ
மலையில் வெள்ளம் சாயாதோ
ஏத்துமீனு ஏறாதோ
எங்க பஞ்சம் தீராதோ

அன்பு, பக்தி, மரியாதை உடையவர்களை அடிக்கடி பார்க்க முடியாதபோது படங்களை வைத்துப் பார்த்துக் கொள்வது நமக்கு இயல்பு.

கண்ணன் முகம் மறந்து போனால் - இந்த
கண்கள் இருந்து பயனுண்டோ?
வண்ணப் படமும் இல்லை கண்டால் - இனி
வாழும் வகை என்னடி தோழி -

இது மகாகவி பாரதியின் பாடல்.

ஒரு நாள் ஒரு பொழுதும்
உங்கமுகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து
உருவமும் செஞ்சுபாத்தேன் -

இது ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணின் பாடல்.

பெருங்கவிஞர்களுக்கு இணையாகக் கிராமத்துப் படிக்காத பாமரர்களாலும் பாட முடியும் என்றால் நம்மாலும் பாட முடியுமல்லவா?

ஒரு பஞ்சாலையில் பணிபுரிகிறாள் ஒரு பெண். உற்பத்தியாகின்ற நூல் விலையாகி ஊதியமும் வருகிறது. ஆனால் வருமானம் போதாமல் வரதட்சிணை கொடுக்க இயலாமல் தன் மகளைத் திருமணம் செய்து வைக்க இயலவில்லை. அவள் இதனை மனதில் பதியுமாறு உருக்கமாகப் பாடுகிறாள்.

நூறு அடியாய் கோபுரமாம்
நூலு நூக்கும் மில்லாவுசு
நூலு விலை ஆயிட்டாலும்
குமரி விலை ஆகவில்லையே

நாமும் இது போன்றே சூழ்நிலைகளை மையமாக வைத்துக் கவிதை எழுதலாம். சிலர் என்ன தலைப்பில் எழுதுவது என்று தான் புரியவில்லை என்கிறார்கள். தெலுங்கு மொழியில் மகாகவி ஸ்ரீ ஸ்ரீ கூறுவார்:

அக்கிபுல்ல, குக்கயில்ல, சப்புபில்ல
தீப்பெட்டி, நாய்க்குட்டி, சோப்புக் கட்டி
ஆற்றலார் கவிதை எது பொருளில்லை
ஆகா எல்லாம் அற்புதப் படைப்பே
உலகம் என்பது பதும வியூகம்

**பழமொழிகள்**

அகல இருந்தால் நிகள உறவு
கிட்ட வந்தால் முட்டப்பகை

அரிசி ஆழாக்கானாலும்
அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்.

ஆறு போவதே போக்கு
அரசன் சொல்வதே தீர்ப்பு

இரவற் சீலையை நம்பி
இடுப்புக் கந்தையை எறியாதே

உண்ட உடம்பிற்கு உறுதி
உழுத புலத்தில் நெல்லு

ஊசியைக் காந்தம் இழுக்கும்
உத்தமனை அன்பு இழுக்கும்

எலிவளை ஆனாலும்
தனிவளை வேண்டும்

ஓசை பெறும் வெண்கலம்
ஓசை பெறா மட்கலம்

காலம் போகும் வார்த்தை நிற்கும்
கப்பல் போகும் துறை நிற்கும்

செருப்பின் அருமை வெயிலில் தெரியும்
நெருப்பின் அருமை குளிரில் தெரியும்



கவிதை என்பது தீராத்தாகம்

ஆகவே எதைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை எழுதலாம். அதில் தீராத தாக உணர்வு வேண்டும். பாரதி பாடுவார்:

எழுதுகோல் தெய்வம்
எழுத்து தெய்வம்

இந்தக் கருத்தினை வைத்து எழுத்து என்கிற புனிதமான காரியத்தை ஆர்வலர்களாகிய நீங்கள் உடனே தொடங்கலாம்.

மனிதன் முயன்றால் முடியாதது ஏதும் இல்லை.
சந்திரனை தொட்டதின்று மனித சக்தி
சரித்திரத்தை மாற்றியது மனித சக்தி

என்று பாடுவார் பட்டுக்கோட்டையார்.

ஆகவே நமது சக்தியைப் புதிய எழுத்துப் பணிக்கு அர்ப்பணித்து ஏற்றத் தாழ்வில்லா, மதபேதமில்லா, வன்முறையில்லா, அமைதியான புதிய வாழ்க்கை வாழ புதிய சமுதாயத்தை உருவாக்க எழுதுவோம். செயலாக்கு வோம்.

உழுது விதைத்து விடு
என்றேனும் செடி முளைக்கும்
எழுதத் தொடங்கி விடு
என்றேனும் கவி பிறக்கும்.

**கொ.மா. கோதண்டம்**

**கொ.மா. கோதண்டம்**
நூலகத் தொழிலாளியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 100-கும் மேற்பட்ட நூற்களை எழுதி யுள்ளார். ஆருண்ய காண்டம் என்ற இவரது சிறுகதைத் தொகுதிக்கு இந்திய குடியரசுத் தலை வர் இலக்கிய விருது கிடைத்துள்ளது. மலேசியா பல்கலைக்கழகம் இவருக்கு முனைவர் பட் டம் வழங்கியுள்ளது. இவருடைய படைப்புக்கள் இயற்கை, விலங்குகள் பற்றியே மையமிட்டு அமைந்திருப்பவை.

## செயல்பாடுகள்

- அனிச்சமலரின் இயல்பினைக் குறித்துக் குறிப்பு தயாரியுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த தாலாட்டுப் பாடல் ஒன்றினை எழுதுங்கள்.
- பழம் பாடல்களுடன் நாட்டுப்புறப் பாடலை ஒப்பீடு செய்து கட்டுரை தயாராக்கவும்.
- நாட்டுப்புறப் பாடலின் மொழிநடைபற்றிக் குறிப்பு எழுதுங்கள்.

# மைல் கற்கள்



## கதைப்பாடல்கள்

கதையடங்கிய நாட்டுப் பாடல்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. இவையாவும் கிராமத்திலுள்ள உழைக்கும் மக்களிடையே இன்னும் செல்வாக்கு பெற்றிருக்கின்றன. இவைகளில் சில வகைப் பாடல்கள் பாடகர்களால் விழாக்காலங்களில் பாடப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்திலும், குமரி மாவட்டத்திலும் கோவில் கொடைகளின்போது வில்லுப்பாட்டுகள் பாடப்படுகின்றன. அறுவடைக்காலங்களில், திருநெல் வேலி மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் கட்டபொம்மன் கதைப்பாடல்களைக் கூத்தாக நடிக்கிறார்கள். தென்னாற்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் தேசிங்குராஜன் கதை பாட்டாகப் பாடப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கள்ளழகர் அம்மானை பாடப்படுகிறது. நாட்டுப்பாடலாக முதலில் தோன்றிய நல்லதங்காள் கதை, பாட்டாகப் பாடப்பட்டதுமன்றி நாடகமாகவும் நடிக்கப்பட்டது.

இப்பாடல்கள் அம்மானை, சிந்து, கும்மி, லாவணி, வில்லுப்பாட்டு, ஏசல் முதலிய பல உருவங்களில் இன்னும் நிலைபெற்றிருக்கின்றன. ஆனால் கிராம வாழ்க்கையோடு தொடர்பற்றுப்போன படிப்பாளிகளுக்கு இவற்றைப் பற்றி எதுவுமே தெரியாது. இப் பாடல்களை இழிவானவை எனவும் எண்ணுகிறார்கள். தமிழ்நாட்டில் பெரும்பகுதியான மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள். கிராம மக்களில் பெரும்பாலோர் உழைப்பாளிகள். உழவு, நெசவு, விறகு வெட்டுதல், ஆடுமாடுகள் மேய்த்தல், மண்பாண்டம்

செய்தல், பாய்முடைதல் முதலிய தொழில்களில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கிராம வாழ்க்கைக்கு ஆதாரமான உழைக்கும் மக்கள் இப்பாடல்களைப் பாடுகிறார்கள். எனவே உழைக்கும் மக்களின் பண்பாட்டை அறிந்துகொள்ள விரும்புவோர், இப்பாடல்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்பாடல்களைப் புராணக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப் பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் என்று மூவகையாகப் பிரிக்கலாம். அல்லியரசாணிகதை, பவளக் கொடிக்கதை, புவனேந்திரன் களவு மாலை, பார்வதி தட்சராஜன் சரித்திரம் முதலியன புராணக் கதைகளைத் தழுவியவை. ஆனால் இக்கதைகள் முற்றிலும் புராணக் கதைப் போக்கைத் தழுவியவை அல்ல. இரண்டொரு சம்பவங்களைப் புராணக் கதைகளிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு தமிழ்நாட்டு உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் கற்பனையை ஓடவிட்டுப் பின்னப்பட்டிருக்கும் கதைகளே இவை.

மகாபாராதத்தில் அர்ச்சுனன், சித்ராங்கதை என்னும் குமாரியை மணந்து கொண்டான் என்று வரும் சம்பவத்தை, கற்பனை வளத்தால் அல்லி அரசாணி மாலையாக எவரோ ஒரு கவி புனைந்துவிட்டார். அதைத் தொடர்ந்து தமிழ்க் கலாச்சாரத்திற்கும் வடநாட்டுக் கலாச்சாரத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தும் முறையில் பல கதைகள் தோன்றின. இவ்வாறு தோன்றிய கதைகளுள் ஒன்று ஏணியேற்றம் என்பது. இக்கதைக்கு ஆதாரம் எதுவும் மகாபாரதத்தில் இல்லை. ஆனால் இக்கதையில் வரும் பாத்திரங்களெல்லாம் மகாபாரதத்தில் வரும் பாத்திரங்கள். பாண்டவர்கள் நாடு கடத்தப்பட்டிருக்கும்போது சுபத்திரை தனியாக இருந்தாள். அவளைத் துரியோதனன், தன்னிச்சைக்கு இசையும்படிக் கேட்டான். அவள் அர்ச்சுனனது மற்றொரு மனைவியான அல்லி இருக்கும் மதுரை வந்து சேருகிறாள். துரியோதனன் அவளைத் தேடிக்கொண்டு வருகிறான். அவனை அவமானப்படுத்துவதற்காக அல்லி ஒரு தந்திரம் செய்கிறாள். ஒரு இயந்திர ஏணி செய்யச் சொல்லி அதன்மீது படுத்துக்கொண்டால் சுபத்திரையிடம் அனுப்பிவிடுவதாகச் சொல்லுகிறாள். அந்த ஏணியில் அவன் படுத்ததும் அது பலவிடங்களுக்கு அவனைக் கொண்டு செல்கிறது. போகிற இடங்களிலெல்லாம் பெண்கள் அவனை அடிக்கிறார்கள். கடைசியில் அவன் மனைவியிடமே அது அவனைக் கொண்டு தள்ளிவிடுகிறது. இப்படி ஒரு கற்பனைக் கதையைப் புராண கதாபாத்திரங்களை வைத்து உருவாக்கி இருக்கிறார்கள். புராணக் கதைகளைக் கேலி செய்யும் முறையிலும் சில நாடோடிப் பாடல்கள் இருக்-

**தேசிங்குராஜன் கதை**

இராஜபுத்திர பரம்பரையில் தோன்றித் தமிழ்நாட்டிலுள்ள செஞ்சியில் கோட்டை கட்டி மக்களின் மதிப்பை ஈட்டி மாவீரனாக விளங்கி வெம்போரில் வீரமரணம் எய்தி அழியாப் புகழைப் பெற்ற தேசிங்குராஜனின் சிறப்புமிக்க வரலாறு கதைப் பாடலாக மலர்ந்துள்ளது. டெல்லி பாதுஷாவே புகழ்ந்து பாராட்டிய மாவீரனாகத் தேசிங்குராஜன் விளங்கினான். முரட்டுக் குதிரை யின் பிடரியைப் பிடித்து அடக்கி யாளும் ஆண்மை மிக்கவன். தன்னைச் சுமந்து தன் எண்ணம் அறிந்து விரையும் பெருஞ்செயல்களைச் சாதனையாக்கிக் காட்டிய நிகரற்ற வீரனாகத் திகழ்ந்தவன்.



தேசிங்கு ராஜன் திருவரங்க நாதரை நினைத்து வணங்கும் இறைப் பற்றாளன். செஞ்சிக் கோட்டையில் அரங்கநாதனின் கோயிலை அமைத்துத் தினம் தினம் வணங்கி வந்தவன்.

தேசிங்கு ராஜனின் தோற்றமும் சீற்றமும் அனைவரையும் அச்சத்துடன் அலற வைக்கும். களம் புகுந்தால் எதிரிகள் யானைக் கூட்டங்களாகி விடுவர். தேசிங்கு சிங்க ஏறாகி அவர்களைத் தாக்கும் தனிப்பெரும் வீரனாகி விடுவான்.

கின்றன. பார்வதி கலியாணம் இவ்வகையைச் சார்ந்தது. தட்சராஜன் கதையும் அநேகமாக அப்படித்தான். இக்கதைகளில் புராணக் கண்ணோட்டத்திற்கு நேர் எதிரான கருத்துக்களைக்காணலாம். ஆகையால் புராணக் கதைகள் என்று சொல்லும்பொழுது, நாடோடிப் பாடல்களின் கதை மாறுதலில்லாமல் புராணத்தில் உள்ளதுபோல் இருக்கும் என்று கருத வேண்டியது இல்லை. புராணக் கதைகளை உழைப்பாளி மக்கள் எவ்வகையில் புரிந்து கொள்கிறார்களோ அம்முறையில் இக்கதைகள் மாற்றப் பட்டிருக்கும்.

இரண்டாவது வகையான கதைகள் சரித்திரக் கதைகள். இவற்றில் முக்கியமானவை தேசிங்குராஜன் கதை, கட்டபொம்மன் கதை, மருதுபாண்டியர் கதை, கான்சாகிப் சண்டை, பூலித்தேவர் சிந்து முதலியவை. இவ்வரலாற்று வீரர்களின் சரித்திரங்கள் பலவகையான உருவங்களில் நாட்டுக் கதைப்பாடல்களாக வழங்கி வருகின்றன. இக்கதைகளில் சரித்திரத்தை நாம் உழைக்கும் கிராம மக்களின் கண்ணோட்டத்தில் காண்கிறோம். இச்சரித்திர வீரர்களின் சிறந்த பண்புகளை இக்கதைகள் போற்றிப் புகழ்கின்றன. கட்டப்பொம்மன், மருது சகோதரர்கள், பூலித்தேவர் முதலிய வெள்ளையரை எதிர்த்த வீரர்களின் வரலாறு வழிவழியாக இக்கதைப்பாடல்கள் மூலம் நமக்குக் கிடைத்து இருக்கின்றன. உண்மை வரலாற்றை மறைத்துவிட ஆங்கிலச் சரித்திர ஆசிரியர்கள் செய்த முயற்சிகளை இப்பாடல்கள் முறியடித்து விட்டன. வெள்ளையர்கள் மறைத்து விட்ட பல நிகழ்ச்சிகளையும் இப்பாடல்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

இப்பாடல்களைக் கொண்டு மட்டும் சரித்திர நிகழ்ச்சிகளை நாம் உறுதியாக அறிந்து கொள்ள முடியாது. இவற்றை ஒதுக்கித் தள்ளி விட்டு, உண்மையான நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளவும் முடியாது. கிடைக்கும் சரித்திரச் சான்றுகளையும், நாட்டுப் பாடல்களையும் உற்றுநோக்கி உண்மைகளைச் சலித்துப் பார்த்து முடிவுக்கு வரவேண்டும்.

மூன்றாவது, சமூகக் கதைப்பாடல்கள். இவை வில்லுப் பாட்டாகவும், அம்மானையாகவும் வழங்கி வருகின்றன. வில்லுப்பாட்டுகளில் பெரிய பணக்காரரின் பேராசைக்கு ஏழை உழைப்பாளிகள் பலியாவதும், ஜாதிக் கட்டுப்பாட்டுகளை மீறி மணம் செய்து கொள்பவர்கள் ஜாதிக் கொடூரங்களுக்கு உள்ளாவதும், சொத்து

---

தேசிங்கு ராஜன் செஞ்சியை ஆண்டபோது அதனைச் சுற்றி நூற்று எழுபத்திரண்டு பாளையப் பட்டுகள் இருந்ததாகக் கதைப் பாடல் குறிப்பு தருகிறது. அவற்றுள் மிகச்சிறந்த ஆர்க்காடு பாளையப்பட்டு, நவாபு சைதுல்லாவின் கையில் இருந்தது. இரங்கநாத பிள்ளை அவனுடைய கணக்குப்பிள்ளையாக இருந்தார். மேலும் சேத்துபட்டுத் தாவுத்தான், திருவண்ணாமலை சுபங்கித்துரை, கள்ளக் குறிச்சி, தானுசாயபு, மதுரைசீமை பாளையத் தான், மலையாளத்தான், திண்டுக்கல்லு கொலு முகத்தான், திமிரிக் கோட்டை ஷேக் முகம்மது ஆகியோரும் சிறந்து விளங்கினர். பாளையங் களின் ஒரு காலத்து வரலாற்று ஓரளவு கண்டறிய இந்தக் கதைப்பாடல் உதவுகிறது.

ஆர்க்காட்டு நவாபு தேசிங்க ராஜனை எதிர்க்கத் துணிகிறான். அதை அறிந்த தேசிங்கு வீர முழக்கம் செய்கிறான்.

என்கையில் பலமிருந்தால் ஆற்காடு என்னது

உன் கையில் பலமிருந்தால் செஞ்சிக்கோட்டை உன்னது

வீரப்போர் நடக்கிறது. இசுலாமியப் படை பலமாகத் தாக்குகிறது. தன்னால் இயன்ற மட்டும் முயன்று போராடிய தேசிங்குராஜன் முடியாத நிலையில் தன் வாளை மேலே வீசி மார்பில் தாங்கி வீரமரணம் அடைகிறான்.

ஸ்ரீரங்கா என்று சொல்லி கீழே விழுந்தானாம்

ராஜா விழுந்ததைக் கண்ணாலே கண்டான் நவாபு சைதுல்லா.

தேசிங்குராஜன் தோற்று எதிரியின் கையில் பட்டு மானமிழப்பதை விரும்பாமல் தானே வாளை வீசி மாண்டு மடிந்ததை வியப்பாகப் பாராட்டிய ஆர்க்காட்டு நவாபு சைதுல்லா அவனை நல்லடக்கம் செய்து வீரமரியாதை செய்த பெருமையைப் பெறுகிறான்.



உரிமை இல்லாத பெண்கள், கூட்டுக்குடும்பத்தில் படும் துன்பங்களும், கதைப் பொருளாக அமைந்துள்ளன. இவை தவிர, ஊராரின் நன்மைக்காகப் பயிர்களைக் கொள்ளை போகாமல் பாதுகாத்த வீரர்களின் கதைகளும் கிராமத்தின் செல்வமாகிய ஆடுமாடுகளைக் கொள்ளை கொண்டு செல்பவர்களை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தவர்களது கதைகளும் பாடல்களாக வழங்குகின்றன. உயர்ந்த நல்ல நோக்கங்களுக்காக உயிர் விட்டவர்கள் கதைப்பாடல்களில் வீரர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

கிராமப்புற உழைப்பாளி மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு இக்கதைப்பாடல்கள் மிகச் சிறந்த சாதனம்.

கட்டபொம்மனைப் பற்றிய பல பாடல்கள் கோவில்பட்டித் தாலுகாவில் கிராமங்களில் வழங்கி வருகின்றன. சில கிராமங்களில் அறுவடை சமயங்களில் கூத்தாடும் குழுவினர் எட்டுநாள், பத்துநாள் கிராமங்களில் தங்கிக் கட்டபொம்மன் கதைப் பாட்டுப் பாடிக் கூத்தாக நடிப்பார்கள்.

சில குழுக்கள் முழுவதும் தமிழ்ப் பாடல்களாகவே பாடுவார்கள்.

வேறு சிலர், தெலுங்கும் தமிழும் கலந்த பாட்டுக்களைப் பாடுவார்கள். பொதுவாகப் பெண் கதாபாத்திரங்களின் கூற்றுக்களைத் தெலுங்குப் பாடல்களாகவும், ஆண் கதாபாத்திரங்களின் பேச்சுக்களைத் தமிழ்ப்பாடல்களாகவும் பாடுவார்கள்.

நாட்டுக் கதைப் பாடல்களைத் தேடிக் கண்டு பிடித்து வெளியிட வேண்டும்.

**நா. வானமாமலை**

**நா. வானமாமலை**

நாட்டுப்புறவியல் என்றாலே முதலில் நினைவுக்கு வருபவர் நா. வானமாமலை அவர்கள். அந்த அளவுக்கு நாட்டுப்புறவியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். வாய்மொழியாக வழங்கி வந்த பாடல்களையும் கதைகளையும் தொகுத்து எழுத்து வடிவில் கொண்டு வந்தவர்களில் முக்கியமானவர். தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள், தமிழர் நாட்டுப்பாடல்கள் போன்றவை இவரது முக்கிய தொகுப்புகள். ஆராய்ச்சி என்னும் இதழையும் நடத்தி வந்தார்.

## செயல்பாடுகள்

- நாட்டுப்புறக் கதைப்பாடல்களைத் திரட்டுங்கள்.
- உங்கள் வட்டாரத்தில் உள்ள நாட்டுப்புறக் கலைஞர் ஒருவரைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- பாட்டி சொன்ன கதை ஒன்றைப் புதிய நோக்கில் எழுதுங்கள்.
- நாட்டுப்புறப் பாடல் பதிப்பாளர் நா. வானமாமலை குறித்த செய்திகளைச் சேகரித்துக் கட்டுரை எழுதுங்கள்.

## வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடல்

தமிழ்ப் புராணங்கள் மற்றும் காவியக் கதைகளைப் படித்தாலோ வீரம் பற்றி பேசினாலோ, சட்டென்று நினைவுக்கு வருபவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்படுபவர் வீரபாண்டிய கட்டபொம்மன். 'வீரபாண்டியன்' என்றும், 'கட்டபொம்மன்' என்றும் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்றும், 'கட்டபொம்ம நாயக்கர்' என்றும் அழைக்கப்படும் இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆறு தசாப்தங்கள் முன்பே மண்ணில் ஆங்கிலேயர் களைத் துணிச்சலாக எதிர்த்தவர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி யின் ஆட்சித் தலைமை உரிமையை ஏற்க மறுத்து, தனது இறுதி மூச்சு வரை, ஆங்கிலேயர்களை அசாதாரண தைரியத்தால், வீறுகொண்டு எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் வீர வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் வியக்கத்தக்கன. வெள்ளையனை எதிர்த்துப் போராடத் தயாராகின்றான் கட்டபொம்மன். அதற்கு முந்தியநாள் இரவு, காணக்கூடாத பல தீய கனவுகளைக் காண்கிறாள் அவனது மனைவி. அவை யாவும் வரப்போகும் ஒரு பெரிய ஆபத்துக்கான அறிகுறிகள் என்றறிந்த அவள், அக்கனவுகளை யும் தீய சகுனங்களையும் எடுத்துச்சொல்லிக் கணவனைத் தடுப்பதாக வருகிறது இப்பாடப்பகுதி.

உள்ளாயுதங் கையில் தானெடுத்தான்
சபை உச்சிதமாக நடக்கலுற்றான்
கச்சை இறுக்கியே கட்டுகிறான் இடைக்
கட்டுகிறான் தொடை தட்டுகிறான்.
கெற்சிதஞ் செய்து புறப்பட்டான் வெள்ளையன்
கில்லிலி என்று குலவை யிட்டான்.
காட்டாத காளை புறப்படவே எதிர்
கண்டபேர் நெஞ்சந் திடுக்கிடவே
மெட்டுள்ள காளை புறப்படவே வெள்ளை
மீசை படபடவென்று ஆடிடவே
காவல்காரன் வெள்ளை புறப்படவே
அப்போ காகமுங் கட்டிக் குறுக்கிடவே
கூவென்று பல்லி குழறு தென்றாள் தண்ணீர்
குடித்த செம்பு தவறு தென்றாள்
பாவி யொருகுரல் தானேயழுகிறாள்
பராசக்தி தேவி தானறிய
காவல்காரன் மகன் வெள்ளையன் பெண் சாதி
ஆவிபடபடென்று ஆடினாளாம்



## பரதேசிகள்

பரதேசிகளுக்குப் பசியமர்த்தாமல் தான் சாப்பிடுகிறதில்லை என்று விரதம் பூண்டிருந் தார் ஒரு சம்சாரி. தினமும் பரதேசிகள் சாப்பிட வருகிறார்கள். சில நாட்களில் சொல்லி வச்ச மாதிரி பரதேசிகளே கண்ணுக்குத் தட்டுப்பட மாட்டார்கள். தேடு தேடு என்று தட்டுத் தட்டாய் தேடி அலைவார் பாவம். அன்று ஒரு பரதேசி கூட அகப்படலை என்றால் அவரும் பட்டினி தான். அவருடைய சம்சாரமும் பட்டினிதான். எப்பவாவது அபூர்வமாக அந்த ஊருக்குப் பரதேசிகள் வருவார்கள். அப்படி வந்தாலும்



எங்காவது கிடைத்த இடத்தில் சாப்பிட்டதும் கிளம்பிப் போய் விடுவார்கள். சில பரதேசிகள் வந்து ஊர்மடத்தில் படுத்திருப்பார்கள். போய் அவர்களைச் சாப்பிடக் கூப்பிட்டால் இப்போ பசியில்லையே என்பார்கள்.

ரொம்பத் தாங்கித் தடுக்கிக் கூப்பிட்டால் இலையில் தட்சிணையாக எவ்வளவு பணம் வைப்பாய் என்று கேட்பார்கள். ஏதோ என்னால் ஏண்டது ஒரு பணம் கொடுக்கிறேன் என்பார் இவர். ஒத்தப் பணத்துக்காக யாரண்ணா சாப்பிட வருவார்கள். அதெல்லாம் அந்தக் காலம் என்பார்கள். இவர் சாப்பிட்டு ரெண்டு,

வண்டணி பூங்குழல் மாதரசி அவள்
கண்ட சகுன விநோதங்களை
சண்டைக்குப் போகவுங் கூடாதென்றாள்
நான் கண்ட சகுனம் பொல்லாதென்றாள்
இன்றைக்கு உன்னை இழந்தே னென்றாள்
இனி என்றைக்குக் காண்பேனோ வென்றழுதாள்
என்றவள் கையை நெறித்தனளாம் மங்கை
நின்று நெடுமூச்சுக் கொண்டனளாம்
வல்லன் வெள்ளையன் பெண்சாதி மனம்
மருகிச் செய்திகள் ஏதுரைப்பாள்
பொல்லாத சொப்பனங்கண்டே னென்றாள்
இப்போ போகாதே யென்று பின் தொடர்ந்தாள்.
வழக்குஞ் சொல்ல மனந்துணிந்தாள் மண
வாளன் மடியைப் பிடித்திழுத்தாள்.
குளிக்க மஞ்சளரைத் தேனனென்றாளது
கொம்பன் கரியாகப் போச்சு தென்றாள்
கறிக்கு மஞ்சளரைத் தேனென்றாளது
கொம்பன் கரியாகப் போச்சு தென்றாள்
நரிக்கொம்பு போலிருக்கு தென்றாள் வெகு
சுருக்குடனே யிப்போ போகாதே.
வாழையுந் தோப்பு மழியக் கண்டேன்



அய்யோ மல்லிகைப் பூவுங் கருகக் கண்டேன்.
ஆந்தை அலறிவிழுகக் கண்டேன் ஒரு
அநியாயக் கூகை குழறக் கண்டேன்.
கோட்டை சிதறவும் கொம்மை தகரவும்
கொத்தாளம் நெட்டு இடிந்திடவும்
நாட்டிலே மண்மாரி பெய்யக் கண்டேன் பாஞ்சை
நாடுவிட்டோர் பெண்ணும் போகக் கண்டேன்.
கீழக்கோட்டை வாசலிலே அரைக்
கீரைப்பாத்தியான தோட்டத்திலே
வேளையிலே குண்டு தைக்கக் கண்டேன்
அங்கே வீணாக உன் தலை போகக் கண்டேன்
நயமுள்ள நம்ம தானாபதியையும்
நாகலாதபுரத்தில் தூக்கக் கண்டேன்
கயத்தாத்திலே கட்டப் புளியிலே
கருத்தையா தலை தூங்கக் கண்டேன்
பட்டத்தானை பட்டுப் போயிடவும் இந்த
பாஞ்சை நகர மழிந்திடவும்
புட்டுக்கு மண் சுமந்தாரறிய நானும்
பொல்லாத சொப்பனங்க கண்டேனென்றாள்
காகங்க கதறுதே என் கணவா கருங்
குருவி கட்டுதே என் கணவா



மூணு நாள் கூட ஆகி இருக்கும். பெரியவர்கள் அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ஏதோ கெஞ்சுவார். நான் என்னால் முடிந்ததைத் தருகிறேன். தயவு செய்து வர வேண்டும் என்று கெஞ்சுவார். பரதேசிகளின் காலைப் பிடிக்காத குறைதான். சில சமயம் காலில் விழுந்தது கூட உண்டு.

பல நாட்களில் அவர் பசியோடு பரதேசிகளைத் தேடி அலைவதைப் பார்க்கப் பாவமாய் இருக்கும் அந்த ஊர்க்காரர்களுக்கு. ஏன் இவர் இப்படி பரதேசி கிறுக்கு பிடித்து அலைகிறார் என்று விளங்கவில்லை. பசி மயக்கம் தாங்க முடியாமல் ஒருநாள் மயக்கம் போட்டு விழுந்தார். அன்று அவருக்கு நிலைமை ஆச்சி போச்சி என்று ஆகிவிட்டது.

பெரியவர்களெல்லாம் கூடிச் சண்டை பிடித்த பிறகு ஒரு ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டார். அதன்படி இனிமேல் பசித்தால் சாப்பிட்டுக் கொள்ள வேண்டியது. அதன் பிறகு வழக்கம் போல் தட்டுப்படுகிற பரதேசிகளை அழைத்து வந்து அன்னதானம் கொடுக்க வேண்டியது. அவருடைய மனைவிக்கு ஆரம்பத்திலிருந்தே அவருடைய இந்தப் பரதேசி கிறுக்கு பிடிக்க வில்லைதான். ஆனாலும் ஓரளவுக்குக் கணவனை அனுசரித்துப் போய்க்கொண்டிருந்தாள்.

காட்டில் அவர் உழுதுகொண்டிருப்பார். அந்த வழியே யாராவது பரதேசிகள் தூரத்தில் தட்டுப்பட்டால் அப்படியே ஏரை நிறுத்திவிட்டு ஒரே ஓட்டமாக ஓடி அவர்களிடம் போய், சாப்பிட்டாச்சா என்று கேட்பார். இல்லை என்று அவர்கள் சொல்லிவிட்டால், நேராக அவர்களை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய்ச் சமையல் ஆனதும் முதல் காரியம் இவர்களுக்குச் சாப்பாடு போட்டு அனுப்பு என்று சொல்லி, திண்ணையில் அவர்களை உட்கார வைத்துவிட்டு, திரும்பவும் காட்டுக்குப் போய் பாக்கி உழவை உழுவார். வேளை கெட்ட வேளைகளிளெல்லாம் இப்படி

ஆண்டி பரதேசிகளைக் கூட்டிக் கொண்டு வந்து சமையல் செய். சாப்பாடு போடு என்ற அவர் சொல்வதைக் கேட்டால் வீட்டம்மாவுக்கு எரிச்சல் எரிச்சலாய் வரும்.

ஒருநாள் மத்தியானம், அப்போதுதான் சாப்பிட்டு முடித்து, கொஞ்சம் தலை சாய்ப்போம் என்று நினைத்திருந்த வேளை எங்கிருந்தோ நாலு பரதேசிகளை ரொம்ப சந்தோஷமாய் கிடைத்தது கிடைத்தது என்று கூப்பிட்டுக்கொண்டு வந்து ஏய் சமையல் செய் இவர்களுக்குச் சாப்பாடு போடணும். ரொம்பப் பசியோடு இருக்கிறார்கள் என்று உத்தரவு போட்டார்.

சாப்பாடு இருக்கு. நீங்க தோட்டத்துக்குப் போயி நாலு வாழை இலை அறுத்துக்கொண்டு வரணும் என்று சொனனாள்.

சரி என்று சொல்லி, அவர்களைத் திண்ணையில் உட்காரச் சொல்லிவிட்டு இலைக் கத்தியை எடுத்துக் கொண்டு வாழைத்தோட்டத்துக்குக் கிளம்பினார்.

அவருடைய தலை மறைந்ததும் அந்த அம்மாள் ஒரு உலக்கையை எடுத்து, அதுக்குக் காப்புக்கட்டி, நாமத்தைக் குழைத்துச் சாத்தினாள். பார்த்துக் கொண்டிருந்த பரதேசிகள் பயங்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

**கி. ராஜநாராயணன்**

போகாதே போகாதே என்கணவா நானும்
பொல்லாத சொப்பனங்க கண்டேனென்றாள்
என்றந்தக் கன்னியுரைத்திடவே அய்யோ
என்றவன் கையை நெறித்திடவே
இன்றைக்கு உன்னை இழந்தே னென்றாளப்போ

ஏது சொல்வான் பாதர் வெள்ளையனும்
என் புத்தி கேட்பாரே கோடி லட்சம், நானும்
பெண்புத்தி கேட்பேனோ பாதர் வெள்ளை
அன்புடன் அன்னங்க கொடுத்தவர்க்கு இப்போ
ஆபத்து வேளைக் குதவுதற்கு
போக வேண்டாமென்று சொன்னதினாலிருந்த
லோகத்துக் கேற்குமோ பெண்ணரசே
ஆகாக் காலங்கள் வந்தக்கால் இப்போ
சாகாமல் தப்பவும் கூடாது
சுத்த வீரனென்று பேரெடுத்து நம்மள்
கர்த்தனைக் காட்டிக் கொடுக்கலாமா?
யுத்தகளத்துக்குப் போகாவிட்டால் நமக்கு
சுத்த வீரனென்று பேரேது?
போடி நீ அப்புறம் போடி யென்றான் வந்த
பொல்லாங்குக்கோ பயமில்லை என்றான்
கோடிக்கொம்பு போல் நின்றாடினான் வலு
கொடிய வேங்கை போல் சீறினான்.
நல்லவள் சொல்வார்த்தை கேளாமல் அவளை
நில்லென்று சொல்லி நடந்தானே.

**கட்ட பொம்மு கதைப்பாடல்கள்**

## செயல்பாடுகள்

- வீரபாண்டிய கட்டபொம்மன் கதையில் வரும் நாட்டுப்புற நம்பிக்கைகளை எழுதுங்கள்.
- வீரபாண்டிய கட்டபொம்மன் கதையை நாடகமாக மாற்றி எழுதுங்கள்.
- நாட்டுப்புறக் கலைகளை அழியாமல் பாதுகாக்கும் வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- களரிக்கலைப் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- கதைப்பாடல்களும் வகைகளும் குறித்துக் கட்டுரை எழுதுங்கள்.

அலகு

4

# சுமைதாங்கி

மனிதன் பிற மனிதனிடம் காட்டும் இரக்கம், அன்பு, ஏழைகளுக்குச் செய்யும் உதவி போன்றவையே மனிதநேயம். பண்டைய இலக்கியங்கள் இப்பண்பைப் போற்றும் விதத்தில் அனேக நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளன. இரத்த உறவுகள் மட்டுமின்றி, சகமனிதனிடமும் பகைவனிடமும் கூட நாம் காட்டும் இரக்க உணர்வும், மன்னிக்கும் பண்பும் மனிதநேய வெளிப்பாடாகும். இவ்வுலகில் சமத்துவ வாழ்க்கைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் பண்புடையவனாய் வாழ்வதற்கும் மனிதநேயச் சிந்தனை நன்கு துணைபுரிகிறது. பரஸ்பர மனிதநேயத்தால் தான் இவ்வுலகம் ஓரளவு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் நிலைபெறுகிறது. மனிதநேயம் சமத்துவ வாழ்க்கைக்கு அடிப்படையானது. மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் மனிதநேயம் மறக்கப்படுகிறது. பழம்பெரும் இலக்கியங்கள் மனிதநேயச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. மனிதநேய மனப்பான்மையை வளர்க்க உதவுவதே இவ்வலகின் முதன்மை நோக்காகும்.

## கற்றல் அடைவுகள்

- *மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் மனிதநேயம் அவசியம் என்பதை அறிந்து சொற்பொழிவு தயாரிக்கிறார்கள்.*
- *பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்னும் கருத்தை அறிந்து குறிப்பு தயாரிக்கிறார்கள்.*
- *உடலுறுப்பு தானம் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் துண்டுப்பிரசுரம் தயாரிக்கிறார்கள்.*
- *மனிதநேயத்தில் சாதனை படைத்தவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.*
- *உறுப்புதானம் செய்வதன் அவசியத்தை மக்களுக்கு அறிவிக்கும் வகையில் முத்திரை வாக்கியங்கள் எழுதுகிறார்கள்.*
- *மனிதநேயமிக்கவர்களைப் பாராட்டி எழுதுகிறார்கள்.*

# ஈரநெஞ்சம்



## நேயம்

நெஞ்சூற்றில் சுரக்கின்ற நீராம் எண்ணம்
நிறமாற்றம் புரிசெயலால் விளங்கும் வண்ணம்
எஞ்ஞான்றும் மணம்வீசி நிலவச் சான்றோர்
இவ்வைய உய்வினுக்காய் நின்றார் சான்றாய்
செஞ்சோற்றுக் கடனுக்காய்த் தீயோர்ப் பக்கம்
சேர்ந்தாலும் பெருவீரம் தோல்வி ஏற்கும்
நஞ்சினையும் பிணியொழிக்கப் பயன்ப டுத்தும்
நல்லறிவைக் கொள்வதுவே மனித நேயம்

ஒரு தவறு நேர்ந்திடுங்கால் சுட்டிக் காட்ட
உடனடியாய் அதைத்திருத்திக் கொள்வோர் பண்பில்
பெரியவராய் வரலாற்றில் பெயரைப் பெற்றார்
பெரும்புகழை எப்படியோ அடைந்தார் சில்லோர்
குறையென்று தெரிவதனைக் கூறு வோரைக்
குற்றவாளி, எனஉண்மை மாற்றக் காண்போம்
நிறைகற்பு மாதவளும் நெருப்பில் மூழ்கும்
நிலைதொடர நினைப்பதுவோ மனித நேயம்?

பெரும்பான்மை ஒரு தீர்வாய்க் கொண்டி யங்கல்
பெருமையென் பிழையாவ தனையும் காண்போம்
பொருள் தன்மை நன்கறிந்தும் புனைந்தே மாற்றும்
பொய்யுரையைப் புகழாக மயங்கல் உண்டு
எய்தவிடம் தனைஎதிர்க்கும் ஆற்ற லின்றி
இளைத்தவரை வளைத்தழித்தல் வீரந் தானா?
கொய்தமலர் வாடுவதாய் வருந்தல் விட்டுக்
கொடியிருக்க எழில்நுகர்தல் நேய மன்றோ?

காட்டுவளம் கூட்டுகின்ற நலங்கள் எல்லாம்
கண்டிருந்தும் அழித்துவரும் நஞ்சு நெஞ்சம்
நாட்டைவள மூட்டுகின்ற மழைநீர்ப் பொய்க்கும்
நாசவினை நாடொறும் செய்யும் தீமை
வாட்டபயிர் கண்டுமனம் வாடி நொந்த
வடலூரார் இராமலிங்கர் வகுத்த பாதை
கூட்டிவிடும் உயர் கொள்கை உயிரி ரக்கம்
குறைதீர்க்கும் நேயமதைக் கொள்ளல் என்றோ?

**கவிமுரசு**

**கவிமுரசு**

*சிறந்த கவிஞர். மனிதநேயத்தை வளர்க்கும் தொண்டுள்ளம் கொண்டு பல படைப்புகளை உருவாக்கியவர். சிறந்த சமூக நலச் சிந்தனையாளர்.*

## செயல்பாடுகள்

- ☞ பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- ☞ நேயம் என்ற பாடலை நயம்பாராட்டி எழுதுங்கள்.
- ☞ நேயம் பற்றிக் கூறும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுங்கள்.

## மனிதநேயம் கடைச்சரக்கல்ல

செய்தித்தாளில் வந்த புதுமையான அந்த விளம்பரத்தில் அனுவின் பார்வை பதிந்தது. அதைப் பார்க்க ஆர்வம் மிகுந்தது.

"எங்களுடன் சேர்ந்து தீபாவளிப் பண்டிகை கொண்டாட உங்களை அழைக்கின்றோம். மனித உறவுப் பாலத்தில் இணையும் சங்கிலியாக நீங்கள் இருக்க விழைகிறோம்". விளம்பரம் தொடர்ந்தது. பார்க்க வேண்டிய முகவரியை அனு கோடிட்டுக்கொண்டாள். மாலை பள்ளியிலிருந்து அந்த முகவரிக்குச் செல்ல முடிவெடுத்தாள்.

அனு ஒரு புதுமை விரும்பி, பாரதியின் விசிறி. அவரது பாடல்களில் மெய் மறந்தவள். "காற்று வெளியிடைக் கண்ணம்மாவும்", "காணி நிலம் வேண்டும்", என்ற பாடலும் அவளது இதயக் கதவை மெல்லத் தட்டிக்கொண்டேயிருக்கும் இனிய ஓசைகள். பாஞ்சாலியின்

நிலைகண்டு, அதுவும், “பேயாட்சி செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்” என்ற பாடல் வரிகளைக் கண்டு பலமுறை கொதித்ததுண்டு. “தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்”, என்ற புலவனின் ஆவேசம் கண்டு சிலிர்த்ததுண்டு. அதே எண்ணம் ‘உறவுப்பாலத்தில் ஒரு சங்கிலி’ அவள் மனதில் இடம் பிடித்தது.

### மனிதநேயப் பூ!

தணியாத் தாகத்துடன்
தொண்டைக்குழி ஏறி இறங்க
தண்ணீர் பருகும் மனிதனைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

ஆறாப் பசியுடன் உணவை
அள்ளி அள்ளி விழுங்கும்
ஆதரவில்லா ஏழையைக்
காணும்போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

தட்டில் காசு விழும் சப்தம் கேட்டு
‘தாயி நீ நல்லா இருப்பே’
என்று கூறும் பார்வையற்ற
மனிதத்தைக் காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

குளிரில் நடுங்கும் பாதையோர
முதியவருக்கு வீட்டுத் திண்ணையில்
இடம் கிடைத்தால்
முடங்கி உறங்கும் அவரைக் –
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

விதவைப் பெண்ணின்
நெற்றியில் திலகமிட்டு
மறுவாழ்வு தரும் மகான்களைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

“அனு, இன்று சீக்கிரமாக வீட்டிற்குக் கிளம்புகிறாயே? என்ன விஷயம்?’’ என்றாள் தோழி அனுபமா. “நாளை வந்து சொல்கிறேன்” என அவசரமாகக் கூறியபடி வேகமாகப் பேருந்தைப் பிடிக்கச் சென்றாள். செல்லும் வழியெல்லாம் ஒரே சிந்தனை. இந்த விளம்பரத்தைக் கொடுத்தவர் யாராக இருக்கும். “ஏன் இப்படியொரு எண்ணம்” இறங்க வேண்டிய இடம் வந்தது. வீட்டைக் கண்டு பிடிப்பது சிரமமாக இல்லை. கேட்டைத் திறந்ததும் கூர்க்கா, “வணக்கம் அம்மா” என்றான். சுற்றிலும் பார்வையை ஓடவிட்டாள். ஒரு பெரிய பங்களா இருந்த இடத்தில், அதன் சிற்சில சின்னங்கள் இருந்தாலும், அந்த இடம் ஒரு ஆசிரமம் மாதிரி தோன்றியது. செடி, கொடிகள் அழகாக அமைக்கப்பட்டு, வாசலில் பெரிய கோலம், சுற்றிலும் கலைநுட்பத்தோடு அமைந்த புல்தரை, எல்லாமே அழகு கொஞ்சும் இடமாக இருந்தது. கூர்க்கா காட்டிய அறையில் அமர்ந்தாள் அனு.

அறைக் கதவைத் திறந்து கொண்டு தோன்றிய இளைஞன் “வணக்கம்” என்றான். வணக்கம் என்றவாறே அவனை ஏறிட்டு நோக்கியவள் வியந்தாள். எதிரே நின்றவனுக்கு இருபத்தெட்டு வயது இருக்கலாம். சந்தன நிற ஜிப்பாவும், வேஷ்டியும் அவன் நிறத்தில் மங்கித் தெரிந்தன. கூர்மையான பார்வை. கண்ணில் தெரிந்த சாந்தம். பாரதியின் வர்ணனை நினைவைத் தொட்டது. “நான் அனுராதா, உங்கள் விளம்பரம் பார்த்து வந்தேன்” என்றாள் மெல்லிய குரலில். ‘உட்காருங்கள் உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி.’ மகிழ்ச்சி நிஜம் தான் என்று குரல் காட்டியது. ‘மிஸ். அனு, இந்த இல்லத்தில் சுமார் 80 பேர் இருக்கிறார்கள். அவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன் வாருங்கள்’ என்றவனைப் பின் தொடர்ந்தாள். “காமாட்சிப் பாட்டி, இன்று கோலம் நீங்கள் போட்டது தானே? எப்படி இவ்வளவு அழகாக வரைந்தீர்கள்?” என்ற அந்த இளைஞன், அந்த வயதான பாட்டியின் அருகில் அமர்ந்து, வாஞ்சையுடன் அவள் கைகளைத் தடவிக் கொடுத்தான். அந்த முதியவளின் முகம் கோடி சூர்யப் பிரகாசமானது. “மாதவா! இங்கு வந்தப்புறம் தான் எனக்கு சந்தோஷமா இருக்கு. நீ நன்னாயிருக்கணும்” என அவனை வாழ்த்தினாள்.

"கமலம்மா! சமையல் டீட்டி நீங்கதானே பண்ணினது. சாப்பாடெல்லாம் பிரமாதம்" என்ற சொற்கள் கமலம்மாவின் கண்களில் நீரை நிரப்பியது. 'அப்பா நான் எழுபது வருடமா சமையல் பண்ணியிருக்கேன். எங்க வீட்டில் எல்லாம் காலியாகும். ஆனால் நன்னாயிருக்குன்னு சொன்னவன் நீ ஒருத்தன் தான்', எனக் கண்ணீர் மல்க அவனது தோளைத் தட்டினாள்.

ஒவ்வொருவராகப் பார்த்து ஓரிரு நல்ல வார்த்தைகள் சொல்லி அவர்களை மகிழ்வித்து, தன் அறைக்குத் திரும்பிய மாதவனைப் பார்த்த அனுவிற்கு வியப்பு தாங்கவில்லை. "இவ்வளவு சிறிய வயதில் இப்படி அன்பின் முதிர்ச்சியா? நாமும் ஏதாவது செய்ய வேண்டும். இவரது தொண்டில் ஒரு துளியாவது செய்ய வேண்டும்," அவள் மனது அடித்துக் கொண்டது. அப்பொழுதே அதற்கான திட்டமும் உருவாகியது. அவனது 'ஸ்ரீ இல்லம்' பற்றிய மற்ற விவரங்களை அறிந்து கொண்ட அனு, தீபாவளிக்கு முதல் நாள் வருவதாகக் கூறி விடைபெற்றாள். பள்ளிக்கூடம் வந்தாள். எதிரில் பள்ளி முதல்வர். "களப்பயணம் பற்றி என்ன யோசனை பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டார் மேடம். இம்முறை குழந்தைகளை ஒரு அழகான இடத்திற்கு அழைத்துச் செல்ல உங்கள் சம்மதம் வேண்டும் மேடம்", என்றாள் அனு.

"அது எந்த இடம்? உங்கள் பாடத்தோடு தொடர்புடையது தானே?" என்றாள் மேடம். ஆம் என்றாள் அனு. பிறகு குழந்தைகளைப் பார்த்து,

'சரி! நான் உங்களை எல்லாம் நிறைய தாத்தா, பாட்டிங்க இருக்கிற வீட்டுக்குத் தீபாவளி முதல் நாள் அன்னிக்குக் கூட்டிண்டு போகப் போறேன். நீங்க எல்லோரும் ஏதாவது பட்சணமோ, பட்டாசோ, பழமோ, எது அம்மா கொடுக்கறாங்களோ அதைக் கொண்டு வரணும். வாழ்த்து அட்டைகள் பண்ணிக்கொண்டு வரணும். ஓகே' என்று அனு சொன்னவுடன், 'ஓகே' என்றது மழலைப் பட்டாளம்.

தீபாவளி முதல் நாள். ஸ்ரீ இல்லம் களைகட்டிவிட்டது. இரண்டிரண்டு குழந்தைகளைப் பிரித்து ஒவ்வொரு அறைக்கும் அனுப்பினாள் அனு. எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனக் குழந்தைகளுக்கு நினைவூட்டினாள்.

குழந்தைகளைக் கண்டதும் முதியோருக்கு ஒரே சந்தோஷம். அவரவரது பேரன் பேத்திகளை நினைவூட்டும் பிஞ்சுகள். கண்களிலோ ஆசை. அவர்கள் தங்களைத் தாத்தா, பாட்டி என அழைத்துச் சிறு பட்சணப் பொட்டலங்களையும், இனிய தீபாவளி வாழ்த்துகள் என்ற கார்டுகளையும் கொடுத்து, முத்தமிட்டபோது உலகமே தங்கள் கைகளில் என்ற பேரானந்தம்.

இளம் பிள்ளை வாதத்தால்
இத்துணை நாட்கள் நிலத்தில்
ஊர்ந்த கால்கள் கடுமையான
சிகிச்சைக்குப்பின் நிமிர்ந்து நிற்பதைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

அனாதை இல்லச் சிறுவர்களுக்கு
நீ ஒரு ஐம்பது ரூபாய்க்குக்
கடலை மிட்டாய் வாங்கித் தந்தால் கூட
கைகூப்பி நன்றி சொல்வதைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

கூன்விழுந்த மூதாட்டியைப்
பேருந்து நடத்துனர், 'பெருசு ஏறு சீக்கிரம்'
என்று கூறாமல், கைப்பிடித்து
ஏற்றிக் கொள்வதைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

பசிக்கு அழும் குழந்தை
தாயின் மடியில் பால் குடித்துவிட்டு
சிரிக்கும் சின்னச்சிரிப்பினைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

குழந்தை இல்லா தம்பதியர்
ஆதரவற்ற
பெண் சிசுவை தத்தெடுத்து
அருமையாக வளர்ப்பதைக்
காணும் போது
என்னுள் மனிதநேயப் பூப்பூக்கும்!

ஆனந்தி




**நெல்சன் மண்டேலா**

தென்னாப்பிரிக்காவில் நடைமுறையில் இருந்த கடுமையான நிறவெறிக்கு எதிராகப் போராடிக் கறுப்பின மக்களுக்கு வெற்றித் தேடித் தந்தவர் நெல்சன் மண்டேலா. நிறவெறி அரசுக்கு எதிராகப் போராடிய காரணத்தால் தேசத் துரோகம் குற்றம் சாட்டப்பட்டு அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. இருபத்தேழு ஆண்டுகாலம் சிறை வாசம் அனுபவித்தார். வாழ்க்கையில் பெரும் பகுதியைச் சிறிய சிறை அறையிலேயே கழிக்க வேண்டிய தாயிற்று. இறுதியில் உலக நாடுகளின் மக்களின் ஒருமித்த குரலுக்குத் தென்னாப்பிரிக்க அரசு அடிபணிய வேண்டியதாயிற்று. 1990 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் தென்னாப்பிரிக்க நாட்டிற்கே அதிபரானார். மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தென்னாப்பிரிக்கக் குடியரசுத் தலைவர் மண்டேலா ஆவார். 1993 இல் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார். 1990 இல் பாரத ரத்னா விருது வழங்கி இந்தியாவும் அவரைப் பாராட்டியது. இவரது பிறந்த தினமான ஜூலை 18 ஆம் தேதியை சர்வதேச மண்டேலா தினமாக ஐ. நா. சபை அறிவித்தது இதனை. அவரது மக்கள் நலப் போராட்டத்திற்குக் கிடைத்த இன்னொரு பாராட்டு என்றே கூறலாம். 1918 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதி பிறந்த இவர், 2013 டிசம்பர் 5 ஆம் நாள் உயிர் நீத்தார்.

எல்லோரும் சேர்ந்து பட்டாசு வெடித்தார்கள். அனு கொண்டு வந்த இனிப்புப் பண்டங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டன. இது ஒரு மறக்க முடியாத தீபாவளி. எல்லோருக்குமே தான். குழந்தைகள் பிரியா விடைபெற்றுக்கொண்டனர். முதியோர் கண்களில் கரை கட்டியது கண்ணீர். 'அடிக்கடி வரோம் பாட்டி' என்றன குழந்தைகள். மாதவன் மனதில் அவனது இளமைக்கால நினைவுகள் எழுந்தன. அப்படித்தானே அவனது வாழ்விலும் நடந்தது. இன்று ஸ்ரீ இல்லம் நடத்தும் இந்த இளம் டாக்டரின் நினைவு பின்னோக்கிச் சென்றது.

துள்ளித் திரியும் சிறுவனாக அன்று மாதவன் பள்ளிக்குச் சென்றபோது "மாதவா, நாம முதியோர் இல்லத்திற்கு இன்று போகப் போறோம்" என்ற ரவியுடைய சொற்கள் அவனுக்கு வினோதமாக இருந்தன. வயதானவர்களுக்கு ஒரு இடமோ? அவன் மனதில் அவனது வயதான பாட்டி தோன்றி மறைந்தார். என்ன தான் நடக்கிறது பார்க்கலாம் என்ற எண்ணம் தான் அவனைத் தூண்டியதேயன்றி இரக்கவுணர்வோ, மனித நேயமோ அல்ல. அங்குச் சென்றவுடன் அவன் உடலெல்லாம் சிலிர்த்தது. இப்படி ஒரு இல்லமா? வரிசையாக இருந்த அறைகள். ஒவ்வொன்றிலும் இருவர் அவர்களுக்கு என்று ஒரு கட்டில், அலமாரி இருந்தது. அறைகள் சுத்தமாக இருந்தன. வேளைக்குச் சாப்பாடு. சிறிது நேர ஓய்வுக்குப் பின் பாட்டுக் கேட்க, டிவி பார்க்க வசதி. இப்படியும் இருக்கிறதா, பின்னே ஏன் நம் வீட்டில் இப்படி என்ற கேள்வி எழுந்தது.

அப்பா பாங்கின் பெரிய ஆபீசர். அம்மாவோ சமூக சேவை செய்வதில் ஆர்வமுள்ளவள். பாட்டிக்கு எண்பது வயதாகிறது. இவளை இடைஞ்சலாகவே அம்மா எண்ணினாள். அதற்கு அவளிடம் காரணம் இருந்தது. சமையல்காரியும் சில சமயங்களில் பாட்டியிடம் சிடுசிடுப்பதை மாதவன் பார்த்திருக்கிறான். ஏன் இப்படி? மற்ற வீடுகளில் இப்படி இல்லையே என அவன் மனம் எண்ணும்.

பாட்டி ஜுரத்தால் அவஸ்தைப்பட்ட அந்த நாள் அப்பாவும், அம்மாவும் ஊரில் இல்லை. வேலைக்காரியிடம் மருந்து கொடுத்துப் பாட்டிக்குத் தரச் சொல்லி விட்டு அம்மா சென்று விட்டாள். அப்பாவுடன் அவர் ஆபீஸ் விஷயமாக டெல்லி செல்ல தானும் உடன் சென்றாள். காலை பள்ளிக்குச் சென்ற மாதவன் பள்ளி விட்டவுடன் "பாட்டி" என்றவாறே அவள் அறைக்குச் சென்றான். அங்கு சுவாசம் விட முடியாம பாட்டி பட்டபாடு! அவனுக்கு பயமாகி விட்டது. "பாட்டி! டாக்டருக்குப் போன் செய்து விட்டு வருகிறேன்," என்றவனை நிறுத்திய பாட்டி "கண்ணா! உங்கிட்ட சித்த பேசணும்! உங்க அம்மா, சின்ன வயசில, எங்கிட்ட நிறையக்

கஷ்டப்பட்டிருக்கா. நீ ஏன் கஷ்டப்படுத்தினேன்னு, நீ கேட்கலாம். நான் என் மாமியார் படுத்திய பாட்டில், கொஞ்சமாவது படுத்த வேண்டாமா! என் மனசில வக்கிர புத்தி வந்தது. கொடூரமா இருந்தேன். கொடூரமா நடந்துண்டேன் அப்ப. இப்ப உங்க அம்மா அதையெல்லாம் எங்கிட்ட காட்டறா. மனித மனத்தில் அன்பு வேணும். அன்பைக் கொடுத்துதான் அன்பை வாங்கணும். அது கடையில் வாங்கும் பொருள் இல்லை. அதனால நீ பெரியவனானதும் இந்த வயசானவாளுக்கெல்லாம் ஆதரவு தரணும். அவாளை நல்லா பார்த்துண்டு உதவி செய்யணும். செய்வாயா?" என்றாள்.

'கண்டிப்பாகச் செய்யறேன் பாட்டி' என்றான் மாதவன் . . . பாட்டியின் மெலிந்த கரங்கள் கீழே விழுந்தன. . . . பையனால் தனது கோரிக்கை நிறைவேறும் என்ற தைரியத்துடன் பாட்டி கண்ணை மூடினாள்.

அப்புறம் டாக்டர் வந்தது, பாட்டியின் அந்தி மக்கிரியை நடந்தது எல்லாம் பழைய கதை. பெருமூச்சு விட்டான் மாதவன். அந்த இல்லத்தின் நிறைவு அவன் மனதைக் கவர்ந்தது.

தன் பெற்றோர் வைத்த பணத்தில் ஆசிரமத்தை நிறுவினான். தனது தொழிலில் வரும் வருமானத்தில் இதை நடத்துகிறான் என்ற விஷயங்களைக் கமலம்மா மூலம் அனு தெரிந்துகொண்டாள். அவனுக்கு உறுதுணையாக இருக்கவும் செய்தாள்.

மனிதநேயத்தில் பல அறுபட்ட சங்கிலிகள் இருக்கின்றன. அவற்றை இணைக்கும் சங்கிலியாக இருக்கும் மாதவன் போன்று பலர் இருக்கிறார்கள். ஆனாலும் அனு போன்ற புதுமைப்பெண்களும் இந்த இயக்கத்தில் பங்குகொண்டால்! இது தோன்றியது காமாட்சிப் பாட்டியின் உள்ளத்தில்.

**இராகவப்ரியா**

### சார்பெழுத்துகள்

சார்பெழுத்துகள் 10. அவை :

1. **உயிர்மெய்யெழுத்து - 216**
   உயிரும் மெய்யும் இணைந்து வரும் எழுத்து.
   க் + அ = க ;   த் + எ = தெ
2. **ஆய்த எழுத்து**
   ஃ மூன்று புள்ளி வடிவமாகக் காணப்படும் எழுத்து ஆய்த எழுத்து எனப்படும் அஃது, எஃகு எனச் சொல்லின் நடுவில் வரும்.
3. **உயிரளபெடை**
   ஓசை குறைகின்ற பொழுது நெட்டெழுத்துகள் ஏழும் மொழியின் முதலிலும் இடையிலும் கடையிலும் நீண்டு ஒலிப்பது உயிரளபெடை. அது நீண்டு ஒலிப்பதற்கு அடையாளமாக அதற்கு இனமாகிய குற்றெழுத்து அருகில் எழுதப்படும்.
   எ.கா.
   ஆஅ, ஈஇ, ஊஉ, ஐஇ, ஔஉ

   மொழி முதல் அளபெடை : ஓஒதல்
   மொழியிடைஅளபெடை : உறாஅர்க்கு
   மொழியிறுதி அளபெடை : படாஅ

## செயல்பாடுகள்

- ☞ சிறுகதையை வாசித்து அதன் கதாபாத்திரச் சிறப்பை எழுதுங்கள்.
- ☞ சிறுகதையை விமர்சித்து, தற்காலச் சூழலுடன் ஒப்பீடு செய்து எழுதுங்கள்.
- ☞ சிறுகதை உணர்த்தும் கருத்தை வெளியிடுங்கள்.

# நேசக்கரங்கள்



## தவமணி உணர்த்திய உடல்தானம்

தவமணி அய்யா உரைத்த வார்த்தையைக் கேட்ட மறுநிமிடம் அவரைச் சூழ்ந்திருந்தபடி நின்றிருந்த மனைவிக்கும் மகன் கோபாலனுக்கும் திகைப்புடன் பயத்தையும் அளித்தது.

என்னங்க நீங்க சொல்வது உங்களுக்கே நியாயமாகப்படுகின்றதா? என்று கேட்டார் தவமணியின் துணைவியார் ஆருடம்.

தவமணியிடம் இருந்து பதிலேதும் வரவில்லை. மௌனமாகப் படுத்திருந்தார். பார்வை வீட்டின் முற்றத்தை நோக்கி இருந்தது.

அப்பா நமது உற்றார் உறவினர்களை நினைத்துப் பார்த்தீர்களா? புறங்கூறுவதோடு அல்லாமல் என்னையும் ஒதுக்கிவிடுவார்கள். பிறகு என்னால் எப்படி அப்பா உறவினர்களது நல்லது கெட்டது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியும்? அவரின் முகத்துக்கு நேராகக் குனிந்து கொண்டு வினவினான் மகன் கோபாலகிருஷ்ணன்.

ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்கு உறவினர்கள் புறங்கூறுவார்கள் என்றால் அந்த உறவினர்களே நமக்கு வேண்டாம் கோபாலா என்று மகனைப் பார்த்துக் கூறினார் தவமணி.

தவமணி வயது முதிர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர். மக்களுக்குச் சேவை செய்வதிலேயே வாழ்க்கையின் பெரும்பகுதியை ஓட்டியதால் செல்வமும் செழிப்பும் அவரிடமிருந்து விடைபெற்று, நேர்மையும், கருணையும் தானாகவே அவரிடம் ஒட்டிக்கொண்டிருந்தன. மனைவி ஆருடம் வள்ளுவரின் துணைவியாரான வாசுகி அம்மையாரை ஞாபகப்படுத்தும் குணத்தன்மையைக் கொண்டவர். ஒரே மகன் கோபாலகிருஷ்ணன். தவமணியின் நேர்மையைப் பாராட்டி அரசாங்கம் கோபாலனுக்கு அரசாங்கப் பணியை வழங்கியிருந்ததால் கைநிறையச் சம்பளம். தவமணி எது செய்தாலும் நல்லதாகவேதான் இருக்கும் என்று நினைத்தே பழகிவிட்டவனுக்கு, இன்று தன் தந்தை எடுத்திருக்கும் காரியத்திற்கு எதிர் கேள்வி கேட்டுக் கேட்க வேண்டியதாயிற்று.

அப்பா, இதுவரை நீங்கள் செய்த நல்ல காரியத்தையெல்லாம் நாங்களும் பாராட்டித்தான் மகிழ்ந்துள்ளோம். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எங்களது பேச்சைக் கேளுங்களேன்.

தவமணி துணைவியாரை ஏறிட்டுப்பார்த்தார். அந்தப் பார்வையின் விளக்கத்தால் மேலும் பேசாமல் தலைகுனிந்துகொண்டாள். படுத்துக் கொண்டிருந்த தவமணி எழுந்து உட்கார்ந்தார். கோபாலகிருஷ்ணனின் கைகளைப் பற்றி அருகே அமர வைத்தார்.

மகனே கோபாலகிருஷ்ணா, தானம் செய்வது மன்னிக்க முடியாத குற்றமா? இல்லை இவ்வுலகத்திலே எவருமே செய்யாத ஒன்றை நான் செய்கிறேனா? என்று கேட்டார் தந்தை தவமணி.

தந்தை கூறிய வார்த்தையைக் கேட்ட கோபாலன், தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டாரோ என எண்ணினான். அவரது கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

"அப்பா, தானம் செய்வதைத் தவறாக நான் சொல்லவில்லை. தானத்தில் பலவகை உண்டு. அவரவர் விருப்பப்படி என்ன செய்ய முடியுமோ அதன்படி தானத்தைச் செய்கிறார்கள்.

நீங்களும் செய்யுங்கள். பணத்தைத் தானம் செய்யுங்கள். கண்ணைத் தானம் செய்யுங்கள். ஏன் இந்த வீட்டையும் விற்று அன்னதானம் கூடச் செய்யுங்கள். நான் தடை கூறமாட்டேன். மகிழ்ச்சியுடன் ஏற்பேன். ஆனால் வேண்டா மப்பா இந்த உடல்தானம் மட்டும்" என்று சற்று கம்மிய குரலில் கூறினான் கோபாலன்.



கோபாலன் உருக்கமாகப் பேசியும் தவமணி தளரவில்லை. மாறாகப் புன்முறுவலை மட்டுமே பதிலாக உதிர்த்தார். துணைவியார் ஆருடம் தன் கணவர் அருகிலேயே அமர்ந்து கொண்டார்.



"மனிதன் பிறக்கின்றபோதும் கையில் ஒண்ணுமில்ல.. இறக்கின்ற போதும் ஒண்ணுமில்ல... அவரவர்க்கு என்ன நடக்குமோ அது நடந்தே தீரும். என் விருப்பப்படி உடல்தானம் செய்வதை நான் விரும்புகிறேன். இதில் இழப்பும் தவறும் எங்கே இருக்கிறது கோபாலா? கேட்டார் தவமணி.

அப்பா, உடல்தானம் செய்வது உங்கள் விருப்பம். உரிமை என்று சொன்னீர்கள். அதுபோல என் தந்தையின் உடலுக்கு மணிமண்டபம் கட்டி வணங்க உங்க மகனுக்கும் உரிமை உண்டல்லவா என்று தந்தைக்கு ஈடாக மறுமொழி பகர்ந்தான் கோபாலன்.

கோபாலனின் புத்தி சாதுர்யமான விவாதத்தைக் கேட்டதும் தவமணி உரக்கச் சிரித்தார். தன் மனதுக்குள்ளேயே மகனுக்கு சபாஷ் ஒன்றை அளித்துக் கொண்டார்.

திடீரென்று மகனை ஏறிட்டுப் பார்த்தார். அவர்கள் கண்கள் சற்றுக் கலங்கி இருந்தன.

டேய் கோபாலா.. நான் சிறுவயதிலிருந்தே இந்த நாட்டை நேசித்தவன். நாட்டுக்காகவே உழைத்தவன். இன்று வரையும் என் பாரதத் தாயை நேசித்துக் கொண்டிருக்கிறேன். நாடு என்பது வெறும் இயற்கையும் நிலமும் அல்ல.. அதில் வாழும் மக்களும்தான். என்னுடைய நேசிப்பும் இந்த நாட்டுக்கு மக்களுக்குச் சொந்தந்தான். நான் இருக்கின்றபோதே நாட்டு மக்களுக்குச் சேவை செய்தவன். அதுபோல நான் இறக்கின்றபோதும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றுதான் என் உடலைத் தானம் செய்கிறேன் என்று பேசிக் கொண்டிருந்தவர் சற்று நிறுத்தினார். உணர்ச்சிக் கொந்தளிப்பு அவரது முகத்தில் பரவியது.

ஜாலியன்வாலாபாக் படுகொலையில் எண்ணற்றவர்கள் மாண்டு போனார்கள். புதைப்பதற்குக் கூட இடம் இல்லை. ஒரே குவியலாகப் போட்டு எரித்தார்கள். அந்தச் சம்பவம் இன்று வரை மறையாமல் இருக்கின்றது. ஆனால் எனக்கு மணிமண்டபம் கட்டி அழகு பார்க்க நினைக்கின்றாய். ஒருக்காலும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று பேசி முடித்தார் தவமணி.

4. **ஒற்றளபெடை**

ஒற்றெழுத்துகள் அளபெடுப்பது ஒற்றளபெடை எனப்படும். ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம் ஆகிய பதினாறு எழுத்துகளும் அளபெடுக்கும்.

எ.கா. : கலங்ங்கு, மடங்ங்கல்

5. **குற்றியலிகரம்**

குற்றியலுகரத்தின் முன் யகரம் வந்தால் அவ்வுகரம் இகரமாகத் திரியும். மியா என்னும் அசைச் சொல்லின் முதலில் உள்ள இகரம் தன் மாத்திரையிலிருந்து குறைந்தொலிக்கும். இவை குறுகி ஒலிப்பதால் குற்றியலிகரம் எனப்படும்.

தெங்கு + யாது = தெங்கியாது

எனப்படுவது + யாது = எனப்படுவதியாது

சென்மியா, கேண்மியா

தவமணியின் உறுதியான பேச்சுகள் கோபாலனை நிலைகுலைய வைத்தன. தன் கரத்தின் இறுக்கப் பிடியைத் தளிர்த்தினான். அந்தத் தளர்விலே மகனின் போக்கை உணர்ந்து கொண்டார் தவமணி. நிமிர்ந்து மகனைப் பார்த்தார்.

அப்பா, நாளைதான் நீங்கள் உடல்தானத்தைக் குறித்துக் கையொப்பம் போடப் போகின்றீர்கள். இரவு முழுவதும் எனக்காக இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். யோசியுங்கள். யோசித்துப் பாருங்கள் என்றான் கோபாலன்.

மறுபடியும் புன்முறுவல்தான் பூத்தார் தவமணி.

பொழுது யாருக்காகவும் காத்திருப்பதில்லை கோபாலா.. நீ நிம்மதியாகப் போய் உறங்கு, எந்தச் சஞ்சலமும் கொள்ளாதே என்றார்.

கோபாலன் எழுந்து கொண்டான். அவன் கண்கள் கலங்கிக் கண்ணீர் அரும்புகள் பூத்திருந்தன. தன்னுடைய அறையை நோக்கிச் சென்றான்.

6. **குற்றியலுகரம்**

தனிக் குறிலெழுத்து அல்லாத மற்ற எழுத்துகளுக்குப் பின்னே மொழியின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் மாத்திரையிலிருந்து குறைந்தொலிக்கும். எ.கா.

ஆறு, கஃசு, வரகு, பட்டு, சங்கு, மார்பு, சால்பு

7. **ஐகாரக்குறுக்கம்**

ஐ என்னும் எழுத்து சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும் பொழுது தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தொலிக்கும். எ.கா.


ஐம்பது, வாழை, மறையவர்.

மறுநாள் காலை இனிதாகப் புலர்ந்தது. செங்கதிரவனின் பிம்பக் கோடுகள் மரத்தின் கிளைகளை ஊடுருவி மரத்தூணில் வைக்கப் பட்டிருந்த மணிப்புறா கூண்டிலே விழுந்து கொண்டிருந்தன.

ஆருடத்திற்கு இரண்டு பிள்ளைகள் ஒன்று கோபாலன் என்றால் இரண்டாவது தன் தோட்டத்திலே பூத்துக் குலுங்கும் பூக்களும், மணிப்புறாவும்தான். நாள்தோறும் காலை புலர்ந்தவுடன் பூக்களுக்குத் தண்ணீர் ஊற்றுவதும், மணிப்புறாவிற்குத் தானியம் போடுவதும் வழக்கம். அதன்படி பூக்களுக்கு நீரை ஊற்றி முடித்தவர் தானியத்தை எடுத்துக்கொண்டு மணிப்புறாக் கூண்டின் பக்கத்தில் சென்றார்.

சற்று உயரமான வீடு போன்று வடிவத்தில் இருந்தது மணிப்புறாவின் கூண்டு. அருகில் இருக்கும் மேஜையை இழுத்துத் தூணின் பக்கத்தில் நிறுத்தினார்.

தவமணி காலை நாளிதழைச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி வாசித்துக் கொண்டிருந்தார். கோபாலன் இன்னும் எழுந்திருக்க வில்லை.



ஆருடம் நாற்காலியின் மேலேறி, கையில் உள்ள தானியத்தைப் புறாக்களுக்குப் போட்டுக்கொண்டிருந்தார். எல்லாப் பொருட்களுக்கும் தேய்மானம் என்று ஒன்று இருக்கின்றதே. அதுவும் மர நாற்காலி என்றால் சொல்லத் தேவையில்லை. அதன் ஒரு கால் ஆட்டம் கண்டிருந்தது.

ஆருடம், மணிப்புறா தன் கையில் உள்ள தானியத்தைக் கொத்தும் காட்சியை ரசித்துக்கொண்டிருந்ததால், நாற்காலியின் அபாய அறிவிப்பை அறியவில்லை.

படார் என்று முறிந்து சாய்ந்தது நாற்காலி. ஆருடம் பிடிப்பின்றி சரிந்துவிழுந்தார். அருகில் இருந்த பூந்தொட்டியில் அவரது தலை மோதியது. ஐயோ என்ற அலறலுடன் கீழே மயங்கி விழுந்தார்.

அவரது அலறல் வீட்டையே கலக்கியது. தவமணி நாளிதழை அப்படியே போட்டுவிட்டுத் தோட்டத்துப் பக்கம் ஓடினார். கோபாலகிருஷ்ணன் அலறி அடித்துக் கொண்டு மாடிப்படியை விட்டு இறங்கி ஓடினான்.

ஆருடம் ரத்தப்போக்கில், தலையைக் கையில் பிடித்தபடி விழுந்து கொண்டிருந்ததைக் கண்டு இருவரும் செய்வதறியாமல் திகைத்தனர். ஆருடம் பேச முடியாமல் மயக்கமுற்றிருந்தார். அவரைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனையை நோக்கி விரைந்தனர்.

மருத்துவமனையில் தீவிர சிகிக்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்தார் ஆருடம். வெளிப்புற வராண்டாவில் தவமணி இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான் கோபாலன்.

ஐந்து நிமிடங்கள் மௌனமாய் விடைபெற்றன. மருத்துவமனையின் தலைமை டாக்டர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் எழுந்து நின்றார் தவமணி.

ஐயா, நிலைமை எப்படிங்க இருக்கு. அபாயம் ஒன்றும் இல்லை அல்லவா? என்று கேட்டார் தவமணி.

ஆபத்து ஒன்றுமில்லை பெரியவரே.. தலையிலிருந்து அதிகமான அளவு இரத்தம் வெளியேறிவிட்டிருக்கிறது. கொஞ்சம் இரத்தம் ஏற்றினால் எங்களது சிகிச்சைக்கு உதவியாக இருக்கும் என்றார் டாக்டர்.

பரவாயில்லைங்க டாக்டர். என் அம்மாவிற்கு இரத்தம் ஏற்றுங்கள். நான் இரத்தவங்கியில் இரத்தத்தைப் பெற்று வருகிறேன் என்றான் கோபாலன்.

தம்பி... உன் அம்மாவிற்குத் தேவையான இரத்த வகை தற்போது எங்களது

**உறுப்பு தான வரலாறு**

மூளைச்சாவு அடைந்தோரிடமிருந்து உறுப்புகளைத் தானமாகப் பெற்றுத் தேவையானவர்களுக்குப் பொருத் தும் சிகிச்சைமுறை இன்று பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இதற்கான சட்டம் 1994ஆம் ஆண்டில் இந்தியா வில் நிறை வேற்றப்பட்டது. உறுப்பு களைத் தானம் செய்ய மூளைச்சாவு அடைந்தவரின் உறவினர்கள் முன் வரவேண்டும் என்பது சட்டம். 1995ஆம் ஆண்டு மும்பையில் இவ்வாறு தானம் பெறப்பட்ட சிறுநீர கம் மற்றொருவருக்குப் பொருத்தப் பட்டது. இதுதான் இந்தியாவில் நடந்த முதல் உறுப்பு தானம். ஆனால் தமிழகத்தில் 2008ஆம் ஆண்டில் தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. தமிழகத்தில் இதுவரை 555 பேர் மூளைச்சாவு அடைந்து தங்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய்துள் ளனர். இது அவசரமாகச் செய்ய வேண்டிய ஓர் அறுவைச் சிகிச்சை என்பதால் உறுப்புகளை விமானத்தில் கொண்டு செல்லும் வசதியும் இப்போது செய்யப்பட் டுள்ளது.

பத்திரிகைச் செய்தி

இரத்த வங்கியில் இல்லை. உன் அம்மாவிற்குத் தேவையான பாஸிட்டிவ் வகை இரத்தம் உங்களது உறவுக்காரர்களிடத்தில் இருக்குமல்லவா... உடனே அவர்களை வரச் சொல்லுங்கள். என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

தவமணி என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கலானார். கோபாலன் தந்தையை உற்று நோக்கினான்.

அப்பா, நிச்சயம் நம் உறவினர்கள் வர மாட்டார்கள். நீங்கள் செய்கிற உடல்தானத்தைப் பற்றி அவர்கள் அறிந்து விட்டார்கள்.

எனக்குத் தெரியும் கோபாலா...

நீங்களே நேரடியாகச் சென்று நான் உடல்தானம் செய்யவில்லை. என் மனைவிக்கு இரத்தம் ஏற்ற வேண்டும் வாருங்கள் என்று என் மாமாவை அழைத்து வாருங்கள்... என்று தந்தையைத் துரிதப்படுத்தினான் கோபாலன்.

நான் சென்று உன் மாமாவைச் சந்திக்கிறேன். விவரத்தைக் கூறி அழைத்து வருகிறேன். ஆனால் என் முடிவில் மட்டும் பொய் சொல்ல மாட்டேன் கோபாலா என்றார் தவமணி.



இருவரும் கருத்துப்பரிமாற்றங்கள் செய்து கொண்டிருந்ததைப் பக்கத்து அறையிலிருந்த இளைஞன் கேட்டுக்கொண்டிருந்தான்.

அப்பா, உங்கள் முடிவைத்தான் மாற்றித் தொலையுங்களேன். உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர் யாரேன்று தெரியுமல்லவா?

கோபாலா.. எது எப்படியாகிலும் நடந்தே தீரும். என் மனைவியும் பிழைப்பாள். அதற்காக நான் பொய் சொல்வதால் அது நடந்தேறி விடாது என்றார் தவமணி.

கோபாலன் எரிச்சலாகிப் போனான். நான் போய் விவரம் கூறி அழைத்து வருகிறேன் என்று புறப்பட ஆயத்தமானார்.

ஐயா என்றான் அருகில் இருந்த இளைஞன்.

குரல் வந்த திசையை நோக்கினார்கள் தந்தையும் மகனும். அருகே ஒரு இளைஞன் இருப்பதைப் பார்த்தனர்.

தம்பி என்ன விஷயம் சொல்லப்பா? என்றார் தவமணி.

ஐயா, நான் உங்களைப் பற்றி நிறையவே அறிந்திருக்கிறேன். உங்கள் மீது நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருப் பவன் நான், உங்களது தெருவில் அமைந்துள்ள கடைசி வீடுதான் என் வீடு. பக்கத்து அறையில்தான் என்

தாய் சிகிச்சை பெற்று வருகிறார். நீங்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இரத்த வகையைச் சேர்ந்தவன் நான். உங்களது துணைவியாருக்கு நான் இரத்தம் செலுத்தினால் நம் நாட்டுச் சுதந்திரத்திற்காகப் போராடியவரின் குடும்பத்துக்கு மரியாதை செலுத்திய பாக்கியம் எனக்குக் கிட்டும். தயவு செய்து மறுக்காதீர்கள் என்று தவமணியிடம் மன்றாடினான் இளைஞன்.

தவமணியின் கண்கள் கலங்கின கோபாலனைப் பார்த்தார். சற்றுமுன் தந்தை கூறிய வார்த்தைகள் ஞாபகமாயின.


தம்பி, உன் அம்மாவிடம் ஒரு வார்த்தை கேட்டுக்கொள்வது நல்லது என்றான் கோபாலகிருஷ்ணன்.

அண்ணா.. என்னைவிட அம்மாதான் உங்கள்மீது மதிப்பு வைத்திருப்பவர். அவர் ஒன்றும் சொல்லமாட்டார். பரிபூரண ஓய்வில் இருக்க வேண்டும் என்று டாக்டர் கூறியதால் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார் என்றான் இளைஞன்.

இருவராலும் அதற்கு மேல் ஒன்றும் பேசமுடியவில்லை. மறுபடியும் டாக்டர் கிளம்பி வந்தார். அவசரப்படுத்தினார்.

அந்த இளைஞனின் இரத்தம் ஆருடத்திற்குப் பாய்ச்சப்பட்டது. ஏறத்தாழ ஒரு பாட்டில் இரத்தம் ஏற்றப்பட்டு விட்டது. இரத்தம் கொடுத்த களைப்பில் வெளியே வந்த இளைஞனிடம் நன்றி கூறினார்கள் கோபாலனும் தவமணியும்.

அந்த இளைஞன் புன்முறுவல் ஒன்றை உதிர்த்துவிட்டுப் பக்கத்து அறைக்குச் சென்றுவிட்டான்.



சில மணி நேரங்களில் ஆருடம் கண்விழித்து விட்டாள். தவமணி மனைவியைக் கண்டு பிரகாசமானார். கோபாலன் அந்த இளைஞனை மனதில் வைத்துப் போற்றினான். கடவுள் நல்லவர்களைக் கைவிடுவதில்லை. எந்த வடிவத்திலேயாவது வருவான் என்று பிதற்றினான்.

டாக்டர் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் பக்கத்து அறையான அந்த இளைஞனின் அறையில் புகுந்தார்.

தவமணியும், கோபாலனும் ஆருடத்தைப் பிடித்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார்கள்.

தன் மனைவிக்கு இரத்தம் செலுத்திய இளைஞனிடமும், அவன் அம்மாவிடமும் கூறிவிட்டு அவர்களை நம் வீட்டிற்கு ஒருநாள் வர வைக்க வேண்டும் என்ற ஆவலில் பக்கத்து அறைக்குள் நுழைந்தனர்.

அவர்கள் கண்ட காட்சி மூவரையும் அதிர வைத்தது. தவமணியும், கோபாலனும் அந்த இளைஞனையே வெறிக்கப் பார்த்தனர். அருகே டாக்டர் நின்று கொண்டிருந்தார்.

மூவரும் அருகே நிற்பதைக் கூட அந்த இளைஞன் கவனிக்கவில்லை. தாயின் உடல்நலத்தைப் பார்த்துக் கதறினான். கண்ணீர் வடித்தான்.

தவமணி டாக்டரிடம் சென்று விசாரித்தார்.

ஐயா, இந்த இளைஞனின் அம்மாவிற்கு இரண்டு சிறுநீரகமும் பழுதாகி விட்டது. அவருக்கு வேண்டிய ஒரு சிறுநீரகம்கூட கிடைக்கவில்லை. ஒருவன் கொடுக்கிறேன் என்று சொன்னான். கடைசி நேரத்தில் அவனும் பின்வாங்கிக் கொண்டான். எவ்வளவு முயன்றும் கிடைக்கவில்லை. இந்த அம்மாவின் உயிரும் பிரிந்து போய்விட்டது. வசதி படைத்தவன் பணம் கொடுத்து வாங்கிக்கொள்வான். ஏழைகளுக்குத் தேவை என்றால் எப்படி கிடைக்கும்? மனிதநேயம் மிக்கவர்கள் மண்ணுக்குப் போகிற உடலை பிறருக்குத் தானம் செய்தால் எத்தனை உயிர்கள் காப்பாற்றலாம் ஐயா... ஆனால் இந்த மனித வர்க்கம் செவிமடுத்துக் கேட்குமா– என்றார் டாக்டர்.

மூவரும் அதற்குமேல் அந்தத் துயரக் காட்சியைப் பார்க்க முடியாமல் வெளியே வந்தனர். தவமணியின் கண்கள் கலங்கியிருந்தன. உடல்தானம் பற்றிய விண்ணப்பம் அவரது பாக்கெட்டிலேயே இருந்தது. அதை எடுத்துப் பிரித்தார். ஆருடம் கணவனையே பார்த்தாள். கோபாலன் தந்தையை நோக்கினான். ஆருடம் கண்களால் உத்தரவு கொடுத்தாள். தவமணி கோபாலனைப் பார்க்க, அப்பா எனக்கும் ஒரு விண்ணப்பம் கிடைக்குமா என்று தந்தையின் கரத்தைப் பற்றி வேண்டினான் கோபாலன்.

**மகேஷ்வர்**

**மகேஷ்வர்**

*அறிவு வளர்ச்சி தரும் சிறுவர் கதைகள் என்ற நூலின் ஆசிரியர். சமுதாய நோக்குடன் பல படைப்புகளை எழுதி வருபவர். சிறந்த மனிதநேயச் சிந்தனையாளர்.*

## செயல்பாடுகள்

- உறுப்புதானம் செய்வதால் ஏற்படும் நன்மை பற்றி விளக்கமாக நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.
- தவமணியின் பாத்திரப் படைப்பினைத் திறனாய்வு செய்து கட்டுரை எழுதுங்கள்.

## மனித உறவுகளே மகத்தான சொத்து

இயற்கை ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு விதமான ரசனையோடு வார்த்தெடுக்கிறது. அந்த விதமான வார்ப்புகளில் சில மிக அபூர்வமாக, வித்தியாசமாக அமைந்துபோகும். அதுபோன்ற மாறுபட்ட மனிதர் ஒருவரை அறிமுகப்படுத்தினார் திருச்சி திரு. எம்.ஏ., ஷபி அகமது அவர்கள்.

அவரால் அடையாளம் காட்டப்பட்ட அந்த வித்தியாசமான மனிதர் திருச்சி அண்ணாநகரைச் சேர்ந்த ஆடிட்டர் என். மோகன் அவர்கள் தான். அவரை அண்ணா நகரில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

கருஞ்சாம்பல் நிற சபாரி உடையில் மிடுக்காக இருந்தவரைப் பார்த்த உடனேயே 'கொஞ்சம் அழுத்தமானவராக இருப்பார் போலிருக்கிறதே!' என்று நமக்குள் மெல்லமாய் எழுந்த தயக்கத்தை மறைத்துக் கொண்டு அவரோடு பேச ஆரம்பித்ததுமே 'நான் ரொம்ப எளிமையான மனுசன்!' என்று தன் பளீரென்ற சிரிப்பால் நம் மனசை லேசானதாக மாற்றி விட்டார்.



என் மனசுக்குள் குடைந்து கொண்டிருக்கும் ஒரு கேள்விக்கு முதலில் பதில் சொன்னால்தான், அடுத்த கேள்வியே என்னால் கேட்க முடியும் ஆடிட்டர் சார்!

(அடர்த்தியான மீசைக்குக் கீழே எட்டிப்பார்த்த புன்னகையோடு) "அப்படியென்ன கேள்வி? முதலில் அதைக் கேளுங்க. அதுக்குப் பதில் சொன்ன பிறகு மத்ததைப் பத்தி பேசுவோம்!"

எங்களுக்குத் தெரிஞ்சி எல்லோரும் ஒரு பட்டப் படிப்போ, முதுகலைப் படிப்போ, தொழிற்படிப்போ ஏதோ ஒன்றைப் படிக்கிறாங்க. படிச்சு முடிச்சதும் அதுக்கேத்த மாதிரி ஒரு வேலையைத் தேடிக்கிட்டு வாழ்க்கையை வாழ ஆரம்பிச்சிடறாங்க!

ஆமா! அதுதானே மனித இயல்பு!

ஆனா, நீங்க அந்த இயல்புக்கு மீறில்லே நடந்துக்குறீங்க. சார்ட்டர்டு அக்கவுண்டன்ஸி இருக்குறதிலேயே ஒரு கடினமான படிப்பு. அதைப் படிச்சு முடிச்சு பல வருசமா தொழில் பண்ணிக்கிட்டிருக்கிற நீங்க

இன்னமும் ஏதேதோ பட்டயப்படிப்புகள், பட்டப்படிப்புகள்னு படிச்சுக்கிட்டேயிருக்கீங்களே! அது ஏன்?

படிப்புங்கிறதே அறிவைக் கூர்தீட்டும் ஒரு அற்புதக் கருவிதானே! ஒவ்வொரு விதமான படிப்பும் நமது அறிவை ஒவ்வொரு விதமாக விசாலப்படுத்துதே! எவன் ஒருவன் மிகப் பெரிய படிப்பாளியோ, அவனே மிகச் சிறந்த அறிவாளியாக இருப்பான். கல்வி அறிவே உலகத்தைக் கட்டி ஆளும் வல்லமை கொண்டது என்றெல்லாம் சொல்வார்கள். படிக்கிறதுக்கு வயதும் கிடையாது. எல்லையும் கிடையாது. அதனாலேதான் நான் படிச்சுக்கிட்டே இருக்கேன்.

உண்மையில் நீங்கள் பெற்றிருக்கும் பட்டங்களின் பட்டியலைப் பார்த்து பிரமித்துப்போய்தான் உங்களைச் சந்தித்தே ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். நண்பர் ஷபி அகமது சாரும் உங்களைப் பற்றி நிறையவே சொன்னார். இதுவரை எத்தனை பட்டங்கள், என்னென்ன பட்டங்கள் வாங்கியிருக்கிறீங்க?

(சிரித்தபடி) திருச்சி செயின்ட் ஜோஸப் காலேஜில் பி.எஸ்.சி. முடிச்ச பிறகு சென்னையில் சி.ஏ. படிச்சேன். அழகப்பா பல்கலைக்கழகத்தில் நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் பட்டப்படிப்பு, குஜராத் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பு, விளம்பரத் துறையில் முதுகலைப் படிப்பு, காப்புறுதிச் சட்டத்தில் பட்டயப்படிப்பு, தொழிலாளர் மற்றும் நிர்வாகச் சட்டங்களில் பட்டயப்படிப்பு, மருத்துவமனை மேலாண்மை முதுகலை பட்டயப்படிப்பு, பொதுத் தொடர்பு மேலாண்மை, சுற்றுலா மற்றும் ஹோட்டல் நிர்வாகம், வயது வந்தோர் கல்வி, பள்ளி நிர்வாகம், உபயோகிப்பாளர் நிர்வாக மேலாண்மை மற்றும் தொழிலாளர் நல்லுறவு, தகவல் தொடர்புச் சட்டங்கள், பொது நிர்வாகம், வெளிநாட்டு வர்த்தகம், மார்க்கெட்டிங் மேனேஜ்மெண்ட், ஆட்டோ மொபைல் டெக்னாலஜி என்று இதுவரை 23 பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகள் படிச்சிருக்கேன்.

**மனிதம்**

பிரின்ஸ் என்னும் பெயர் கொண்ட ஓர் இளைஞர். முப்பத்தாறு வயது உடையவர். சொந்த ஊர் திருச்சூர். சொந்தமாக ஒரு வீடு இல்லை. புறம் போக்கு நிலத்தில் ஒரு ஓலைக் குடிசையில் வசிக்கிறார். முது கெலும்பு பாதிக்கப்பட்டு ஒரு நோயாளியாகச் சுமார் எட்டு ஆண்டுகள் படுக்கையிலேயே கிடந்துவிட்டார். பின்னர் ஒரு மறுபிறப்பு கிடைத்ததுபோல் கொஞ்சம் கொஞ் சமாக நோயிலிருந்து குணமடைந்தார். இப்போது நோய்வாய்ப்பட்டுக் கிடப்பவர்களுக்கு உதவு வதே தம் கடமையாகக் கொண்டுள்ளார். தாம் பட்ட துன்பம் இன்னொருவர் படக்கூடாது என்பது அவரது எண்ணம். அதற்காக அவர் என்ன செய்கிறார் தெரியுமா? ஆதரவற்ற ஏழை நோயாளிக்கு அவ்வப்போது பொருளுதவி செய்து வருகிறார். இதுவரை இவ்வாறு உதவி பெற்றவர்கள் பதினான்கு பேர். கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? ஆயிரமோ பதினாயிரமோ அல்ல, சுமார் மூன்று லட்சம் ரூபாய். தன்னுடைய துச்சமான மாதச் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியும் நல்லுள்ளம் படைத்த நண்பர்களிட மிருந்து சேகரித்ததும் தான் இத்தொகை. இதல்லவோ மனித நேயம்!

2014 டிசம்பர் 25ஆம் நாள் மாத்ரு பூமி என்னும் மலையாளத் தினசரியில் வந்தது இச்செய்தி.

நான் கொஞ்சம் பெருமூச்சு விட்டுக்குறேன் சார். இவ்வளவு தானா? இல்ல, இன்னும் இருக்கா?

(சிரித்தபடி) இருக்கு! எதிர்வரும் டிசம்பர் 15இல் ஒரு தேர்வு எழுதுறேன். ஜனவரி 2ஆம் தேதி இன்னொரு தேர்வு இருக்கு. அதோடு 25 விதமான இளங்கலை, முதுகலைப் பட்டம் மற்றும் பட்டயப்படிப்புகள் என்று முடிச்சுடுவேன்.

சார்ட்டர்டு அக்கவுண்டன்ஸி பட்டம் வாங்கிய பிறகுதான் இத்தனைப் படிப்புகளுமா?

ஆமா, ஆமா!

சி.ஏ. பட்டம் என்பதுவே ஒரு கடினமான படிப்பு. அதை முடிச்சதும் என்ன செஞ்சீங்க?

1974 சி.ஏ. முடிச்சதும் IFFCO நிறுவனத்தில் கணக்கு மேலாளராக அகமதாபாத், டில்லி போன்ற இடங்களில் வேலை பார்த்தேன். அதன் பிறகு சொந்த ஊருக்கே வந்துடலாம்னு வீட்ல பிரியப்பட்டாங்க. எனக்கும் அதுதான் சரின்னு தோணுச்சு. அப்போ இரண்டு பெண் குழந்தைகள். டெல்லியில் இருந்தேன்.

உங்கள் சொந்த ஊரே திருச்சிதானா?

பக்கத்திலே இருக்கிற முசிறிவட்டம் வாளவந்தாங்கிற கிராமம்தான் சொந்த ஊர். விவசாயக் குடும்பம். அப்பா அம்மா நாராயணன் – மீனாம்பாள் தம்பதியர். திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும், செயிண்ட் ஜோஸப் கல்லூரியிலும் படிச்சேன். பி.எஸ்.சி முடிச்சதும் என் மாமாவும், ஆசிரியருமான காலஞ்சென்ற ஆர். வரதராஜன் அவர்களின் யோசனைப்படி சி.ஏ. படிப்பில் சேர்ந்தேன்.

8. **ஔகாரக்குறுக்கம்**

ஔ என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரைகளிலிருந்து 1 1/2 மாத்திரையளவு குறைந்தொலிப்பது ஔகாரக்குறுக்கம் எனப்படும்.
எ.கா.

ஔவையார், மௌனம்

9. **மகரக்குறுக்கம்**

இது செய்யுளில் மட்டுமே வரும். னகர, ணகர மெய்களுக்குப் பின்வரும் மகர மெய், தனக்குரிய அரை மாத்திரையி லிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிப்பதாகும்.
எ.கா.

போன்ம், மருண்ம், வரும் வண்டி

டில்லி இஃப்கோ நிறுவனத்தைவிட்டுத் திருச்சிக்கு வந்ததும் என்ன செஞ்சீங்க?

இங்கே வந்ததும் சிம்கோ, ஹைஎனர்ஜி போன்ற நிறுவனங்களில் பணிபுரிந்தேன். அதன்பிறகு அதைவிட்டு 1983 முதல் சொந்தமாக ஆடிட்டிங் தொழில் செய்து வருகின்றேன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஸ்டேட் பாங்க் போன்ற வங்கிகளில் தணிக்கை செய்யும் பணியையும் செஞ்சுக்கிட்டிருக்கேன்.

தானுண்டு, தன் தொழிலுண்டு, தன் குடும்பமுண்டுன்னு வாழ்றவங்கதான் இங்கே அதிகம். நீங்க அப்படி இருக்கிறதா தெரியலையே! நீங்க வாங்கின பட்டங்களைவிட நீங்க அங்கம் வகிக்கிற பொதுச் சேவை அமைப்புகளின் எண்ணிக்கை ரொம்ப அதிகம் இருக்கும் போல இருக்கே!

ஆமா. எப்போதுமே அடுத்தவங்களுக்கு ஏதாவது ஒரு விதத்திலே உதவியாக இருக்கணுங்கிறதுதான் என் குணம். சின்ன வயசிலிருந்தே எங்கிட்ட ஒட்டிக்கிட்டிருக்க பழக்கம் அது.

எல்லோர்கிட்டேயும் இல்லாத நல்ல பழக்கமாச்சே அது! என்ன மாதிரி பொது அமைப்புகள்லே இருக்கீங்க? அதுலே சிலதைச் சுருக்கமாச் சொல்ல முடியுங்களா?

மாநில என்.சி.சி ஆலோசனைக்குழு, திருச்சி உள் விளையாட்டரங்கம், இளைஞர் விடுதி, திருச்சி அரசினர் மருத்துவமனை, மத்திய சிறைக்கைதிகள் மறுவாழ்வுக் குழுக்களில் உறுப்பினராக உள்ளேன். தற்போது விமானம், ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துக் கூட்டமைப்பில் பொருளாளராக இருக்கிறேன். மத்திய அரசின் தொலைத் தொடர்புத்துறை, திருச்சி மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமித்துள்ளது. மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தித்துறை திருச்சி மாவட்ட ஆலோசனைக்குழு உறுப்பினராக உள்ளேன். இதல்லாமல் தென்னக ரயில்வே, திருச்சி கோட்டம், திருச்சி ரயில் நிலைய ஆலோசனைக்குழு உறுப்பினராகப் பங்களிப்பை முழுமையாகச் செய்துள்ளேன். இத்துடன் நான் வசிக்கும் மேற்கு அண்ணாநகர் நலச்சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறேன்.



இவை இப்போது. ஏற்கனவே ஏதாவது பொறுப்புகளில் இருந்திருக் கிறீர்களா?

திருச்சி மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டதும் அதன் முதல் ஆணையராகப் பொறுப்பேற்றவர் சுவரன்சிங் அவர்கள். என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட அவர், மாநகரை அழகுபடுத்தும் பொறுப்பின் ஒருங்கிணைப்பாளராக என்னை நியமித்தார். அந்தப் பொறுப்பில் இருந்தபோது மாநகரின் முக்கிய சாலைகளில் மரங்கள் நட்டு வளர்த்தது, பூங்காக்களை நவீனப்படுத்தியது என்று சிறப்பாகச் செய்து முடித்தேன். மாவட்ட ஆட்சியர் தலைமையிலுள்ள மாநகர வளர்ச்சிக்குழு,

திருச்சிராப்பள்ளி தமிழிசைச் சங்கம், இந்தியச் செஞ்சிலுவை சங்கம், திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு, தண்ணீர் அமைப்பின் ஆலோசனைக்குழு, ஒய்.எம்.சி.ஏ. திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம், திருச்சி அறிவாளர் பேரவை, திருச்சி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவர் போன்ற அமைப்புகளின் தலைவர் செயலாளர், நிர்வாகக் குழு உறுப்பினர் என்ற பொறுப்புகளில் இருக்கிறேன்.

இவ்வளவுதானா!

(சிரித்துக்கொண்டே) இன்னும் கொஞ்சம் இருக்கு. விளையாட்டில் கல்லூரி காலத்தில் இருந்தே ஆர்வம் உண்டு. திருச்சி மாவட்டக் கால்பந்துக் கழகம், கூடைப்பந்துக் கழகம், டேபிள் டென்னிஸ் சங்கம், ஹாக்கி சங்கம், வாலிபால் சங்கம் போன்றவற்றின் துணைத் தலைவராகப் பணியாற்றி யுள்ளேன். குஜராத்தில் இருந்தபோது அந்த மாநில கூடைப்பந்து அணியில் இருந்தேன்.

உங்கள் வயதைவிட நீங்கள் ஏற்றுக் கொண்ட பொது வாழ்க்கைப் பொறுப்பு களே அதிகம் இருக்கும் போலிருக்கே!

(சிரிப்பு மாறாமல்) கொடுக்கின்ற பொறுப்பை மறுக்காமல் சிறப்பா செய்றது தான் சரிங்கிற கொள்கையுடையவன் நான். நான் வகித்த பல்வேறு பொறுப்புகளுக்கு நான் படித்த விதவிதமான படிப்பறிவு உதவியாக இருந்தது. விளையாட்டுக் கழகத்தில் இருப்பதற்கு நான் படித்த விளை யாட்டு மேலாண்மைப் படிப்பு உதவி யது. அதேபோல் அரசு மருத்துவ மனை ஆலோசனைக் குழுவில் இருந்தபோது மருத்துவமனை நிர் வாகப் படிப்பு உதவியது.



இதுபோன்ற பொது வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்கள் ஏதேனும்.

நிறைய இருக்கு. இரண்டொன்றை மட்டும் சொல்றேன். தேசிய இளையோர் வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி துவக்க விழாவிற்கு நடிகர் கமல்ஹாசனை அழைத்துச் சிறப்பித்தது. பி.டி.உஷா, ஷைனி வில்சன், குற்றாலீஸ்வரன் போன்ற விளையாட்டுச் சாதனையாளர்களைத் திருச்சி கோட்டை ரோட்டரி கிளப் சார்பில் அழைத்து ராயல் இண்டர்நேஷனல்

ஹையஸ்ட் அவார்டும், ஃபார் தி ஹேக் ஆஃப் ஹானர் அவார்டும், வழங்கிச் சிறப்பித்தது போன்றவற்றைச் சொல்லலாம்.

நீங்கள் ரோட்டரி கிளப்பிலும் இருக்கீங்களா?

என்ன சார் இப்படிக் கேட்டுட்டீங்க! என்னை மாதிரி குணம் கொண்டவங் களால ரோட்டரி கிளப் போன்றவற்றில் பங்கேற்காமல் இருக்க முடியுமா என்ன? திருச்சி கோட்டை ரோட்டரி கிளப்பில் தலைவர் உட்பட பல்வேறு பொறுப்புகளிலும் ரோட்டரி 3000 மாவட்ட அளவிலும் பொறுப்பில் இருந்திருக்கிறேன். இருக்கிறேன்.

ரொம்ப மகிழ்ச்சி! பொதுவாழ்க்கை செயல்பாடுகளில் மைல்கல் என்று சொல்வது போன்ற நிகழ்ச்சிகள் ஏதேனும் உண்டா?

எப்படி இல்லாமல் இருக்க முடியும்? நடிகர் திலகம் சிவாஜி கணேசனை அழைத்துத் தன்னலமற்ற சேவைக்காக விருது வழங்கி அவரின் அசாத்தியத் திறமைகளைப் பாராட்டிப் பேசினேன். அதைக் கேட்டு அவர் என் பேச்சாற்றலைப் பாராட்டிப் பேசினார். எல்லாவற்றுக்கும் மேலாக முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.பெ.ஜெ. அப்துல்கலாம் அவர்களை அவர் குடியரசுத் தலைவராக இருந்தபோதே திருச்சியில் அவரோடு பத்து நிமிடம் தனிப்பட்ட முறையில் மனம் விட்டுப் பேசியது என் வாழ்க்கையில் நான் சந்தித்த பொன்னான பொழுதுகள்.

**10. ஆய்தக் குறுக்கம்**

நிலை மொழியில் தனிக்குறிலை அடுத்து லகர, ளகர வந்து வருமொழி முதலில் தகரம் வந்தால் லகர, ளகரம் ஆய்தமாகத் திரிந்து தகரம் நகரமாகத் திரியும். அஃது ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

எ.கா.

அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

உங்கள் பெருமிதத்தைப் பூரிப்பைப் புரிஞ்சுக்க முடியுது சார்! இவ்வளவு நீண்ட பொதுவாழ்க்கைக்காக. தொழில் ரீதியாக உங்களுக்குப் பரிசுகளோ, பாராட்டுகளோ வழங்கப்பட்டிருக்கிறதா?

மாநகரக் கலாச்சாரக் குழுவின் சார்பாகத் திருச்சி மாநகர முதல் ஆணையர் சுவரன்சிங் அவர்களால் சிறந்த பொதுச்சேவையாளர் விருது வழங்கப்பட்டது. திருச்சி ஜமால் முகமது கல்லூரி நிர்வாகத்தால் 2012இல் பொதுச்சேவை மற்றும் தணிக்கைத்துறை சிறப்புப் பணியாளர் விருது வழங்கப்பட்டது. திருச்சி செயின்ட் ஜொசப் கல்லூரி சார்பில் சிறந்த சமூக சேவையாளர், சிறந்த தணிக்கையர் விருது எனச் சிறிதும் பெரிதுமாகப் பலவிதமான விருதுகள், பாராட்டுகள் கிடைத்திருக்கின்றன. (புன்னகைக்கிறார்) ஆனால், இவை போல எதையும் எதிர்பார்த்து எதுவும் செய்ததில்லை நான்.

நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், எதிர்பார்ப்பு இல்லாத சேவைக்காக அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதுதானே நியாயம். அப்படிக் கிடைத்ததா என்பதற்காகத்தான் கேட்டேன்.

இப்படி நிறையப் பொறுப்புகளிலும் தொடர்பிலும் நான் இருப்பதால் ஊரறிந்தவனாக இருக்கிறேன். யாருக்காவது ஏதாவது உதவி என்று வேறு யாரைத் தேடிப்போனாலும் பலருக்கு என் ஞாபகம் வந்துவிடுகிறது. உதவி கேட்டு வரும் பலரை, ஆடிட்டர் மோகனிடம் போய்ச் சொல்லுங்கள். அவர் நிச்சயம் செய்து கொடுப்பார்! என்று நம்பிக்கையூட்டி என்னிடம் அனுப்பி வைப்பார்கள். படிப்புதவி வேணும், பாஸ்போர்ட் வாங்க உதவணும், தொழில் செய்ய கடனுதவி தேவை, மருத்துவ உதவி பெறணும், வேலை வாங்கித் தரணும்! இப்படி ஏதேதோ விதவிதமான உதவிகளைக் கேட்டு வருகிறார்கள். அவர்களை அதற்கு உரியவர்களிடம் அழைத்துப் போகிறேன். அவர்கள் கேட்டது கிடைக்க உதவுகிறேன். அவ்வளவுதான் என் வேலை. அவரவர் தகுதிக்கு ஏற்ப காரியம் நடக்கிறது. அப்படி நடப்பதைப் பார்த்து பரவாயில்லே! அவர்கள் கேட்டு வந்தது நடந்து விட்டதே! என்று நம் மனசு நிம்மதி அடைகிறது. அவ்வளவுதான்! இதில் வேடிக்கை என்னவென்றால், நான் உதவி செய்தவர்கள் பலரை யாரென்றே எனக்குத் தெரியாது. ஆனால், என்னால் உதவி பெற்றவர்கள், பெறாதவர்கள் ரொம்பப் பேருக்கு நான் யாரென்று நன்றாகவே தெரிந்திருக்கிறது.

**உத்தமசோழன்**

## செயல்பாடுகள்

- உடல் உறுப்பு தான முகாமில் பங்குபெற்று உரையாற்றுவற்கான சொற்பொழிவு உரை ஒன்று தயாரியுங்கள்.
- உறுப்புதானத்தை ஊக்குவிக்கும் வகையில் நடைபெறும் ஊர்வலத்தில் ஏந்திச் செல்வதற்கான முத்திரை வாக்கியங்கள் உருவாக்குங்கள்.
- சமூகச் சேவையாளர் ஒருவரை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரிக்கவும்.
- உங்கள் ஊரில் பொதுநலம் புரியும் ஒருவரைப் பற்றிய செய்திகளைத் தன் வரலாறு போல் எழுதுங்கள்.

# இலக்கியத் தூளி



## கருணை மறவன்

எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
தானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன் றன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வருஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
ஒய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்தன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிருங் குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ
(சிலப்பதிகாரம் - அடைக்கலக்காதை - 37 - 53)

இளங்கோவடிகள்

### சிலப்பதிகாரம்

ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானது. முதல் தமிழ்க் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுவது. தமிழ் இலக்கியத்திற்குச் சேரநாட்டின் மகத்தான நன்கொடை சிலப்பதிகாரம். குடிமக்கள் காப்பியம் என்ற பெருமையும் இக்காப்பியத்திற்கு உண்டு. இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். சேர மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர்.

### திருக்குறள் கூறும் மனிதநேயம்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு.

(குறள் : 81)

வறியார்க் கொன்று ஈவதே ஈகை, மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

(குறள் : 221)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

(குறள் : 231)

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

(குறள் : 322)

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

(குறள் : 525)

## செயல்பாடுகள்

- சிலப்பதிகாரம் பற்றிச் சிறு குறிப்பு தாருங்கள்.
- அடைக்கலக்காதை கூறும் கோவலனின் மனிதநேயச் செயல்பாட்டினை விளக்குங்கள்.
- இலக்கியங்கள் கூறும் மனித நேயம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- வள்ளுவர் கூறும் மனிதநேயக் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் குற்றியலுகரச் சொற்களைத் திரட்டி எழுதுங்கள்.

அலகு
# 5
# இளைய வயல்

ஒரு நாட்டின் வளர்ச்சி கிராமத்தின் வளர்ச்சியில் உள்ளது. கிராமத்தின் வளர்ச்சி வேளாண்மையை உயிர்நாதமாய்க் கொண்டு இயங்குகிறது. இந்த உலகச் சக்கரம் இயங்க வேளாண்மையே அடிப்படையாகிறது. விவசாயிகளின் வியர்வைத் துளிகளில்தான் நமது அன்றாடத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பார் வள்ளுவர். வேளாண்மையும், உழவர்களும் தான் அனைத்து வகையான தொழில்களும் உருவாக உறுதுணைபுரிகின்றனர். பருவகாலப் பயிர்கள் மாறுபடும் தன்மையுடையவை, செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவை. வேளாண்மைக்கு மிகப்பெரிய சவால்களாகின்றன. வேளாண்மையால் பல்வேறு தொழில்கள் வளர்கின்றன போன்ற வேளாண்மையின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணரவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- *இன்றைய வேளாண்மைப் பிரச்சனைகளை அறிந்து எழுதுகிறார்கள்.*
- *பருவகாலத்துக்கு ஏற்பப் பயிர் செய்யும் முறைகள் குறித்து அட்டவணை தயாரிக்கிறார்கள்.*
- *செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கட்டுரையாக எழுதுகிறார்கள்.*
- *வேளாண்மை செழிக்க நிலவளம் முக்கியத்துவம் பெறுகிறது என்னும் கருத்தை உணர்ந்து சொற்பொழிவு தயார் செய்கிறார்கள்.*
- *வேளாண்மை தொடர்பான விடுகதைகள், பழமொழிகள், பாடல்கள், பயிர்வகைகள் இவற்றைத் தொகுத்து வேளாண் மலர் வெளியிடுகிறார்கள்.*
- *வேளாண்மைத் தொடர்பான பழமொழிகளைத் திரட்டுகிறார்கள்.*
- *வேளாண்மையில் ஏற்படும் பாதிப்புகளை அறிந்து எழுதுகிறார்கள்.*
- *வேளாண்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் வகையில் கடிதம் எழுதுகிறார்கள்.*

# பருவகாலப் பயிர்கள்



## ஏர்முனை

ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே
என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே - (ஏர்முனை)
பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே - பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே - நாம்
சேமமுற நாள் முழுவதும் உழைப்பத னாலே - இந்தத்
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே - (ஏர்முனை)
நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக
பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுக்கட்டாக - அடிச்சுப்
பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக - (ஏர்முனை)
வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா? - தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா - இது
வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? - என்
மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா - (ஏர்முனை)

அ. மருதகாசி

**மருதகாசி**

13.02.1920 இல் திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு என்ற இடத்தில் பிறந்தவர். அய்யம்பெருமாள், மிளகாயி அம்மாள் பெற்றோர்கள். திரைக்கவித்திலகம் என்ற பட்டம் பெற்றவர். 29.11.1989 இல் காலமானார். திரைக்கவித்திலகம் 'அ. மருதகாசி பாடல்கள்' என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. சமூகம் என்னும் தலைப்பின் கீழே வரும் பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- ஏர்முனை கவிதையை வாசித்து நயம்பாராட்டி எழுதுங்கள்.
- காலத்திற்கேற்ற விவசாயப் பயிர்வகைகளைப் பருவம், காலம் ஆகியவற்றுடன் அட்டவணைப்படுத்தி எழுதுங்கள்.

## ஆடிப்பட்டமும் அறிவியல் நுட்பமும்

வேளாண்மைக்கு அடிப்படைத் தேவை மண்வளம், நீர்வளம் மற்றும் ஏற்ற பருவம். அந்தந்தப் பயிருக்கான பருவகாலத்தைப் பற்றி நம் பழந்தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனையே ஆடிப்பட்டம் தேடி விதை, பட்டம் தப்பினால் நட்டம், காலத்தில் பயிர் செய்தால், கடன் வாங்க வேண்டாம், கரும்பாய் இருந்தாலும் காலத்தே பயிர்செய் போன்ற பழமொழிகள் வாயிலாக எடுத்துக் கூறியுள்ளனர்.

குறித்த பருவம், எதிர்பார்த்த மழை இவை இரண்டும் அமையும்போது வேளாண்மையும் செம்மையாக நடைபெறும். பருவம் தவறி விதைத்தால் விதைகள் அதிக அளவு மழையினால் அழுகியோ அளவுக்கதிகமான வறட்சியால் முளை கருகியோ போகும். இவற்றையும் மீறி முளைக்கும் விதைகள் நன்கு செழித்து வளராது மகசூல் பாதிக்கப்படும்.

ஆடி மாதம், ஜூலை மூன்றாம் வாரம் முதல் ஆகஸ்ட் மூன்றாம் வாரம் வரையிலான காலம். பொதுவாக ஆடி மாதத்தில் மேற்குத் திசையை நோக்கி நன்கு காற்று வீசினால் ஐப்பசியில் நன்கு மழை பொழியும். ஆனால் ஆடியில் காற்றில்லா விட்டால் பருவமழை பொய்க்கும். எனவே குறைந்த வயதுடைய பயறு வகைகளைப் பயிர் செய்வதிலோ கால்நடைகள் வளர்ப்பிலோ அந்த ஆண்டு கவனத்தைச் செலுத்தலாம் என்று அனுபவத்தின் மூலம் கூறியுள்ளனர்.

கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் (321–296 கி.மு) மானாவாரிப் பயிர்களுக்கு 16 டிரானா (600–800மிமீ)

### காய்கறிச் செடிகளின் பருவநிலை

காய்கறிச் செடிகளைப் பருவ காலமுணர்ந்து பயிரிட வேண்டும். அப்பொழுது தான் அவற்றின் வளர்ச்சியும் அவை அளிக்கும் பலனும் சிறப்பாக அமையும்.

பருவகாலங்களுக்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இறைவன் தாவர இலைகளுக்குச் சில வழிமுறைகளை அருளியிருக்கிறான்.

வறட்சி மிகுந்த கோடைக் காலத்தில் கடும் வெப்பம் காரணமாகச் செடிகள், மரங்களிலிருந்து நீர் அதிக அளவுக்கு வெளியேறிவிடாமல் இருப்பதற்காக அவை தம் இலைகளைக் கோடைக்காலத்தில் உதிர்த்து விடுவதைப் பார்த்திருப்பீர்கள்.

வெயில் இல்லாவிட்டாலும் ஆகாயம் வறண்டிருக்கும் பனிக்காலத்திலும் தன் நீரைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சில வகைத் தாவரங்கள் இலைகளை உதிர்த்து விடுகின்றன.

பகல் வெளிச்சம் குறைவாக இருக்கும் சில மாதங்களில் செடிகள் மிகுதியான வெளிச்சத்தை விரும்பித் தம் கிளைகளைப் பரவலாக நாற்புறமும் செலுத்தி ஒவ்வோர் இலையும் ஒளி பெற வசதியாக அவற்றை விரித்துவைக்கின்றன.

காய்கறிச் செடிகள் பலன் தரும் பருவ காலம் நாட்டுக்கு நாடு மாறுபடுவதுண்டு.

சம வெப்ப தேசங்களாக உள்ள மேலை நாடுகளில் பகல் நேரம் மிகுதியாக உள்ள மாதங்களாகிய பங்குனி முதல் ஆடி வரை உள்ள காலத்தில் காய்கறிச் செடிகள் நல்ல பலனைத் தருகின்றன.

நமது நாட்டிலோ ஆவணி முதல் தை மாதம் வரை செடிகள் தழைத்து வளர்ந்து நல்ல பயனைக் கொடுக் கின்றன.

இந்தப் பருவகாலக் கணக்கை வைத்துத்தான் ஆடிப் பட்டம் தேடி விதை என்ற பழமொழி நமது நாட்டில் வழங்குகிறது.

ஆடி மாதம் போடப்படும் விதைகள் ஆவணி மாதம் முதல் நான்கு மாதங்களில் செழிக்கின்றன.

தற்காலத்தில் செயற்கை முறைகளைக் கையாண்டு பருவமல்லாத காலத்திலும் காய்கறிகளிடமிருந்து பலன்பெறும் முயற்சி நடைபெறுகிறது. இவற்றை அகாலப் பயிர் என்று கூறலாம். ஆனால் பருவத்தில் பலன் தரும் காய்கறிகளின் தரமும் ருசியும் இவற்றிற்கு இருப்பதில்லை.

ஒவ்வொரு காய் வகைகளும் எந்தெந்தப் பருவகாலத்தில் பயன் தருகின்றன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு பயிரிட்டால் ஆண்டு முழுவதும் மாறிமாறிக் காய்கள் கிடைக்குமாறு செய்ய முடியும்.

நாம் எந்தச் செடிகளைச் சாகுபடி செய்தாலும் அவற்றின் ஊடே களைச்செடிகளும் தலைகாட்டு வது தவிர்க்க இயலாத விஷயமாகும்.

களைச்செடிகள் பயிர்களுக்கு அதிக அளவுக்குத் தீமைகளைச் செய்கின்றன. ஆகவே செடி களுடன் சேர்ந்து வளரும் களைகளை அகற்றுவதில் முழுக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இல்லையென்றால் பயிர்களுக்கு நியாயமாகப் போய்ச் சேர வேண்டிய உணவுச் சத்துக்கள் பெருமளவுக்குக் குறைந்து விடுகின்றன.

**வெங்காயம்**

இலைப் பயிர்களில் மிகவும் சிறப்பானது என்று கருதப்படுவது வெங்காயம். வெங்காயம் சேராத சமையலே இல்லை எனலாம்.

மருந்து வகைகளைச் சேர்ந்த மூலிகை களில் வெங்காயத்திற்கு உயர்வான இடம் உண்டு.



மழையளவும், நெற்பயிருக்கு 40 டிரானா (1600-2000மிமீ) மழையளவும் தேவைப்படுகிறது என்று குறிப்புள்ளது. மழையானது பயிர் விதைப்பிலிருந்து, அறுவடை வரை பரவலாக அதாவது மூன்றில் ஒரு பங்கு பருவ மழையின் ஆரம்பக் கட்டத்திலும் (ஜூலை - ஆகஸ்ட்) மற்றும் முடியும் தருணத்தில் (அக்டோபர்- டிசம்பர்) மூன்றில் இரு மடங்கு மத்திய பருவத்திலும் தேவைப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மழைக் காலத்தின் ஆரம்பத்தில் நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களையும், பயறுவகைப் பயிர்களை இடைப்பட்ட காலத்திலும் கடைசியாகக் கடுகு, பார்லி போன்றவற்றையும் பயிர் செய்துள்ளனர் என்பதையும் அர்த்தசாஸ்திரம் மூலம் தெரிந்துகொள்ளலாம். மண் மற்றும் நீர் வளம் குறைதல், பருவநிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் வேளாண் உற்பத்தியைப் பெருமளவில் பாதிக்கின்றன. தற்கால அறிவியல் வளர்ச்சியில் பருவநிலை மாறுபாட்டைத் துல்லியமாக நிர்ணயிக்கும் பல்வேறு முறைகள் (கடல்மேற்பரப்பு, வெப்பநிலை உருவாக்கப்பட்டுக் குறிப்பிட்ட பகுதியில் மழை வருவதை முன் கூட்டியே நிர்ணயிக்கும் துல்லிய முறைகள்) கண்டறியப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் இத்தகைய வசதிகள் பெரும்பாலான விவசாயிகளைச் சென்றடையவில்லை. காலங்காலமாகத் தெரிந்து வைத்திருக்கும் அனுபவ அறிவே அவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்து வருகிறது. இந்த அனுபவ அறிவு நமது அறிவியல் அணுகுமுறை களோடு பெருமளவில் ஒத்திருப்பதை ஆராய்ச்சிகள் மூலமாக உறுதி செய்துள்ளனர்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆராய்ச்சியில் 2003இல் சராசரி மழைக்கு 35 சதவிகிதம் குறைந்த மழையே இருக்கும் என்ற கால நிலை முன்னறிவிப்பு, விவசாயிகளின் பாரம்பரிய அனுபவ அறிவோடு (பருவக்காற்று, பழந்தமிழ் நாட்காட்டிகள்)



பெருமளவில் ஒத்திருந்தது தெரியவந்தது. இத்தகைய ஆராய்ச்சிகள் இன்றும் தொடர்ந்து வருகின்றன.

இவை நவீன விவசாய வளர்ச்சிக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**ஜெ. ரேணுகாதேவி**
**மங்கையர் மலர், ஜூலை 2015**

## செயல்பாடுகள்

- 'ஆடிப்பட்டம் தேடி விதை' போன்ற வேளாண் பழமொழிகளைச் சேகரித்து வெளியிடுங்கள்.
- விவசாயம் சிறப்புறப் பெரிதும் துணைபுரிவது படிப்பறிவா பட்டறிவா என்ற விவாதத்தில் ஏதாவது ஒரு தலைப்பிற்கு விவாதக்குறிப்பு எழுதுங்கள்.
- காலநிலை மாற்றத்தால் வேளாண்மையில் ஏற்படும் பாதிப்புகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

# நாரையும் நண்டும்



## உயிர் நிலம்

பவர் ஸ்பிரேயர் டேங்க் முழுக்க தண்ணீரால் நிரப்புகிற தீக்கொளுத்தி. குடத்தைச் சாய்த்து கவிழ்க்கிற நிதானத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிகிற நீர்.

இதுலே நாப்பது மில்லி, இதுலே இருவது மில்லி, இதுலே முப்பதுமில்லி என்று மூன்று வகை மருந்துகளைக் காட்டியிருக்கிற முருகேசன். அதன்படி அந்தந்த விஷயத்தை அதனதன் அளவில் மூடிகளாலே அளந்து அளந்து சரிக்கிற பாலசுந்தரம். ஒரு மருந்து டேங்க் தண்ணீரைப் பாலாக்குகிறது. இன்னொரு விஷம் பாலில் படமறுக்கிற தேன்நிற இழைகளாக நீள்கிறது. இன்னொரு விஷம் திரவத்தண்ணீராக எவ்வித நிறமாற்றமும் கொள்ளாமல் கலக்கிறது.

மூடியால் திருகிமூடிவிட்டு ஸ்டார்ட் பண்ணுவதற்கான கயிற்றை ஸ்டார்டரில் சுற்றி, சடேரென்று உதறி உருவுகிறவேகத்தில் மோட்டார் உயிர் பெற்று, காடதிர, செடிகள் அதிர, தடதடக்கிறது. தீக்கொளுத்தி டேங்கை ஏந்தித் தூக்கிவிட முதுகைக் கொடுத்து வாங்கிற பாலசுந்தரம்.

தூசிக் காடாகப் பரவுகிற மருந்து. துளிகளாகச் சிதறாமல் புகைச்சீற்றமாக சீறுகிற ஸ்பிரேயர். செடிகள் அதன் மோட்டார் காற்று மோதலில் அலைப் புறுகின்றன. புயல்சூறாவளியால் உலுக்கப்பட்டு நீரால் நனைக்கப் படுகின்றன. நஞ்சு மயமாகிற வெயிலும் காற்றும்.

குடம் குடமாகத் தண்ணீர் சுமக்கிற தீக்கொளுத்தி. ஸ்பிரேயர் சீற்றத்துடன் நிரைநிரையாக நடக்கிற பாலசுந்தரம்.

அய்யாவும், அம்மாவும் ஒரு குறுக்கம் பூராவையும் ஒருநாள் முழுக்க வேப்பெண்ணெய் அடிப்பார்கள். வெறும் அறுபதுரூபாய் செலவு.

ஆறு குறுக்கத்தையும் ஒரே வேலை நேரத்தில் அடித்துவிடுவார்கள். பாலசுந்தரமும் தீக்கொளுத்தியும் பூச்சி மருந்துச் செலவும் அடிப்புச் செலவும் சேர்த்து ஆறாயிரம் ரூபாய். ஒரு குறுக்கத்துக்கு ஆயிரம் ரூபாய்.

அய்யாவும் அம்மாவும் தண்ணிச்சுமையும் ஸ்பிரேயர் டேங்குச் சுமையுமாக நடப்பார்கள். வெயிலில் வெந்து நீரில் நனைந்து கருகுவார்கள். இதோ முருகேசன் பம்ப் ஷெட் ரூமுக்குள் கடல்புறா வாசித்துக் கொண்டிருக்கிறான். பின்னணி இசையாக தடதடக்கிற பவர் ஸ்பிரேயரின் யந்திரக்கூப்பாடு. மோட்டர் பேயிரைச்சல். மோட்டார் கூச்சலைத் தாண்டிக் கூப்பாடு போட்டுப் பேசுகிற தீக்கொளுத்தி.

முந்தா நாள் திருவேங்கடம் போயிருந்தான் முருகேசன். எக்ஸ்.எல்.லில் தான் போனான். நிதானமான வேகத்தில் நிதானமற்ற யோசனைகளுடன் போனான்.

ஏகப்பட்ட கடன்கள். எந்நேரமும் யாராவது ஒருவர் பாக்கிகேட்டு வருவார். சத்தம் உயர்த்தி கேவலப்படுத்தா விட்டாலும் போகிற இடங் களுக்கெல்லாம் வந்து முற்றுகையிடுகிற கடன்காரர்களை நினைத்தால் இவனுக்கு அவமானமாக இருக்கிறது. சூழும் கேவல உணர்வால் மனசுகிடந்து அயற்சியடைகிறது.

அய்யாவின் மேற்பார்வையில் வியர்வையில் தெற்காட்டுப் புஞ்சைமண் கன்னங்கரேரென்று ஈரல் கறி மாதிரி திண்ணக்கமாக இருக்கிறது. இன்றைக்கும் வந்து விழுந்த ஒற்றைத்துளியை பல்லாயிரம் தானிய மணிகளாகத் திருப்பித் தருகிற தாயாக, தாட்டியமான இளந்தாயாக இருக்கிறது. அதன் கம்பீரம். மண்ணெல்லாம் கிடக்கிற ஆட்டுச் சாணிகள். ஆட்டுப் புழுக் கைள். வளர்கிற பயிர்களில் இருக் கிற வீர்யம் வாங்கிற கதிர்களில் அடர்த்தியான மணிப்பிடிப்பு. பருத்தியோ மிளகாயோ, நினைத் ததை விடக் கூடுதலாக விளைகிற விளைச்சல். இன்றைக்கும் சங்



கரன்கோவில் கமிஷன் கடையில் கடனில்லாமல் வற்றல்போட்டு இருபத்தையாயிரத்துக்குமேல் சீட்டை முடிக்கிற சம்சாரியாக அய்யா.

பாலையா நாயக்கர் புஞ்சை. இந்த ஆறு வருடத்தில் மாற்றுமண் விழாமல் சோகை பிடித்துப்போய் வெறுத்துக்கிடக்கிற நிலமுகம். குப்பை விழாமல் சாணி விழாமல், தூசி துப்பட்டையில்லாத சுத்தமாக சூன்யமான வெளுப்பில் கிடக்கிற வெற்றுநிலம். மக்காச்சோளம் முழங்கால் உயரத்துக்கு மேல் வளர மறுக்கிறது. யூரியா, டி.ஏ.பி காம்ப்ளெக்ஸ் பொட்டாஷ் என்ற எத்தனை ரசாயன உரங்களை அள்ளியிறைத்தாலும், உள்ளதும் போச்சுடா நொள்ளைக்கண்ணா என்பது போல விளைச்சல் அளவு குறைந்தே வருகிறது.

அய்யாவைவிடப் பத்துமடங்கு கூடுதலாகச் செலவுகள். அய்யா எடுக்கிற மகசூலில் பத்தில் ஒரு பங்கு தான் இவனால் எடுக்க முடிகிறது. என்ன செய்ய?

செலவுகள் கூடி வருமானம் வீழ்ந்தது மட்டுமல்ல, நிலமும் உயிரிழந்து விட்டது. எதற்கும் லாயக்கற்ற சோகைநோய் பீடித்துக் கிடக்கிறது.

செலவு பெருகி.. வரவுகுறுகி.. கடன் வளர்கிறது. அதுவும் பெருக்கல் விகிதத்தில். அஞ்சு, ஆறு, ஏழு என்றல்ல. அஞ்சு, பத்து, நூறு, ஆயிரம் என்று வளர்கிறது.

ஆறுவருஷத்தில் முழுசாகத் தோற்றுப் போனதை உணர்கிற முருகேசன். உணர்த்துகிற பலவீனத்தில் பருத்திச் செடிகள். அதன் காய்ப்புழுக்கள். மிளகாய்ச்செடிகள். அதன் இலைகள் சுருட்டை யடித்துப் போய் சுண்டெலிக் காதுகளாக நெளிந்து கிடக்கின்றன. பச்சை நிறத்தில் மின்ன வேண்டிய மக்காச்சோளத்தில் வெளிர்முகநோய்.

நினைக்க நினைக்கச் சோர்வடைகிற மனசு. நினைக்காமலிருக்க முடியாத வெப்பச்சூழல். கடன் நெருப்பு நாக்குகள்.

உப்புமூடை சுமக்க ரெண்டு ஆள். அள்ளிவிதைக்க ஓர் ஆள். தண்ணீர் பாய்ச்ச ஓர் ஆள். எல்லாவற்றுக்கும் ஆள். கூலியாள் அள்ளி அள்ளி இறைத்த யூரியாவெல்லாம் என்னாயிற்று? மூடை மூடையாக உழவில் கொட்டிய டி.ஏ.பி காம்ப்ளெக்ஸ் எங்கே போயிற்று? மண்ணுக்கு வலிமை சேர்த்ததா? மண்ணின் உயிர்ச்சத்தை ஒன்றுக்குப் பத்தாகப் பிடுங்கிக் காற்றில் கரைத்ததா?



உரக்கடையில் வந்து நின்றான். ஒரு

தடவைக்கு ரெண்டு மூன்று தடவைகள் ஆப்பிள் பழங்களும் ஹார்லிக்ஸ் பாட்டில்களுமாக பார்க்க வந்த உரக்கடை முதலாளி.

இவனது கோபத்தை ஆற்றி ஆற்றிச் சூடணைத்து நீருக்குள் போட்ட தீக்கங்காக்கிவிட்டார் உரக்கடைக்காரர்.




அவருக்கு முப்பத்தேழாயிர ரூபாய் கடன் இருக்கிறது. வில்லங்கம் பண்ணாமல் வாய்ச்சத்தம் போடாமல், வியாபாரத்தை வளர்த்துக் கொண்டே வசூல் பண்ணி யாகணும். நோகாமல் நொங்கெடுத்து ஒதுங்கிக் கொள்ளணும்.

நுட்பமான உணர்வுடன் வலை பின்னிய அவரது சிந்தனை. இங்கிதமான இனிமையான அணுகுமுறைகள்.

வந்துநின்ற முருகேசனை...

வாப்பா... வா.. வந்து உக்காரு... என்று உபசரித்து வரவேற்கிறார். டீ வரவழைத்துத் தருகிறார்.

அவர் டேபிளுக்கு எதிரில் உட்கார்ந்திருக்கிற ஒரு வெள்ளைச் சட்டைப் பார்ட்டி. அவரது கணக்கைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார் உரக்கடை முதலாளி.

கன்னங்கரேலென்று மினுமினுக்கிற அந்தப் பார்ட்டி. வெள்ளை வெளேரென்று பளிச்சிடுகிற வேட்டிச் சட்டை. விரல்கள் முழுக்க மோதிரங்கள். வலதுகையில் பிரஸ்லெட். கழுத்தில் முறுக்கு வடத்தங்கச் செயின்.

இரு முருகேசா... இவருக்கு டோட்டல் பண்ணி ரூவாயை வாங்கிட்டு வாரேன். நீ சித்தே உக்காரு.

சரியென்று சேரில் சற்று விலகி உட்கார்ந்த முருகேசன் டேபிளிலிருந்து ஒரு வெள்ளைத்துண்டுத் தாளையும் பேனாவையும் எடுத்தான்.

நினைவுகளைத் தோண்டித்துருவி ஞாபகங்களைத் தட்டி எழுப்பி ஒவ்வொன்றாக எடுத்து சிட்டையில் எழுதினான். யார் யாருக்கு எவ்வளவு கடன்?

கைமாற்று கால் மாற்று முதல் சொஸைட்டிக் கடன் ரெண்டுபைசா வட்டிக்கடன் வரைக்கும் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் குறித்து வந்தான்.




பூச்சி மருந்துகளின் நெடி, நாசிக் குள் ஏறுகிறது. ரசாயன உரங்களின் வீச்சமும் நாற்றமும் குடலைப் புரட்டுகிறது. அதை யெல்லாம் யோசிக்காமல் கடன்காரர்களையே மனசுக்குள் தேடினான். யோசனை களிலிருந்து உருவினான். பட்டியல் போட்டான். வரிவரியாக வரிசை தப்பாமல் எழுதி வந்தான், கூட்டிப் பார்த்தான். அவனுக்கு மலைப்புத் தட்டியது. உள்ளுக்குள் அச்ச வியர்வைப் பெருக்கு.

ஒரு லட்சத்து எண்பத்தி ஏழாயி ரத்து அறுநூறு ரூபாய். அந்தத் தொகை அவனை அச்சுறுத்தியது. மிரட்டி யது. அடிவயிற்றில் பகீரிடுகிற வெறுமைப்படர்வு.

கூட்டுறவு வங்கிகள், அரசுசார் கிராம வங்கிகள் எல்லாமே பயிர்க்கடன்களை நடைமுறையளவில் நிறுத்திவிட்டுத் தங்க நகைக்கடன் மட்டுமே தருகின்றன. இனிமேல் தனியாரிடம் தான் கடன் வாங்கி விவசாயம் செய்தாக வேண்டிய நிலைமை நிர்பந்தச் சூன்யம்.

உரக்கடை முதலாளி எதற்காகவோ எழுந்து வந்தவர் இவனைக் கடக்கிறபோது இவன் எழுதிக் கொண்டிருந்த சிட்டையை வெடுக்கென உருவினார். விளையாட்டாக அவரது வேடிக்கைச்சிரிப்பு.

என்னப்பா கவிதை கிவிதை எழுதுறீயா?

இல்லே மோலாளி, கடன்பட்டியல்

என்னப்பா, யார் பட்டியல் இது? ஏறக்குறைய ரெண்டு லகரம் வருது?

என்னோடது தான்

ஆறுவருஷத்துக்குள்ளேயா? இம்புட்டு ஆளுக கிட்டேயா?

கடன்காரர்களின் எண்ணிக்கையைக் கூட்டினார்.

மொத்தம் இருபத்தேழு ஆட்களா? இத்தனை பேரிடமா? இதென்னப்பா கொடுமை? இத்தனைபேர் நச்சரிப்புகளை எப்படித்தாங்குறது?

**சந்தி**

பகுதியுடன் இடைநிலை அல்லதுசாரியை அல்லது விகுதி சந்திக்குமிடத்தில் தோன்றுவது சந்தி ஆகும். பெரும்பாலும் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் சந்தி வரும்.

எள்ளுக = எ + ள் + உ + க;

சொல்லுவான் = சொல் + ல் + உ + வ் + ஆன்

**சாரியை**

இடைநிலையும் விகுதியும் சார்ந்து வருவது சாரியை சாரியைகள் அ, உ, அன், கு

நடந்தது = நட + த்(ந்) த் + அ + து ;

சொல்லுக = சொல் + ல் + உ + க

அணிந்தனர் = அணி + த்(ந்) + த் + அன் + அர்

பெயர்க்குவேன் = பெயர் + க் + கு + வ் + ஏன்

உரக்கடை முதலாளியின் கேள்வியின் தனித்துவத் தொனியைக் கவனித்தான். கூர்மையாகக் கவனித்தான்.

இம்புட்டுக்கடனா என்ற வியப்பில்லை.

இம்புட்டு ஆட்களிடமா என்ற வித்தியாசமான கேள்வி. கேள்வியின் திசையே வேறாக இருக்கிறது.

இம்புட்டு ஆட்களிடம் பிக்கல் பிடுங்கல் இருந்தால் அவங்க குடுக்குற நச்சரிப்புகள்லே டார்ச்சர்கள்லே மனுசநிம்மதியே மண்ணாயிருமே...

**விகாரம்**

ஒன்று மற்றொன்றாகத் திரிவது விகாரம் எனப்படும்.

வந்தான் = வா(வ) + த்(ந்) + த் + ஆன்
வா, வ என ஆனது விகாரம் த், ந் ஆனது விகாரம்

சொல்லற்க = சொல் + ல் =
அல் (அற்) + க
அல் அற் எனத் திரிந்து விகாரம்

என்ன சொல்றீக?

சொஸைட்டிக்கடன் வங்கிக்கடன் கவர்மெண்ட் லோன் எல்லாத்தையும் கழிச்சிட்டு தனியார் கடன் எம்புட்டுன்னு பாரு எத்தனையாளுகன்னு பாரு...

ஒரு லட்சத்துப் பன்னிரண்டாயிரம். இருபத்தி ரெண்டு ஆட்கள்.

இதை ஒரே ஆள் கடனா ஆக்கிருவமா?

என்ன சொல்றீக


ஒரே ஆள் கடனாயிட்டா... தொல்லை இல்லே. நச்சரிப்பு இல்லை. அச்சலாத்தியில்லே. ஒரு நிம்மதியா இருக்கலாம்.

புரியலே.. நீங்க சொல்றது?

இந்தா இருக்காருல்லே... இவரு நமக்கு வேண்டிய ஆளுதான். தங்கமான ஆளு. அவரோடபிஸினஸே ஃபைனான்ஸ் தான். நாஞ்சொல்லுதேன். ஒன்றரை லட்சரூபாய் இவர்கிட்டே வாங்கு. ஒரே பத்திரத்துலே கையெழுத்துப்போடு. அல்லுச்சில்லு கடன்களை யெல்லாம் வீசியெறிஞ்சிட்டு நிம்மதியாயிரு.

வட்டி?

அவருபேரே பத்து வட்டி பழநிமலை தான். ஒனக்கே வேணும்னா... அஞ்சு வட்டியா கொறைக்கச் சொல்லுதேன்...



அஞ்சுவட்டியா? ஐயய்யோ.. ஆளை அள்ளிச்சுருட்டி வுழுங்கிட்டுப் போயிருமே... நமக்கு வேண்டாம்.

ஏய் முருகேசா... நாஞ்சொல்லுதைக்கேளு... கண்ட கண்ட அற்ப நாய்கள்லாம் வந்து நின்னு கடன்கேட்டு ஒன்னை அசிங்கப்படுத் தணுமா? தேவையா?



நிம்மதியா நிலம் நீச்சை கண்காணிக்க முடியுமா?

உரக்கடை முதலாளி பழநிமலைபக்கம் திரும்பினார். யோவ் பத்துவட்டி இது நம்ம பையன். நல்ல பையன். புதுப்பாணி வெவசாய முறையிலே திறமையைக் காட்டுற பையன்.

இருக்கட்டும் ஒண்ணும் வெளக்கம் வேண்டாம். நீங்க கையை காட்டுனா... அது நல்ல பார்ட்டியாத்தான் இருக்கும். எனக்கு நம்பிக்கையிருக்கு. விஷயத்தைச் சொல்லுங்க.

ஒன்றரை லோன் குடுங்க. நா சொல்லுறதை தட்டாம.. நீரு கேக்கணும். நாலுவட்டி தான் நம்ம முருகேசனுக்குப் போடணும்.

பழநிமலையின் தயக்கம். வசூல் பண்ணப் போய் வருகிற செலவுகள். பெட்ரோல் செலவுகள். கூட வருகிற ஆட்களின் செலவுகள். புரோட்டா மட்டன் செலவுகள் என்று பட்டியல் போட்டுக்கொண்டே போனார்... பழநிமலை.

உரக்கடை மோலாளி உத்தரவை மீறச்சக்தியில்லே. அதனால ஒப்புக் கொள்றேன். ஆனா ஒரு கண்டிசன் என்கிற அவனின் போலிக்கண்டிப்பு.

என்னப்பா கண்டிஷன்?

அசலு வருதோ, இல்லியோ, மாசாமாசம் வட்டிப்பணம் அட்டியில்லாம வந்தாகணும். வந்துட்டா நா, தங்கம். வரல்லன்னா அசிங்கம்.

அதெல்லாம் நாணயமான ஆளப்பா. பரமசிவம் வம்சம். நாக்கு பெரளாது. வாய் சுத்தம்.

ஒன்றரை லட்சம் கைமாற... ஒரு பத்திரத்தில் நாலைந்து கையெழுத்து போட்டான் முருகேசன். உரக்கடைக் காரரின் நாற்பதாயிர ரூபாய் பற்று, மொத்த வரவாயிற்று. அவர் முகமெல்லாம் ஒளிச்சிரிப்பு. ஆப்பிள் பழங்களும் ஹார்லிக்ஸ் பாட்டிலுமாகப் பின்னிய வலை. தன் இரையை அள்ளிச் சுருட்டிக் கொண்டது.

அவரது மென்மையான அணுகுமுறைக்கு முழுமையான வெற்றி.

இவன்கேட்ட பூச்சிக் கொல்லி மருந்துப்பட்டிலை ஆசை ஆசையாகப் போட்டார். சிரிப்பும் சந்தோஷமுமாகச் சிட்டை முடித்தார்.

பழநிமலை கடினக்குரலில் கூறினார்.

தம்பி, மாசாமாசம் வட்டி ஆறாயிர ரூபாய். வசூல் செலவு அறுநூறு. ஆக மாசாமாசம் ஏழாந்தேதி வருவேன். ஆறாயிரத்து அறுநூறு சிந்தாம சிதறாம எடுத்து வைக்கணம். இன்னைக்கு நாளைக்கு என்று இழுத்தடிச்சா.. சரிப்படாது. அந்தக் கடினக் குரலுக்குள் ஒரு மூர்க்கம் இருந்தது. வரட்டா நா அசிங்கம் என்ற வாக்குமூலத்தின் ஆதிமுகம் தெரிகிறது.

எல்லாக் கடன்காரர்களையும் வீட்டுக்கு வரவழைத்து செட்டில் பண்ணினான். ஈஸ்வரிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆயினும் என்ன ஏதுவென்று விசாரிக்கப் பயமாக இருக்கிறது.

அவனாகவே சொன்னான். சாதித்து முடித்த வெற்றி கண்ட பெருமிதக் குரலில்.

அங்கேயும் இங்கேயுமாக ஆயிரத்தெட்டுக் கடன்களை வழிச்சுக்கூட்டி ஒண்ணாக்கி ஓராள் கடனாக்கிட்டேன். இனிமே கவலையில்லே. ஒரு நிம்மதியா வெவசாயம் பண்ணலாம்.

கிண்டிக்கிளறிக்கேள்வி கேட்க பயமாக இருக்க ஈஸ்வரி.. நடப்பது நல்லதாக இல்லை என்று மட்டும் தெரிகிறது. அவளது அடிமனசின் ஆழத்தில் ஒரு பட்சி கத்துகிறது.

இது நல்லதுக்கில்லே, இது நல்லதுக்கில்லே

அந்தக் கத்தல் அவளது கரிக்குடலைக் கவ்வுகிறது. இனம் தெரியாத திகில் உள்மனசைப் பற்றி இழுக்கிறது. யாரிடம் சொல்லியழ?

போக்கிடமற்றுப் புலம்பி அற்றலைகிற அவளது ஒற்றை மனசு.

மேலாண்மை பொன்னுச்சாமி

**மேலாண்மை பொன்னுச்சாமி**

முற்போக்குச் சிந்தனையாளர்.கரிசல்காட்டு எழுத்தாளர் என அறியப்படுபவர். சிறந்த சிறு கதை ஆசிரியர். பூக்காத மாலை, மானுடப் பிரவாகம், பூச்சுமை, கணக்கு, தாய்மதி, உயிர்க் காற்று ஆகியவை முக்கிய சிறுகதைத் தொகுதிகள். மின்சாரப்பூ என்ற சிறுகதைத் தொகு திக்கு சாகித்ய அகாதமி பரிசு பெற்றவர்.

## செயல்பாடுகள்

- ☞ உயிர்நிலம் நாவல் பகுதியினைக் கருத்து, மொழிநடை, வட்டாரவழக்கு பாத்திரப் படைப்பு அடிப்படையில் விமர்சனக் குறிப்பு தயார் செய்து வெளியிடுங்கள்.
- ☞ செயற்கை உரம் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கட்டுரையாக எழுதுங்கள்.
- ☞ வேளாண்மையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவது இயற்கை உரமே என்னும் தலைப்பில் வழக்காடு மன்றம் நடத்துவதற்கான குறிப்பு எழுதுங்கள்.
- ☞ விவசாயிகள் ஏமாற்றப்படுவது குறித்து எழுதுங்கள்.

## யூரியாவுக்குப் பதில் சாணம்

இயற்கை வழி வேளாண்மை என்பதைப் பலரும் பல வழிகளில் புரிந்து கொள்கிறார்கள். பெரும்பாலும் அவர்களுடைய தனிப்பட்ட அனுபவங் களின் அடிப்படையில் புரிந்து கொள்கிறார்கள்.

இயற்கையைச் சார்ந்துதான் வாழ வேண்டும் என்று வாதிடுபவர்களில் பலரும் இயற்கை வழி வேளாண்மையைப் பல கிளைகளாகத்தான் பார்க்கிறார்கள். இயற்கை வழி வேளாண்மையை ஆதரிக்காதவர்களில் பலரோ யூரியாவுக்குப் பதிலாகச் சாணம் இடுவதுதான் இயற்கை வழி வேளாண்மை என்பதாக உணர்ந்து அவ்வளவு சாணத்துக்கு எங்கே போவது என்று கவலைப் படுகிறார்கள்.

ஆனால் விஷயமே வேறு. இயற்கை வழி வேளாண்மையை இப்படியெல் லாம் புரிந்துகொள்ள முடியாது. மனிதன், கால்படாத காடுகளுக்குள் சென்று பார்த்தால்தான் இயற்கை வழி வேளாண்மையைப் புரிந்து கொள்ள முடியும் என்று பல அறிஞர்கள் நெடுங்காலமாகக் கூறி வருகிறார்கள்.

இயற்கை வழி வேளாண்மையில் உழாத பயிர் சாகுபடி என்பதும் ஒரு வகையாகும். இயற்கை வேளாண்மையில் பல்வேறு செடியினங் களைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் நிலத்தை உழவு செய்யவோ, மண்வெட்டியால் கொத்திக் கிளறவோ தேவையில்லை.

அடர்ந்த காடுகளில் உயிரினப் பல்வகை பாதுகாக்கப் படுவதால், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. பெரிய பெரிய மரங்களும் மற்ற உயிரினங்களும் வெப்பத்தைக் குறைத்துத் தட்பவெப்பநிலையைச் சீரமைக்கின்றன.

### பாறையைக் கரைக்கும் அமிலம்



இலை, தழைகள், பூங்கொத்துகள், பழங்கள்,நெற்றுகள், பட்டுப்போன பூச்சிகள் எனப் பலவும் நிலத்தில் விழுகின்றன. அவற்றோடு கால்நடை எச்சங்கள் மிச்சங்கள் போன்றவையும் கலக்கும்போது நிலத்தில் மட்கிச் சேருகிறது. அதிலிருந்து சுரக்கும் மட்கு அமிலம், பாறையைக் கரைத்துத் தாதுக்களை உயிர்க்கழிவுகளுடன் இணைக்கிறது. அனைத்துமாகச் சேர்ந்து பயிர் வளர்ச்சிக்கான ஆதாரங்களை நிலைநாட்டுகின்றன.

இவை மூலமாக, மண் அரிப்பு மற்றும் நுண்ணூட்டச் சரிவு ஆகியவை தவிர்க்கப்படுகின்றன. அதனால்தான் காட்டில் உள்ள மரங்கள் பச்சைக்குடை பிடித்துச் சேவை புரிகின்றன. இதேபோல இயற்கை வழி வேளாண்மையிலும் நமது பண்ணையில் ஆங்காங்கே காடுகளை வளர்த்து, தட்பவெப்பச் சூழலைச் சீரமைக்க முடியும்.

பழங்காலத்தில் காடுகளை வெட்டி எரித்துச் சாகுபடி செய்தவர்கள்கூட ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு நிலத்துக்கு ஓர் ஆண்டு ஓய்வு கொடுத்தார்கள். அந்த ஓய்வின் போது இயற்கை தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டது.

காட்டுக்குள் மரங்களும், புதர்களும், கொடிகளும், புல், பூண்டுகளும் ஆரோக்கியமாக வளர்வதை நாம் பார்க்கிறோம். அங்கு மண் வளமாக இருக்கிறது. தாவரங்களைத் தாக்கும் பூச்சி, நோய்கள் குறைவாக உள்ளன.

மனிதர்கள் குறுக்கிடாத வரை செடிகளும், விலங்குகளும் நிம்மதியாகத்தான் காடுகளுக்குள் வாழ்கின்றன. காடுகளில் நாம் எதிர்பார்ப்பதைப்போல பேரளவு உற்பத்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் அங்கு நிலவும் உயிர்ச்சூழலில் பல்வகைமையை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

### நிலத்துக்குப் புத்துயிர் ஊட்டுங்கள்

நிலத்தைக் கொஞ்ச நாட்கள் தரிசாகப் போட்டு வைப்பது, களைத்துப்போன நிலத்துக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு முக்கியமான வழிமுறை. பல்லாயிரம் ஆண்டுகளாக நமது உழவர்கள் இதைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். அந்த மாதிரி போட்டுவைப்பதால் கொழிஞ்சி, அவுரி, காந்தை உள்ளிட்ட பல செடிகள் கோடைக்காலத்தில் பெருகி, சூரியனின் வெப்பம் மண்ணை நேரடியாகத் தாக்காமல் காத்தன.

#### மண்ணுக்குச் சுண்ணாம்பு போடுதல்

சுண்ணாம்பு இடுதல் நிலத்தின் அபிவிருத்தியைப் பொறுத்துக் கையாளப்படும் திருத்தமான முறைகளுள் ஒன்று. ஆனால் நாட்டில் பெரும்பாலான விவசாயிகளுக்கு இம்முறை அநேகமாகத் தெரியவில்லை. முக்கியமாக நிலங்களுக்குச் சுண்ணாம்பு இடுவதை மேல்நாடுகளில் கையாண்டு வருகிறார்கள். சுண்ணாம்பின் உபயோகத்தால் ஏற்படக் கூடிய உயர் நலன்களாவன:

1. நீர்ப்பிடிப்புள்ள நிலங்களில் நீர்த் தேக்கத்தின் அளவைக் குறைத்து விடும். அதனால் நிலத்தின் வளம் உயரும்.
2. நிலத்தின்மீது விழுந்த மழைத் தண்ணீரோ அல்லது பாய்ச்சிய நீரோ பூமியில் கீழ் நோக்கிச் செல்ல உதவி செய்கிறது. இக்காரணத்தால் சரியான பதமேற்பட்டு உழுவதற்கும், பின்னால் நிலத்தைக் கொத்திப் பண்படுத்து வதற்கும் சுலப மாகிறது.
3. நிலம் களிப்புமண் வாட்டமாயிருப்பினும் வேனிற்காலத்தில் உண்டாகும் வெடிப்புகள் குறைகின்றன.

ஆனால் பிற்காலங்களில் ரசாயனங்களை நம்பிப் பயிர்ச் சுழற்சி முறைகளைக் கைகழுவியதால்தான் இன்று பலவிதமான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. அனைத்துக்கும் ஒரே ஒரு தீர்வுதான் இருக்கிறது. அதுதான், இயற்கை வழி வேளாண்மை. இது யூரியாவுக்குப் பதிலாகச் சாணம் போடுவது அல்ல. இயற்கையின் சுழற்சிகளை மையமாகக் கொண்டு செயல்படும் வேளாண் முறை.

## கற்றாழையைக் கையில் எடுங்கள்

நாம் எல்லோரும் நன்கு அறிந்த மூலிகைச் செடி சோற்றுக் கற்றாழை. தாவரச் சாகுபடியில் கால்நடை மருத்துவத்தில் மனித மருத்துவத்தில் என உயிர்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்த ஒரு செடி சோற்றுக் கற்றாழை. நட்டுவைத்தால் போதும் எவ்விதக் கண்காணிப்பும் அதற்குத் தேவையில்லை. ஆனால் அதனுடைய முக்கியத் துவத்தை வியாபாரிகள் தெரிந்து வைத்திருக்கின்ற அளவுக்கு உழவர்கள் உணராது இருக்கிறார்கள்.





செடிகளை உண்ணும் பூச்சிகளுக்கு நஞ்சாகச் செயல்படும் சபோநைன்ஸ் எனும் பொருள் சோற்றுக்கற்றாழையில் உள்ளது. அது, நோய்க் கிருமிகளின் தோல்களைச் சிதைப்பதோடு பலவிதமான பூச்சிகளையும் விரட்டி விடுகிறது. பூச்சி, பூஞ்சணம், வைரஸ் போன்ற உயிரிகளோடு எதிர்வினை புரிகிறது.

சோற்றுக்கற்றாழை மடலில் ஸ்டிரால் காணப்படுகிறது. கேம்பஸ்டிரால், கொலஸ்டிரால் மற்றும் பி.சைட்டோஸ்டிரால் போன்றவை தாவரங்களில் காணப்படும் ஸ்டிரால்கள். இவை, வீக்கத்தைக் குறைப்பதற்கான மருந்துகளாகவும் செயல்படுகின்றன. புண்களில் புரை ஓடாமல் இருப்பதற்குப் பயன்படுத்தப்படும் மருந்தான லூப்பியோல் ஹைட்ரோ - குளோரைடு போன்றவையும் சோற்றுக்கற்றாழையில் உள்ளன.

1982 ஆம் ஆண்டில் சிகாகோ பல்கலைக்கழகத்தின் சார்பில் வெளியிட்ட ஓர் அறிக்கையில், சோற்றுக் கற்றாழையில் சாலிசிலிக் அமிலம் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சில விஞ்ஞானிகள், சோற்றுக்கற்றாழையில் சிறிதளவு யூரியா, நைட்ரஜன் இருப்பதாகவும் கண்டறிந்து உள்ளனர்.

சோற்றுக்கற்றாழையில் காணப்படும் நுண்ணூட்டங்கள் தசையை வளர்ப்பதாகவும் செயல்பாடுகளைச் சீரமைப்பதாகவும் கூட ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த ஆராய்ச்சிகளின் மூலம் சோற்றுக்கற்றாழை மிகச் சிறந்த வலி நிவாரணி என்று அறியப்பட்டு இருக்கிறது.

4.நிலம் மணற்பாங்காயிருப்பின் அணுக்களுக்குள்ள இடைவெளிகளைச் சுமாராய் நெருங்கச் செய்கிறது. அக்காரணத்தால் நிலத்தில் ஊற்றப்படும் நீர் அதிகம் வேகமாய்க் கீழ் நோக்கிப் போகாமல் சிறிது தாமதமாய் இறங்கி, பயிர் வளர்ச்சிக்குப் பிரயோஜனமாகிறது.

சுண்ணாம்பு இடுதல் இரசாயன முறையில் நிலத்தின் வளத்தை அதிகரிக்கச் செய்கிறது. இது எவ்விதம் என்பது தெரிய வேண்டுமானால் இரசாயனம் சம்பந்தமான சில விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பத்திரிகைச் செய்தி

தீக்காயங்களுக்கு, வெட்டுக்காயங்களுக்கு, சிராய்ப்புகளுக்கு, ரத்தக்கட்டுக்களுக்கு, சோற்றுக்கற்றாழையை மருந்தாகப் பயன்படுத்துவது நாட்டு மருத்துவர்களின் வழக்கில் இருந்து வருகிறது. இறுக்கு வாதம் (ருமேடிக்ஃபீவர்), மூட்டு வலிகள், தோல், கல்லீரல், கணையம் போன்ற அனைத்து உறுப்புகளிலும் உள்ள ஒழுங்கீனத்தைச் சோற்றுக்கற்றாழை சீரமைக்கிறது. முடியைக்கூட வளர வைக்கிறது.

நிலத்தைத் தரிசு போடுவோம். தரிசு நிலத்தில் சோற்றுக் கற்றாழையைப் பயிரிடுவோம். சோற்றுக்கற்றாழைக்கு ஊடாக உணவுப்பயிர் விளைவிப்போம். பசியும் பிணியும் களைவோம்.

**கோ. நம்மாழ்வார்**

**விகடன் பிரசுரம்**

**கோ. நம்மாழ்வார்**

திருக்காட்டுப் பள்ளி அருகேயுள்ள இளங்காடு கிராமத்தில் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைகழத்தில் வேளாண்அறிவியல் பட்டம் பெற்று, கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் பண்ணை மேலாளராக ஏழாண்டு பணிபுரிந்தவர். இறுதிக்காலம் வரை இயற்கை விவசாயச் சுற்றுச்சூழல் விவசாயிகளின் வாழ்வுரிமைக்காக ஓயாமல் உழைத்தவர்.

## செயல்பாடுகள்

- வேளாண்மையின் வளர்ச்சிக்கு மண்வளம் அவசியம் என்னும் தலைப்பில் பேசுவதற்குச் சொற்பொழிவு உரை தயாரியுங்கள்.
- இன்றைய வேளாண்மைப் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் பற்றிக் குறிப்புகள் தயாரியுங்கள்.
- வேளாண்மையால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் விவசாயிகளுக்குக் கடன் உதவி வழங்க வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்று எழுதுங்கள்.
- வேளாண்மையில் ஏற்பட்ட பாதிப்புகளால் மனம் வருந்தும் முருகேசன் அவர்களுக்கு ஆறுதல் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

# உழவே தலை



## உழவினார் கைம்மடங்கின்

விலைவாசி ஏற்றம் குறித்த செய்திகள் ஊடகங்களில் மீண்டும் இடம்பெறத் துவங்கியுள்ளன. விஷம்போல் ஏறும் விலைவாசி என்கிற சொல்லாடல் ஊடகங்களால் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படுகிறது. சிறிதுகாலம் முன்பு பருப்பு வகைகளின் விலை வெகுவாக உயர்ந்ததை முன்வைத்து உருவான விவாதம் தற்போது வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை உயர்வை மையப்படுத்தி நடக்கிறது. விலைவாசி உயர்வு எப்போதும் ஆளும் தரப்பின் அரசியல் பலன்களை எதிர் மறையாகப் பாதிக்கக்கூடியது என்பதால் அரசுகள் உடனடியாக விலை குறைப்பதற்கான அவசர வழிகளைத் தேடி வழக்கமானதொரு யுக்தியைக் கைக்கொள்கின்றன. அது மிகவும் எளிதானதும் அப்போதைய நிலையைக் கையாளத் தகுந்ததாகவும் அமைகிறது. பொருட்களின் ஏற்றுமதியைத் தடைசெய்வதும் இறக்குமதி செய்வதும் என்கிற எளியசூத்திரம் அது. துரதிருஷ்டவசமாக அது எல்லாத் தருணங்களிலும் சிக்கலான கணக்குகளைத் தீர்க்க உதவுவதில்லை. மாறாக, மேலும் சிக்கலாக்குகிறது.

பொதுவாக, விலைவாசி ஏற்றம் குறித்து ஊடங்களில் வெளிப்படும் குரல்கள் நடுத்தரவர்க்கத்தின் மனநிலையைப் பிரதிபலிப்பவை. ஆனால் விலைவாசி உணர்வால் எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற அக்கறை இக்குரல்களில் பொங்கி வழிகிறது. எளிய மக்களில் பெரும்பாலானோர் கிராமங்களில் நிலமற்றவர்களாக வாழும் விவசாயத் தொழிலாளர்கள். இவர்களின் அடிப்படைக் கூலியை உயர்த்திடும்

நோக்கத்தோடு அமல்படுத்தப்பட்ட ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் இந்த வர்க்கத்தால் எவ்விதத்தில் விமர்சிக்கப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே.

விலைவாசி உயர்வு எளிய மக்களையும் பாதிக்கிறது. ஆனால் வாழ்வின் பெரும் பகுதியை அடிப்படைத் தேவைகளுக்காகப் போராடி வாழப் பழகியவர்களான அவர்களுக்கு இதுவும் ஒரு கூடுதல் சவால் கொள்வதன் மூலம் சமன் செய்கிறார்கள். விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் தளங்கள் மீது குறைந்த பட்ச அறிமுகமுள்ள எவரும் இதனை உணரமுடியும். சமூகத்தின் எளிய மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள் மற்றும் சலுகைகள் அவர்களைச் சோம்பேறிகளாக்குவதாக மிகுந்த பொறுப்புணர்வுடன் பேசுபவர்கள் அனைவரும் வெட்கமின்றி ஊதிய உயர்வுக்கான கூடுதல் படிகளுக்காகவும் கொடி பிடிப்பதிலேயே வேலைநாட்களின் பெரும்பகுதியைச் செலவிடுபவர்கள்.

எல்லாக் காலங்களிலும் நடுத்தரவர்க்கம் சுயநலம் பூசப்பட்ட கண்ணாடிவழியாகவே சமூகத்தை நோக்குகிறது. தங்களின் சம்பளம் அல்லது வருமானம் வாழ்க்கைத் தேவைகள் ஆகியவை கூடிக்கொண்டிருப்பதைப் போலவே உற்பத்தி செய்பவர்களின் தேவைகளும் கூடுகின்றது என்பதைக் கூட உணராமை ஒரு நோய்க்கூறே அல்லாமல் வேறல்ல. கடந்த 10 ஆண்டுகளில் வேளாண் இடு பொருட்களின் விலை குறிப்பிடத்தக்க அளவு உயரவில்லை. பல நேரங்களில் ஈனவிலைக்கே விற்றது. கடந்த நான்கு வருடங்களுக்கு முன் மஞ்சள் விலை மிகவும் சரிந்து விவாசயிகள் அடைந்த நஷ்டம் காரணமாக பல விவசாயிகள் அறுவடைக்குக் கூடத் தேறாது என்று நிலத்திலேயே விட்டுவிட்டார்கள். கரும்பு விவசாயிகளின் நிலை குறித்து ‘கரும்பு வைத்துக் கஷ்டப்படுவதைக் காட்டிலும் சவுக்கை வைத்துவிட்டு சந்தோஷமாக இருக்கலாம்’ எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

பெருமளவு முதலீட்டைத் தின்றுவிடும் பருத்தியின் விலை சற்றும் உயர்ந்துவிடாமல் ஜவுளித்தொழில் துறையினர் கண்ணும் கருத்துமாக இருந்ததன் விளைவாக பருத்தி விவசாயம் கணிசமாகக் குறைந்து விட்டது. ரூ.270 க்கு டி.ஏ.பி (டை அம்மோனியம் பாஸ்பேட்) விற்றபோது விற்ற விலையிலேயே மூட்டை 150 கிலோ ரூ. 485க்கு பருத்தி விற்றால் எப்படிப் பயிரிட முடியும்? தற்போது பருத்தி விலை உயர்ந்துவிட்டதால் நூல் விலை உயர்ந்துவிட்டது. எனவே பருத்தி ஏற்றுமதியைத் தடைசெய்ய வேண்டும் என ஜவுளித்துறையின் பெரும்புள்ளிகள் கூச்சலிடுகின்றனர். விவசாயி உற்பத்தி செய்யும் பருத்தியை ஏற்றுமதி செய்வது குறித்த கொள்கை முடிவை விவசாயிகளின் தரப்பைக் கேட்காமல் அவரவர் இஷ்டப்படி

**மாம்பழம்**

இந்த கல்லாமை, காசா, செந்தூரம், மல்கோவா, பங்கனபள்ளி, காளப்பாடி, நாட்டுக்காய், கழுதைவிட்டை, காதர், வாழைப்பூதார், சப்பட்டை, கிரேப், குத்தூஸ், மனோரஞ்சிதம், இமாம் பசந்த், குதாதத்தா, ருமேனியா, அல்போசர் இவை எல்லாம் மாம்பழங்களின் பெயர்கள். அல் போன்சா ரக மாம்பழங்கள்தான் அதிக அளவில் விரும்பிச் சாப் பிடுகின்றனர். இதனால் இதனை மாழ்பழங்களின் அரசி என்று அழைப்பார்கள். அல்போன்சா ரக மாம்பழங்கள் சதைப்பற்று அதிகம் இருப்பதால் ஜாம், ஊறுகாய் போன்றவற்றிற்கும் ஜூஸ் தயார் செய்வதற்கும் பயன்படுத்தப்படு கிறது.

இங்கு விளையக் கூடிய மாங்காய் கள் வெளிமாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. இவற்றைத் தவிர மாவடு, மாங்காய் ஊறுகாய், மாங் காய் அடை எனக் குடிச்சைத் தொழிலாகவும் பெண்கள் செய்கின் றனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் சாரலிலும் காடுகளிலும் மிக உயர்ந்த மரங்களில் கிடைக்கும் மாவடு உலகப்புகழ்பெற்றவை. மாவடு வில் கிளிமூக்கு மாவடு முதலிடத்தைப் பெறுகிறது. ரசாயனக் கலவை இல் லாமல் அளவான உப்பு மிளகாய், கடுகு எண்ணெய் சேர்த்துத் தயா ரிக்கப்படும் மாவடு ஊறுகாய் பல ஆண்டுகள் ஆனாலும் கெடாது. இதனால் பெரியகுளம் மாவடு உலகப்புகழ் பெற்ற மாவடு ஆகும்.



மழைக்காலமாக இருந்தால் இரசாயன உரங்களைப் பயன்படுத்தலாம். வறட்சிக் காலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது நல்லது. மாங்கன்றுகளை நட்ட 3 வருடங்களில் இருந்து காய்ப்புக்கு வரும். நல்ல பராமரிப்பு இருந்தால் 2 வருடங்களில் பலன்தர ஆரம் பிக்கும். சாதாரணமாக பெரிய குளம் பகுதியில் 100 முதல் 150 வரை வயதுள்ள மரங்கள் உள்ளன. மாமரங்களின் முழுமையான வளர்ச்சி என்பது 10 ஆண்டுகளில் தெரியும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை மாதங்கள்தான் சீசன். இந்தக் காலத்தில் தான் மாம் பழங்கள் நன்றாகப் பூத்துக் காய்த்து தொங்கும். இடைப்பருவமான செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்களில் குறைந்த எண்ணிக்கையில் பழங்கள் கிடைக்கும். இது கோடைக்காய் என அழைக்கப்படும்.

ஒவ்வொரு ரகமும் ஒரே மாதிரி காய்ப்பதில்லை. காசா போன்ற வகைகள் 150 முதல் 200 கிலோ வரை கிடைக்கும். அல்போன்சா என்றால் 100 கிலோதான் கிடைக்கும். மாமரங்கள் மண்ணின் தன்மைக்கு ஏற்பச் சுவையும் மாறுதல் அடையும். நாகப்பட்டினம், வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் சீசன் முடிந்த பின்பு அங்கு காய்க்க ஆரம்பிக்கும்.

**– வைகை அனிஷ்**

எடுத்தால் எதிர்காலத்தில் ஒரு நூல் நூற்கக்கூட பருத்தி கிடைக்காது. உண்மையில் பருத்தி ஏற்றுமதி குறித்த கொள்கையை மத்திய அரசு உள்நாட்டுத் தேவையைக் கவனத்தில் கொண்டே வகுக்கிறது. இந்தியாவில் உள்ள நூற்பாலைகளில் எவ்வளவு பருத்தி உள்ளே செல்கிறது எவ்வளவு நூல் வெளியே செல்கிறது என்ற நூற்பாலைகள் வழங்கும் கணக்கைக் கொண்டே உள்நாட்டுத் தேவை கணக்கிடப்படுகிறது. பிரச்சினை என்னவெனில் எந்த நூற்பாலையும் இது குறித்த உண்மையான கணக்கைத் தருவதில்லை. வரியை ஏய்க்க இவர்கள் வழங்குவது குறைக்கப்பட்ட போலிக்கணக்கு. எனவே உள்நாட்டுத் தேவை குறித்த கணக்கீடு தவறாகிறது. இதற்கு அரசோ விவசாயிகளோ காரணமல்ல. மாறாக, ஜவுளித்துறையினரே காரணம்.

இவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யும் உரிமை இவர்களுக்கு உண்டென்றால் உழவர்கள் உற்பத்தி செய்யும் பருத்தியை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று சொல்ல இவர்கள் யார்? சமூக அக்கறை என்பது ஒருவழிப்பாதையல்ல. அதைச் சமூகத்தில் நின்று நிலவச்செய்வதில் அனைத்துத் தரப்பிற்கும் பங்குண்டு. தங்களின் தொழில் நலன்களை மட்டும் பாதுகாக்க முனைப்புடன் இருக்கும் தரப்புகள் அனைத்தும் சேர்ந்து உழவனை அவனது தொழிலைவிட்டு விரட்டியதன் விளைவை அனுபவித்தே தீர வேண்டும்.

1960களில் ஒரு சவரன் தங்கமும் ஒரு குவிண்டால் நெல்லும் (100கிலோ) ஒரே விலை. இன்று 1 குவிண்டால் நெல்லின் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.1000. ஆனால் தங்கத்தின் விலை? இருந்தபோதும் கடும் நெருக்கடிகள் பலவற்றிற்கிடையிலும் திருப்திகரமான அளவில் நெல்

உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அதற்காகக் கூடுதலாக 1 ரூபாய் கூடத் தர சமூகத்தில் யாருக்கும் மனம் வருவதில்லை.

சினிமா, கிசுகிசுக்கள் கேளிக்கைகளுக்கு ஒதுக்கும் பக்கங்களின் பத்தில் ஒரு பகுதியைக் கூட வேளாண்மைத் தொடர்பான விஷயங்களுக்காக ஒதுக்குவதில்லை. காய்கறிகள் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆயினும் அவ்வப்போது கடுமையான மழை, வறட்சி போன்ற இயற்கைக் காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதேநேரம் கூடுதலாக உற்பத்தியாகும் மற்ற காலங்களில் விலையின்றி வீணாகிறது. இவற்றைப் பதப்படுத்திப் பாதுகாக்கக் குளிர்பதனக் கிடங்குகள் பெருமளவில் அமைக்கப்பட்டால் வீணாகும் காய்கறிகள், பழங்கள் ஆகியவை உற்பத்தி குறைவாகும் காலத்தில் பயனாகும். ஆனால் இது குறித்தெல்லாம் அக்கறையின்றி விலை குறைய வேண்டும் என வேண்டுதல் நடத்தினால் எப்படிக் குறையும்? கிடைத்த நவீன வசதிகளைப் பயன்படுத்தித் திரையரங்குகளும் இன்னபிறவற்றைக் கட்டத்தெரிந்த நமக்குக் குளிர்பதனச் சேமிப்புக் கிடங்குகள் கட்டத் தோன்றவில்லை.

விலையுயர்வினால் ஏழைகளும் உழைக்கும் மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அவர்களுக்காக அளிக்கப்படும் சலுகைகள் நியாயமானவையே. விவசாயத் தொழிலாளர்களுக்காகக் கூலி உயர்வது குறித்துக் குறைபட்டுக்கொள்ள ஏதுமில்லை. விளிம்புநிலை மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக நாம் அடையும் இழப்புகளையும் நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. சமூகச் சமநிலையை உருவாக்க இவையெல்லாம் தேவையே. ஆனால் உண்டு கொழுப்பதும் சுகவாழ்வு வாழ்வதுமாக இருப்பவர்களுக்காக விவசாயிகளின் நியாயமான வளர்ச்சி தடுக்கப்படுவது அநீதியானதாகும். விலைவாசி உயர்வு குறித்த பாரபட்சமான குரல்கள் இந்த அநீதியின் குரலாகவே ஒலிக்கின்றன.

விவசாயிகள் இயக்கம் வலுவிழந்தபோது வேளாண் சமூகம் மௌனமாக மாற்றுவழிகளைத் தேட ஆரம்பித்தது. கடந்த 25 ஆண்டுகளில் வேளாண் குடும்பங்களைச் சேர்ந்த இளந்தலை முறையினர் வேளாண்மையை விட்டுப் படிப்படியாக வெளியேறினர். நிலங்களின் விலை மதிப்பு உயர்ந்ததில் ஒரு பகுதி நிலத்தை விற்றுவிட்டு அதன்மூலம் மாற்றுத்தொழில் அமைத்துக்கொண்டுவிட்ட சூழலில் உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடு அவ்வப்போது தலைதூக்குகிறது. இந்தச் சூழலின் காரணங்கள் குறித்து ஆராயாமல் ஒப்பாரி வைப்பது ஒரு போதும் தீர்வாகாது. வேளாண்மை இலாபகரமானதாக அமைந்தால் மட்டுமே இனி அது ஒரு தொழிலாக நீடிக்க முடியும். அதற்காக அவர்களின் உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கும் சூழலை அரசும் சமூகமும் உறுதிப்படுத்த வேண்டும்.

**ஆபத்து**

தற்பொழுது வியாபாரிகள் கார்பைட் கற்கள் மூலம் மாம்பழங் களைப் பழுக்க வைக்கிறார்கள். இந்த கார்பைட் கற்கள் சில மணி நேரத்தில பச்சையாக உள்ள மாம்பழங்களை நிறம் மாற்றி பழுக்க வைத்துவிடும். அதனை விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இதனை உண்பதால் புற்றுநோய், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பலவித நோய்கள் உண்டாகும். மாம்பழங்களைக் கற்கள் வைத்துப் பழுக்க வைப்பது சட்டத்திற்கு விரோதமானது எனக் கூறி அவ்வப்பொழுது அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு அதனைப் பறிமுதல் செய்கின்றார்.



நாடு சுதந்திரம் பெற்றபோது, ''எதுவும் எதற்காகவும் காத்திருக்காலாம், ஆனால் எதற்காகவும் வேளாண்மை காத்திருக்கமுடியாது'' என்றார் ஜவஹர்லால் நேரு. அதன்படியே கடந்த 64 ஆண்டுகளில் தங்களின் செறிவான உழைப்பால் இந்நாட்டைத் தாங்கி நின்ற வேளாண் சமூகம் சலித்து நிற்கிறது. அவர்களின் சலிப்பையும் சோர்வையும் உணர்ந்து அவர்களின் சுமையைப் பகிர்வது தொடர்பாகச் சிந்திப்பதே சரியான அணுகுமுறையாக இருக்கும். திரையரங்குகளில், கேளிக்கைப் பூங்காக்களில், உணவகங்களில் வணிக வளாகங்களில் ஆயிரக்கணக்கில் செலவிடும் சமூகம், விவசாயிகளின் விளைபொருளுக்குச் சில ரூபாய்கள் கூடுதலாகத் தரத் தயங்கத் தேவையில்லை, பொருளாதார ரீதியாக வளர்முகத்திலுள்ள சமூகத்தில் விலையுயர்வு தவிர்க்க இயலாததே. இயலாத மக்களுக்குக் குறைந்த விலையிலும் இயலும் மக்களுக்கு நியாயமான விலையிலும் கிடைக்கச் செய்வதோடு நியாயமான பலன்கள் விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்வதே சமநிலை அணுகுமுறையாகும். அதைவிடுத்து விவசாயிகள் மடியில் கை வைப்பதல்ல...

வள்ளுவர் சொல்கிறார்..

'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதும்
விட்டோம் என்பார்க்கும் நிலை.'

உழவருடைய கை தொழில் செய்யாது சோம்பியிருக்குமானால் விரும்புகின்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டோம் என்கிற துறவியர்க்கும் வாழ்வின்றிப்போகும் என்பதே இதன் பொருள்.

**இரா. முருகானந்தம்**

## செயல்பாடுகள்

- உழவினார் கைம்மடங்கின் என்னும் கட்டுரையை வாசித்துக் கருத்தினை உட்கொண்டு தீர்வு காணும் நோக்கில் பத்திரிகைக்கு ஒரு தலையங்கம் எழுதுங்கள்.
- உழவுத்தொழில் பாதிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் குறிப்பு தயாரியுங்கள்.
- விவசாயிகள், விளைநிலங்களின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குங்கள்.
- வேளாண்மைத் தொடர்பான கவிதைகள், கட்டுரைகள், புகைப்படங்கள், போன்றவற்றைத் திரட்டி வேளாண் மலர் ஒன்று தயாரியுங்கள்.
- 'விளைச்சல்' என்ற சொல்லின் பகுபத உறுப்புகளை எழுதுங்கள்.

# சொல்லகராதி

அகல் - விளக்குத் தகழி, பெரும் மரம்
அகாலம் - காலம் அல்லாக் காலம்
அசாத்தியம் - இயலாதது
அடுக்கம் - பக்கமலை
அல்லல் - துன்பம்
அவுரி - நீலிப்பூண்டு
அழுக்காறு - பொறாமை
அன்னம் - அன்னப்பறவை, சோறு
ஆ - பசு
ஆசினி - ஆசினிப் பலாமரம்
ஆம்பி - குடைக் காளான்
ஆர்கலி - கடல், பேரொலி
ஆர்வலர் - அன்புடையோர்
ஆவி - உயிர், நீராவி
இங்கிதம் - இனிமை, நயமான பழக்கம்
இட்டுக்கட்டி - கற்பித்து கூறுதல்
இடையறா - இடையில் அறுத்து போகாத, தொடர்ச்சியான
இணர் - பூங்கொத்து
இயற்றுதல் - செய்தல்
இழைகள் - ஆபரணம், நூலிழை
இறையிலி - வரி இல்லாத
ஈதல் - கொடுத்தல்
உடைமை - உரிமை, சொத்து
உண்டக்கட்டி - கட்டிச்சோறு
உயில் - மரண சாசனம், ஆவணம்
உறையுள் - வீடு, தங்குமிடம்
எக்களிப்பு - மிக்க மகிழ்ச்சி
ஒழுங்கீனம் - ஒழுக்கமின்மை
ஓம்புதல் - காத்தல்
கட்டாந்தரை - கடினமான தரை
கணம் - கூட்டம்
கணிகையர் - பொதுமகள்
கந்து - கட்டுத்தறி
கம்பலை - ஒலி, துன்பம்
கம்மியம் - தொழில்நுட்பம்
கலாவம் - மயில்
கலி - வறுமை
கவுள் - கன்னம்
கழனி - வயல்
கழை - மூங்கில், கடும்பு
களன் - களம்
களிறு - ஆண்யானை
காணி - நில அளவு
காலன் - எமன்
குரம்பை - பறவைக்கூடு, சிறுகுடில்
குளறும்படி - குழப்பம்
குறுக்கம் - சுருக்கம், குறுகிய தன்மை
கூற்று - எமன்
கேளிக்கை - களியாட்டம்
கொடை - கோயில் விழா
கொண்கன் - கணவன்
கொத்தளம் - அரண், கோட்டை மதில்
கொம்மை - இளமை, திரட்சி
கொழுமடல் - பற்றுக்கோடு
கோடல் - கொள்ளல்
கோலோச்சுதல் - ஆட்சிபுரிதல்
சஞ்சிகை - புத்தகம், இதழ்
சதுக்கம் - சதுரம், சந்திப்பு
சால் - உழவுசால், நீர்ச்சால்
சீர் - சிறப்பு, ஒழுங்கு
சூத்திரம் - இலக்கணம், சூத்திரம்
சூன்யம் - வெற்றிடம், பூஜ்யம்
செவ்வி - அழகு
சேமம் - இன்பம், காவல்
தசாப்தம் - பத்து
தணிக்கையர் - கணக்கு சரிபார்ப்பவர்
தணியா - அடங்கா
தருணம் - நேரம்
தனம் - செல்வம்
தாட்டியம் - செருக்கு, பெருமை
திண்ணம் - உறுதி
திரிவர் - அலைவர்
திரு - செல்வம்
துஞ்சாத - உறங்காத
துருவி - நுணுகி ஆராய்ந்து

தெவ்வம் - பகை
தெள்ளிதின் - தெளிவாக
தொழுவர் - வணங்குவர்
நண்ணுதல் - அணுகுதல், அடைதல்
நலிய - மெலிய
நிவாரணி - ஒழிப்பது, விடுவிப்பது
நீர்மை - ஒழுக்கம், நீர்த்தன்மை
நுண்ணோட்டம் - நுட்பம்
நுதி - நுனி, முனை
நேத்திரம் - கண்
நேயம் - விருப்பம், ஆர்வம்
பகடு - எருது
பட்சணம் - உணவு
பதுமவியூகம் - போர் அணிவகுப்பு
பனிப்ப - நடுங்க, குளிர
பாடு - துன்பம்
பாதகம் - துரோகம்
பித்தன் - புத்தி சுவாதீனம் இல்லாதவன்
பிரயோகம் - செலுத்திப்பார்த்தல், பொருத்திப்பார்த்தல்
பிரயோஜனம் - பயன்
பீடித்தல் - துன்புறுத்தல்
புக்கு - புகுந்து
புடைக்கும் - வீங்கும்
புரை - குற்றம், வீடு
புலத்தல் - ஊடுதல், பிணங்குதல்
புனல் - நீர்
புனைதல் - அழகு செய்தல்
புஜக்கட்டை - தோள் கட்டை
பெயல் - பெய்தல், மழை
பேதாய் - பேதையே, பெண்ணே
பேரிடர் - பெருந்துன்பம்
பொதியில் - பொதிகைமலை
மகசூல் - விளைச்சல்
மடந்தை - பெண்
மடமை - அறியாமை
மதி - அறிவு, சந்திரன்
மருட்சி - மயக்கம்
மல்க - பெருக, நிறைய
மாசற்ற - குற்றமற்ற
மாரி - மழை
மாவடு - மாம்பிஞ்சு, ஊறுகாய்
முசுண்டை - ஒருவகைச் செடி
முண்டகம் - தாமரை
மூர்க்கம் - கடுமை
வஞ்சம் - வஞ்சனை
வறியர் - வறியவர், ஏழை
வன்மம் - கடினம்
வியல் - அகலம், பரப்பு
விருட்சம் - மரம்
வில்லங்கம் - வழக்கு, தடை, துன்பம்
விவாதம் - தர்க்கம், சொற்போர்
விழைவது - விரும்புவது
விளிம்பு - ஓரம், கரை
வீர்யம் - வலினம்
வெறியர் - வெறிபிடித்தவர்
வேதியன் - வேத நெறியினன்
வேழம் - யானை
ஜீவிகள் - உயிரிகள்
ஜெகம் - உலகம்